March 2024

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
15th
ANNIVERSARY



தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
ANNIVERSARY
15 YEARS
ANNIVERSARY
THANK YOU

# ஐ தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

March 2024 — சுவடி — 14 — ஓலை — 1





## வணக்கம் பல

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்! இறுதியில் தர்மமே வெல்லும்!' தர்மத்தை அதர்மம் வெல்லாது என்பது எப்படி சாத்தியமானதோ, அது போலத்தான் எப்பேற்பட்ட வல்லமைமிக்க அதிகாரம் ஒருவர் கையில் இருந்தாலும், உண்மையையும் அன்பையும் எதிர்கொண்டு அந்த அதிகாரம் உறுதியான நிலையான வெற்றியைப் பெற்றுவிட முடியாது! அப்படிப் பெறுகின்ற வெற்றி யாவும் தற்காலிகமானதே! உலகிலேயே வலிமைமிக்கதாக நம்பப்படுவது அதிகாரம் என்ற ஒரு மாய பிம்பம்தான்! ஒரு நாட்டின் அதிகாரம் தன்னிடம் இருக்கிறது என்பதற்காக உண்மையின் குரல்வளையை நசுக்கும் வேலையை அவ்வப்போது அதிகாரத்தில் இருப்பவர்கள் செய்து கொண்டிருக்கின்றனர். அதிகாரம் என்ன சிலப்பதிகாரமா என்றென்றும் நிலைத்திருப்பதற்கு? உண்மையை உணராமல் ஆடுகின்ற ஆட்டம் முடியும்போது, அங்கே அன்பும் உண்மையும் உயர்ந்து எழும்பி தன் பேருருவை காட்டி நிற்கும்! மாவீரர்கள் மரணிப்பதில்லை! ஆட்சியாளர்களுக்கு எதிராகக் குரல் கொடுத்த போராளியின் வாழ்க்கையை முடித்து விட்டது தற்காலிக வெற்றி! உண்மை ஒருபோதும் ஒழிந்தே விடுவதில்லை! இதனைக் கடந்தகாலமும் மெய்ப்பித்திருக்கிறது. எதிர்காலமும் மெய்ப்பிக்கக் காத்திருக்கிறது.

'அய் தமிழ்' முகப்பை அலங்கரிக்கிறவர் தமிழ்த் திரையுலகின் ஜாம்பவான்களில் உயர்ந்த பண்புமிக்க ஒருவர். அழுத்தமான பங்களிப்பைத் திரையுலகத்திற்கு தந்து சென்றிருக்கிறார். திரையில் அவர் காட்டிய முகம் எப்படி இருந்தாலும், வாழ்வின் அவரது அசல் முகம் எப்படி இருந்தது என்பதனைக் காட்டும் விதமாக அவருக்குச் சிறப்பு சேர்த்து மகிழ்கிற 'அய் தமிழ்' இதழ், வெற்றிகரமாக 15—வது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது.

கடந்த 14 ஆண்டுகளில் எத்தனையோ தமிழ் இலக்கியத் தரவுகளையும், நிகழ்காலச் சுவடுகளையும், கல்வெட்டுகள்போல கதை, கவிதை, கட்டுரைகள் எனச் சுமந்து வளர்ந்து கொண்டிருக்கும் நமது 'அய் தமிழ்', தமிழ்கூறு நல்லுலகில் தனது இருப்பையும், இலக்கியக் கடமையையும் இன்னும் பல ஆவணமான வரலாற்றுச் செய்திகளையும் வழங்கித் தொண்டாற்றி வருகிறது. இந்த வெற்றிப் பயணம் தொடர்ந்திட வேண்டும் எனும் விழைவையும் நம்பிக்கையையும் வேண்டுதலையும் முன்வைத்து, அனைத்து நல்லுள்ளங்களின் ஆதரவுக்கு நன்றியையும், வணக்கங்களையும் முன்வைக்கின்றோம்! மலர்கின்ற இம்மாத இதழை வழமைபோல் வரவேற்று வாசியுங்கள்!... நேசியுங்கள்!...

நேசப்பகிர்தலுடன்

**ஆசிரியர் குழு**

## உள்ளே...





**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*


*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## உள்ளே


- என்றும் எல்லைகள் தாண்டி!
- ஆள் குறைப்பு நிதி சேர்ப்பு
- தமிழே தமிழே
- வில்லாதி வில்லன் சாமி!
- சேரமான் கனவு
- தல வலம்
- அறிவோம் தமிழர் பெருமை
- சிவகாமியின் சபதம்
- யோகா யோகம்!
- மருத்துவ தமிழ்
- ஏன் மறந்தோம்!

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




THANK YOU

# என்றும் எல்லைகள்

## ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னி சிறையில் மரணம்

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னி சிறையில் அடைக்கப்பட்டு இருந்த நிலையில் மரணம் அடைந்தார். அவருக்கு வயது 47. இவர், புதினை கடுமையாக எதிர்த்தவர் என்பது கவனிக்கத்தக்கது.



அலெக்ஸே நவால்னி ரஷ்ய தலைநகரான மாஸ்கோவுக்கு மேற்குப் பகுதியில் உள்ள பியுடன் எனும் கிராமத்தில் 1976ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் தேதி பிறந்தவர். இவர் தனது சட்டபடிப்பை 1998இல் மாஸ்கோவில் உள்ள சட்டப் பல்கலைக் கழகத்தில் முடித்தார்.

மோசடி, நீதிமன்ற அவமதிப்பு, அறக்கட்டளை மூலமாக முறைகேடாக பணம் பெற்றது, தீவிரவாதத்தை தூண்டுதல் மற்றும் நிதியளித்தல், சட்டவிரோத தன்னார்வ தொண்டு நிறுவனத்தை உருவாக்குதல், நாஜிக் கொள்கைகளுக்கு புத்துயிர் கொடுத்தல் மற்றும் ஆபத்தான செயல்களுக்கு குழந்தைகளை தூண்டுதல் என்ற பல்வேறு வழக்குகளில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார் அலெக்ஸி நவல்னி. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் கடைசியாக 19 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதன்படி, ரஷ்யாவின் கார்ப் நகரத்தில் உள்ள ஆர்க்டிக் சிறையில் நவல்னி அடைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சிறையில் வாக்கிங் சென்ற நவல்னி திடீரென மயங்கி விழுந்து சுயநினைவை இழந்ததாகவும், இதன்பின் மருத்துவர்கள் முதலுதவிக்கு பின் ஆம்புலன்ஸில் அழைத்துச் செல்லப்பட்டதாகவும், என்னும் சிகிச்சை பலனளிக்காததால் மரணமடைந்தாகவும் ரஷ்ய சிறைத் துறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது. நவல்னியின் மரணம் குறித்து ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்

# தாண்டி!

அந்நாட்டு செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

யார் இந்த அலெக்ஸி நவல்னி? — சமீபத்திய ஆண்டுகளில் உலகெங்கும் அரசியல் வட்டாரங்களில் அதிகம் அடிபட்ட பெயர்களுள் ஒன்றுதான் அலெக்ஸே நவல்னி. ‘எதிர்கால ரஷ்யா’ என்ற அரசியல் கட்சியின் தலைவர். வழக்கறிஞர், ஊழலை — அதிலும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் செய்துவருவதாக நம்பப்படும் ஊழலை தீவிரமாக எதிர்த்தவர்.



எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான இவர், ரஷ்ய நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டும், ஊழல் நடவடிக்கைகளை ஒடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தவர். ரஷ்யாவில் மக்களுக்கிடையே இவருக்கு வளர்ந்துவரும் செல்வாக்கு காரணமாகவும், புதினின் கடுமையான ஒடுக்குமுறைகளுக்கு அஞ்சாமல் நாட்டில் ஊழலுக்கு எதிராகப் பெரும் போராட்டங்களைத் தொடர்ந்ததால் உலக அளவில் பேசப்பட்டவர்.

நவல்னிக்கு யூடியூபில் 60 லட்சத்துக்கு மேற்பட்டும் ட்விட்டரில் 20 லட்சத்துக்கு மேற்பட்டும் ஆதரவாளர்கள் இருப்பது அவருடைய செல்வாக்கைக் காட்டுகிறது. இவ்விரு சமூக ஊடகங்களைப் பயன்படுத்திதான் ரஷ்ய அரசின் ஊழல்கள் தொடர்பான ஆதாரங்களை அவர் வெளிப்படுத்தினார். இதைப் புதினால் தாங்கிக்கொள்ள முடியாததால் அவரைச் சிறையில் அடைத்தார் என்று கூறப்படுவது உண்டு.

ரஷ்யாவை இப்போது புதினின் ‘ஐக்கிய ரஷ்யா கட்சி’ ஆள்கிறது. “திருடர்களையும் சதிகாரர்களையும் கொண்டதுதான் ஐக்கிய ரஷ்ய கட்சி” என்று 2011—ல் அளித்த வானொலிப் பேட்டியில் அறிவித்தார் நவல்னி. அப்போது முதலே அவருக்கும் புதினுக்கும் பகைமை ஏற்பட்டுவிட்டது. நவல்னி தொடங்கிய ‘ஊழலுக்கு எதிரான அறக்கட்டளை’க்கு (எஃப்.பி.கே) மக்களிடையே ஆதரவு அதிகம்.

ரஷ்யாவின் உயர் அதிகாரிகள், அரசியலர்கள் சம்பந்தப்பட்ட ஊழல்களை ஆவணபூர்வமாக அம்பலப்படுத்தினார் நவல்னி. அப்போது பிரதமர் பதவியில் இருந்த திமித்ரி மெத்வதேவ் தொடர்பான ஆவணங்களை வெளியிட்ட பிறகு, நாடு முழுவதும் மக்கள் கிளர்ந்தெழுந்து போராடினார்கள். ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்திய நவல்னி மீதே ரஷ்ய அரசு 2013 ஜூலையில், பணத்தை



முறைகேடாகக் கையாடல் செய்ததாகக் கூறி வழக்குத் தொடுத்து, தண்டனையும் பெற்றுத்தந்தது.

ஆனால், இந்த ஆணை நிறைவேற்றப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையில்தான் மாஸ்கோ நகர மேயர் பதவிக்கான தேர்தலில் நவல்னி போட்டியிட்டு 27% வாக்குகளுடன் இரண்டாம் இடத்துக்கு வந்தார். புதின் நிறுத்திய செர்கி சோபியானின் வெற்றிபெற்றார். இருப்பினும் நவல்னிக்கு மக்களிடம் இருந்த செல்வாக்கு இதன் மூலம் வெளிப்பட்டது.

தொடர் ஆட்சி காரணமாக புதினின் செல்வாக்கு மக்களிடையே உண்மையில் கூடவில்லை. ஆனால், எதிர் வரிசையில் செல்வாக்குள்ள அல்லது துணிச்சல் மிக்க தலைவர்கள் யாரும் தோன்றிவிடாதபடிக்கு புதின் தொடர்ந்து அவர்களை வேரறுத்துக்கொண்டே இருக்கிறார் என்று கூறப்படுகிறது. நவல்னி மட்டுமே தனது கல்வி, பணி அனுபவம் காரணமாக புதினின் ஊழல்களை ஆதாரபூர்வமாகவே நிரூபித்தார். இதனால், நவல்னியை எல்லா வகையிலும் தீர்த்துக்கட்டவே புதின் பார்க்கிறார் என்று கூறப்பட்டது.

நிதி கையாடல் வழக்கு: 2014—ல் நவல்னி மீது மேலும் ஒரு நிதி கையாடல் வழக்கு போடப்பட்டது. இவ்விரண்டும் அரசியல் உள்நோக்கம் கொண்டவை. மேற்கொண்டு தேர்தல்களில் அவர் போட்டியிடக் கூடாது என்பதற்காகப் போடப்பட்டவை. 2018—ல் நடைபெறவிருந்த அதிபர் தேர்தலில் போட்டியிட நவல்னி தயாரானார். 2016 டிசம்பரிலேயே பிரச்சாரத்தைத் தொடங்கினார். புதினின் ஆணைக்குக் கட்டுப்பட்ட ரஷ்ய தேர்தல் ஆணையமோ, நவல்னி தேர்தலில் போட்டியிடத் தடைவிதித்தது. அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டார். உச்ச நீதிமன்றமும் அவரது மனுவை ஏற்காமல் நிராகரித்தது.

இதையடுத்து, புதினின் ‘ஐக்கிய ரஷ்யா கட்சி’க்குக் கிடைக்கக்கூடிய இடங்களைக் குறைக்க, வியூக அடிப்படையில் வாக்களிக்கும் முறையை வாக்காளர்களிடம் நவல்னி பரப்பினார். அதன்படி ‘ஐக்கிய ரஷ்யா கட்சி’யைத் தவிர, வேறு எந்தக் கட்சியின் வேட்பாளர்களுக்கும் மக்கள் வாக்களிக்கலாம். இது புதினுக்குக் கோபத்தை அதிகப்படுத்தியது.

கடந்த 2020—ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் டாம்ஸ்க் நகரிலிருந்து மாஸ்கோவுக்கு விமானத்தில் செல்லும்போது அலெக்ஸி மயங்கி விழுந்தார். இதனைத் தொடர்ந்து அவர் ஜெர்மனியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அலெக்ஸி நவல்னிக்கு விஷம் வைக்கப்பட்டிருப்பதை ஜெர்மனி அரசு உறுதிப்படுத்தியது.

நரம்புகளைப் பாதித்து செயலிழக்க வைக்கும் நோவிசோக் என்ற விஷம் அவர் மீது பயன்படுத்தப்பட்டது தெரியவந்தது. ஜெர்மனியின் பெர்லின் நகரில் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஒரு மாதத்துக்குப் பிறகு அவர் மருத்துவமனையிலிருந்து வெளியே வந்தார். தன்னைக் கொல்ல நடந்த முயற்சிக்கு புதின்தான் காரணம் என்று குற்றம்சாட்டினார். ஃபெடரல் செக்யூரிட்டி சர்வீஸ் (எஃப்.எஸ்.பி) என்ற ரஷ்ய

அரசின் உளவு அமைப்புதான் இதைச் செய்தது என்பது தெரியவந்தது. இதையடுத்து, ரஷ்ய உயர் அதிகாரிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் தடைவிதித்தன.

2021 ஜனவரி 17—ல் நவல்னி மீண்டும் ரஷ்யாவுக்குத் திரும்பினார். பரோல் விதிமுறைகளை மீறிவிட்டார் என்று குற்றம்சாட்டி, அவரை மீண்டும் சிறையில் அடைந்தது ரஷ்ய அரசு. புதினின் அரண்மனை என்ற பெயரில் அவரைப் பற்றிய ஊழல்களை அம்பலப்படுத்துவதாகக் கூறி மேலும் ஒரு ஆவணம் வெளியானது. இதையடுத்து, மக்கள் மீண்டும் நாடு முழுக்கப் புதினுக்கு எதிராகப் பெருந்திரளாக அணிவகுத்துப் போராட்டம் நடத்தினர்.



இதையடுத்து, அதே ஆண்டு பிப்ரவரி 2—ல், ஏற்கெனவே ஒரு வழக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தண்டனைத் தீர்ப்புக்கு உயிர் கொடுத்து, அவரை மீண்டும் சிறையில் அடைத்தது அரசு. விளாடிமிர் ஒப்ளாஸ்ட் என்ற இடத்தில் இரண்டரை ஆண்டு கட்டாய உடலுழைப்புச் சிறைவாசம் அவருக்கு விதிக்கப்பட்டது. சிறையில் அடைக்கப்பட்ட பிறகு மீண்டும் கொடுமைப்படுத்தப்பட்டார் நவல்னி.

மனசாட்சியின் கைதி என்று அவரை வர்ணித்த ஆம்னஸ்டி இன்டெர்நேஷனல் அமைப்பு, அவருக்கு அங்கீகாரம் அளித்தது. மனித உரிமைகளைக் காப்பதற்காகத் தொடர்ந்து போராடும் அவருக்கு 2021—ல் சகரோவ் விருது வழங்கப்பட்டது.

ஜெர்மனியில் நவல்னி இருந்தபோது, ரஷ்ய அரசு அவருடைய ஆதரவாளர்களைக் கைது செய்வது, மிரட்டுவது என்று பல வழிகளிலும் அச்சுறுத்தியது. இதனாலேயே 2021 ஜனவரி 17—ல் ரஷ்யா திரும்பினார் நவல்னி. ரஷ்ய அரசிடம் முறையாக அனுமதி பெறாமல் வெளிநாடு சென்றதற்காகவும் ஏற்கெனவே குற்ற வழக்கில் கைதாகியிருந்தபோது விதித்த நிபந்தனைகளை மீறி வெளிநாட்டுக்கு அரசுக்கு அறிவிக்காமலேயே சென்றதற்காகவும் அவர் கைதுசெய்யப்படுவதாகத் தெரிவித்தும் அவரை விமான நிலையத்திலேயே கைதுசெய்து சிறையில் அடைத்தனர்.

நவல்னியைக் கைது செய்ததைக் கண்டித்து ரஷ்யாவில் மாபெரும் எதிர்ப்பு ஊர்வலங்கள் நடந்தன. ஜனநாயகத்தை மீட்கவும் ஊழலை ஒழிக்கவும் தொடர்ந்து பாடுபடும் அவரை ஜனநாயகவாதிகள் ஆதரிக்கின்றனர். புதினுக்கு அவர் பெரிய தலைவலியாக இருந்தார். புதின் செய்ததாகக் கூறப்படும் ஊழலை மட்டுமல்ல... சர்வாதிகாரப் போக்கையும் அவர் எதிர்த்தார். அரசியல் சித்தாந்தங்களில் அவர் மிதவாதியாகவும் நடுநிலையாளராகவும் இருந்தார். இதனால், அவர் புதிதாகத் தொடங்கிய கட்சியைக்கூட சட்டப்படி பதிவுசெய்ய விடாமல் தொடர்ந்து தடைகளை ரஷ்ய அரசு ஏற்படுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

நவால்னி 2008ஆம் ஆண்டுதான் ரஷ்ய அரசியலில் பெரிய சக்தியாக வளரத் தொடங்கினார். ஏனெனில் ரஷ்யாவின் ஒரு சில பெரிய மாகாணங்களில் முறைகேடுகள், ஊழல்கள் நடந்தது குறித்து அவர் தனது இணையப் பக்கத்தில் எழுதி வந்தார். அவருடைய ஓர் உத்தி என்னவெனில், பெரிய எண்ணெய் நிறுவனங்களில் ஒரு சிறு பங்குதாரராக இணைந்துகொள்வார். பின்னர் மேலதிகாரத்தில் உள்ளவர்களைக் கேள்விக்கு உள்ளாக்குவார். இவர் ரஷ்யாவில் 2011இல் நடந்த போராட்டங்கள் மூலம் பிரபரலமானார். அப்போது தேர்தலில் முறைகேடுகள் நடந்திருப்பதாகக் கூறி தொடர்ந்து கேள்வி எழுப்பினார். அதனால் ரஷ்யா கடந்த சில தசாப்தங்களில் சந்திக்காத மிகப்பெரிய போராட்டங்களைச் சந்தித்தது. இதைத் தொடர்ந்து நவால்னி கைது செய்யப்பட்டபோது அது இன்னும் அவரை பிரபலமாக்கியது.

மோசடி வழக்கு என்ற பெயரில் அவர் 2013 ஜூலை மாதம் சிறையில் அடைக்கப்பட்டபோது அவருக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருந்தது. அது




அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாவே பார்க்கப்பட்டது.ஆனால், அதே ஆண்டில் அவர் மாஸ்கோ மேயர் தேர்தலில் பிரசாரம் செய்ய அனுமதிக்கப்பட்டார். அந்தத் தேர்தலில் புதின் கூட்டாளி செர்கே சோபியானியிடம் தோற்றார். அதற்குக் காரணாமாக இவருக்கு தொலைக்காட்சி ஆகியவற்றைப் பயன்படுத்த அனுமதி மறுக்கப்பட்டது கூறப்பட்டது. வெறும் இணையதளம் மற்றும் வாய்வழிப் பிரசாரமே அவர் செய்ய முடிந்தது. எனவே இவரது ஆதரவாளர்கள் எதிரணியின் வெற்றி ஒரு நாடகம் என்று கூறினார்கள். புதின் மீது கடுமையான விமர்சனம் நவால்னி தொடர்ந்து புதின் கட்சி மீது ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வந்தார். ரஷ்யாவின் ரத்தத்தை உறிஞ்சி எடுப்பவர் என்று அதிபரை குற்றம் சாட்டினார்.

இவர் எளிமையான ரஷ்ய மொழியில் பேசியதால், வேகமாக ரஷ்ய இளைஞர்களின் குரலாக உருவெடுத்தார். சமூக ஊடகங்களில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தார். ரஷ்யாவின் செல்வாக்கான பிரபலங்களின் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அவரது யூட்யூப் சேனலில் வீடியோக்கள் வெளியிடப்பட்டன. ஒவ்வொரு வீடியோவும் லட்சக்கணக்கான மக்களால் பார்க்கப்பட்டது. அதில் குறிப்பாக இவரது ஊழலுக்கு எதிரான குழு, புதினின் அரண்மனை குறித்து ஒரு வீடியோ வெளியிட்டிருந்தது. அதில், புதினின் பணக்கார நண்பர்கள் அவருக்கு அரண்மனை ஒன்றைப் பரிசளித்ததாக குற்றம் சாட்டப்பட்டது. அந்த வீடியோ மட்டும் 100 மில்லியன் பார்வைகளைப் பெற்றது.ஆனால் அதை ஒரு போலி விசாரணை வீடியோ என்றும், அந்த வீடியோ போரடிப்பதாகவும் புதின் கூறினார். மேலும் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளையும் மறுத்திருந்தார். அதைத் தொடர்ந்து யுக்ரேன் போர், ரஷ்ய அதிகார மட்டத்தில் நடைபெற்று வரும் ஊழல் மற்றும் அதனோடு அதிபர் புதினுக்கு உள்ள தொடர்பு என அரசு என அதிபரை தீவிரமாக விமர்சிப்பவராகப் பார்க்கப்பட்டார் நவால்னி.

இந்த நிலையில் பலமுறை அவர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அப்படி 2020ஆம் ஆண்டு அவர் மீது நடத்தப்பட்ட நச்சுத்தாக்குதலில் அவர் கிட்டத்தட்ட உயிரிழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். கடந்த 2020ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20ஆம் தேதி, சைபீரியாவில் இருந்து மாஸ்கோவுக்கு விமானத்தில் வந்தபோது திடீரென நவால்னி மயங்கி விழுந்தார். ஓம்ஸ்க் நகரில் விமானம் தரையிறக்கப்பட்டு அவசர உதவி விமானத்தில் ஜெர்மனி அழைத்து வரப்பட்ட நவால்னிக்கு அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் அவர் நச்சு ரசாயன தாக்கத்துக்கு ஆளானதாகக் கண்டறியப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பின்னர் ஜெர்மானிய இதழான டெர் ஸ்பீகலுக்கு நவால்னி அளித்த பேட்டியில், நோவிசோக் எனப்படும் நரம்பு மண்டலத்தைத் தாக்கக்கூடிய ரசாயன தாக்குதலுக்குத் தாம்

ஆளாக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டினார். இவரது கூற்றானது பிரான்ஸ் மற்றும் ஸ்வீடனிலுள்ள ஆய்வகங்களில் நடத்தப்பட்ட பரிசோதனையின் மூலம் உறுதி செய்யப்பட்டது. நோவிசோக் நச்சு ரசாயனத்தைப் பயன்படுத்துவதற்கான உத்தரவை ரஷ்யாவின் மூன்று உளவு அமைப்புகளின் தலைவர்கள் மட்டுமே பிறப்பிக்க முடியுமென்றும், அவர்கள் அனைவருமே புதினுக்கு கீழே பணிபுரிபவர்கள் என்றும் அவர் கூறினார். ஆனால், நவால்னியின் நேரடி குற்றச்சாட்டு குறித்துப் பதிலளித்த ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதினின் செய்தித்தொடர்பாளர், நோவிசோக் நச்சு ரசாயன தாக்குதலுக்கு நவால்னி உட்படுத்தப்பட்டதற்கான ஆதாரம் எதுவும் இல்லையென்று தெரிவித்தார்.



ரஷ்யாவில் அவர் எந்நேரமும் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்ற நிலையிலேயே இருந்தார். அவர் மீது நடத்தப்பட்ட நோவிசோக் நச்சுத் தாக்குதலுக்கு முன்பாகவே, பல முறை தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தார். அடிக்கடி கைதும் செய்யப்பட்டார். அவர் மீது பலமுறை ரசாயன தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஒருமுறை அவர் மீது கிரீன் டை தாக்குதல் நடத்தப்பட்டது. அதனால் கண்களில் கடும் எரிச்சலை அனுபவித்தார் நவால்னி. கடந்த 2013ஆம் ஆண்டே மோசடி வழக்கு ஒன்றில் இவருக்கு 5 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், யாரும் எதிர்பாராத வகையில் தேர்தலில் பங்கேற்பதற்காக அவர் சிறையிலிருந்து வெளியே அனுப்பப்பட்டார். இந்தத் தண்டனை நிறுத்தத்திற்கான வழக்கு தொடர்ந்து நடந்து வந்த நிலையில், அதன் விதிமுறைகளை மீறியதாக அவர் மீது மீண்டும் குற்றம் சுமத்தப்பட்டது. அதாவது 2020 காலகட்டத்தில் வழக்கமான காவல்நிலைய வருகையை அவர் கடைபிடிக்கவில்லை எனக் கூறி மீண்டும் அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதற்கு எதிர்வாதமாக நவால்னியின் வழக்கறிஞர்கள், அவர் அந்த நேரத்தில்தான் நச்சுத் தாக்குதலுக்கு உள்ளாகிசிகிச்சையில் இருந்தார் என்பதை முன்வைத்தனர். ஆனாலும், 2021ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் தேதி மாஸ்கோ திரும்பிய உடனேயே அவர் கைது செய்யப்பட்டார். இந்நிலையில், மோசடி மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளில் நவால்னி மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதாகக் கூறி 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் நவால்னிக்கு சிறைத் தண்டனையை 9 ஆண்டுகளாக அதிகரித்து ரஷ்ய நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.பின்னர், தீவிரவாத அமைப்புகளை உருவாக்கி அவற்றுக்கு நிதியுதவி செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் கடந்த 2023ஆம் ஆண்டு நவால்னிக்கு கூடுதலாக 19 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த பத்து ஆண்டுகளில் ரஷ்யாவின் மிக முக்கியமான தலைவராகக் கருதப்பட்ட அலெக்ஸி நவால்னி, இறுதியாக ஆர்க்டிக் வட்டத்திலுள்ள ஆர்டிக் பீனல் காலனி சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.இந்நிலையில் அவர் சிறையிலேயே இறந்துவிட்டதாக, சிறைத்துறை செய்தியை மேற்கோள் காட்டி, ரஷ்ய செய்தி முகமைகள் செய்தி வெளியிட்டு வருகின்றன. இதுகுறித்து யமலோ—நெனெட்ஸ் பிராந்தியத்தில் உள்ள சிறைத்துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன்படி, வெள்ளிக்கிழமை நடைப்பயிற்சிக்குச் சென்று வந்த நவால்னி உடல் நலமற்றுக் காணப்பட்டதாகவும், திடீரென்று சுயநினைவற்று விழுந்து விட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும்,அவசர சிகிச்சை மருத்துவர்கள் வந்து உடனே சிகிச்சையளித்தும், பலனின்றி அவர் இறந்துவிட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.




அவரது மரணத்திற்கான காரணங்களைக் கண்டறிய மருத்துவர்கள் முயன்று வருகிறார்கள் என சிறைத்துறை கூறியுள்ளதாக, டாஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நவால்னியின் “துயர்மிகு மரணத்திற்கு” ரஷ்ய ஆட்சியே “முழுப் பொறுப்பு” ஏற்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கருதுவதாக அதன் தலைவர் சார்லஸ் மைக்கேல் தெரிவித்துள்ளார். அவர் தனது எக்ஸ் பக்கத்தில், நவால்னி “சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றின் மதிப்புகளுக்காகப் போராடினார்” என்றும் அவரது லட்சியங்களுக்காகத் தனது “இறுதி தியாகத்தை” செய்தார் என்றும் பதிவிட்டுள்ளார்.

அவரது குடும்பத்தாருக்குத் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாகவும், “போராளிகள் இறக்கலாம், ஆனால், சுதந்திரத்திற்கான போராட்டம் ஒருபோதும் முடிவுக்கு வராது,” என்றும் கூறியுள்ளார்.

அலக்ஸே நவால்னியின் மரணம் குறித்த தனது எக்ஸ் பதிவில், “ரஷ்ய அடக்குமுறைக்கு எதிராக” நவால்னி “தனது உயிரைக் கொடுத்துள்ளதாக” பிரெஞ்சு வெளியுறவு அமைச்சர் ஸ்டீபன் செஜோர்னே குறிப்பிட்டுள்ளார். “தண்டனை காலனியில் அவரது மரணம் விளாதிமி புதினின் ஆட்சியில் உள்ள எதார்த்தத்தை நமக்கு நினைவூட்டுவதாகவும்” அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள நவால்னியின் மனைவி யூலியா, “இந்தச் செய்தியை நம்புவதா என்று தெரியவில்லை. இதுவரை அரசுத் தரப்பில் இருந்து மட்டுமே செய்திகள் வந்துள்ளன. புதின் அரசை நம்மால் நம்ப முடியாது. இந்தச் செய்தி மட்டும் உண்மை என்றால் இதற்கும், ரஷ்யாவிற்கு செய்தவற்றுக்கும் புதின் மற்றும் அவரது கூட்டாளிகளே பொறுப்பேற்க வேண்டும்” என்று கூறியுள்ளார்.

ரஷ்யாவில் அதிபர் புதினை கடுமையாக விமர்சித்து வந்த எதிர்க்கட்சித் தலைவர் அலக்ஸெ நவால்னியின் மரணம் சர்ச்சையாகியிருக்கிறது. தீவிரவாத அமைப்பை நிறுவி நிதியுதவி செய்தல் என்பது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளில் சிறைத்தண்டனை பெற்றிருந்த அவர், ஆர்க்டிக் வட்டார சிறையில் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

நவால்னி மரணத்திற்கு ரஷ்ய அதிபர் புதினே காரணம் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பகிரங்கமாக குற்றம்சாட்டி உள்ளார். நவால்னிக்கு நடந்தது புதினின் மிருகத்தனத்திற்கு கூடுதல் சாட்சி என்று விமர்சித்துள்ள பைடன், அனைவருக்குமான சட்டத்தின் ஆட்சியை ரஷ்யாவில் கட்டியெழுப்ப நவால்னி அர்ப்பணிப்புடன் இருந்ததாக தெரிவித்துள்ளார்.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




# சொல்றாங்க... சொல்றாங்க...



"ராணுவத்தினரைப் போல் நாட்டுக்காக போராடும் விவசாயிகள்!"

**ராகுல் காந்தி**

(கொஞ்சம் நல்லா பார்த்து சொல்லுங்க சார்! அங்கே விவசாயிங்க கூட போராடறதுக்கு இராணுவமே வந்து நிக்கிற மாதிரி இருக்கு!)



உணவுப் பொருள்கள் விலை உயர்வால் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் சவால்!"

**ரிசர்வ் வங்கி ஆளுநர் தாஸ்**

(பலே ஆள் சார் நீங்க! அரசாங்கம் சரியில்லைன்னு சொல்ல முடியாம இப்படி சுத்தி வளைச்சு சொல்றீங்க!)



"தேர்தலுக்குப் பிறகே 'இண்டியா' கூட்டணி வலிமை பெறும்"

**திருமாவளவன்**

(அடடே! ஜெயிச்சவங்க பின்னாடி ஓடிப் போயி ஒட்டிக்குவோம்கிறதை இப்படி வெளிப்படையாவே சொல்லிட்டாரே!)



"இந்தியா கூட்டணி ஏற்கனவே முடிந்துவிட்டது!"

**நிதிஷ் குமார்**

('முடித்து வைப்பதற்காகவே முடிச்சை அவிழ்த்துக் கொண்டு போனவர்'னு உங்க மேல 'கூட்டணி' குற்றச்சாட்டு வைக்கிறதே அதற்கு என்ன பதில்?)

# ஆள் குறைப்பு

### கூகுள், அமேசான் போன்ற பெரு நிறுவனங்கள் அதிக லாபம் ஈட்டினாலும் ஆள் குறைப்பு செய்வது ஏன்?

பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் இதுவரை இல்லாத அளவிலான லாபங்களை ஈட்டிய போதிலும் ஆள் குறைப்பு ஏன் தொடர்கதையாக உள்ளது?அமெரிக்க பங்குச் சந்தைகளை தீர்மானிக்கக் கூடியவை அந்த பெரு நிறுவனங்கள். வால் ஸ்ட்ரீட்டின் செல்ல நண்பர்கள். "மேக்னிஃபிசென்ட் 7" என்று அழைக்கப்படும் குழுவில் உள்ள தொழில்நுட்ப நிறுவனங்களின் விற்பனையும் லாபமும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. அவர்களின் மதிப்பும் கூட அதிகரிக்கின்றன.பிற துறையில் உள்ள நிறுவனங்களை விட, இந்த ஆண்டு 12% அதிகமாகவும், 2025 —ல் மற்றொரு 12% அதிகமாகவும் அவர்களின் விற்பனை இருக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கூகுளின் தாய் நிறுவனமான ஆல்ஃபபெட், ஆப்பிள், அமேசான், மெடா மற்றும் மைக்ரோசாஃப்ட் ஆகியவை கூட்டாக சுமார் 327 பில்லியன் டாலர் சம்பாதித்தன. இது கடந்த ஆண்டை விட 25.6% அதிகமாகும். இது, கொலம்பியா அல்லது சிலி நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒத்ததாகும். எனினும்கூட, டெஸ்லா மற்றும் என்விடியா ஆகியவற்றை உள்ளடக்கிய "மேக்னிஃபிசென்ட் 7" என்ற பிரத்யேக குழு, அதிக அளவிலான ஆட்குறைப்புகளை மேற்கொண்டு வருகின்றது. கடந்த ஆண்டும் இதே போன்ற ஆட்குறைப்பு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. ஜூலை 2023 மைக்ரோசாஃப்ட் தனது பணியாளர்களைக் குறைத்தது. Activision Blizzard ஐ $69 பில்லியனுக்கு வாங்குவதற்கான ஒப்பந்தத்தை முடிவு செய்த பிறகு, 2024 —ல் மேலும் 1,900 பேர் பணிநீக்கம் செய்யவுள்ளது.



அமேசான் நிறுவனத்திலும் இதேநிலை தான். கடந்த ஆண்டில் 9,000 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து, அதன் ட்விச் இயங்குதளத்தின் 35% பணியாளர்களையும், அமேசான் பிரைம்—ல் பணிபுரியும் 100 பேரையும் பணி நீக்கம் செய்யவுள்ளது. அதுபோதாதென்று, இந்த பிரத்யேக குழுவில் லேும் பல சிறிய நிறுவனங்கள் இணைந்துள்ளன. மொத்தத்தில், இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து ஒரே மாதத்தில் 122 தொழில்நுட்ப நிறுவனங்களில் இருந்து கிட்டத்தட்ட 32,000 தொழிலாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த தகவல் ராய்ட்டர்ஸ் பத்திரிகையால் மேற்கோள் காட்டப்பட்ட Layoffs.fyi என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இன்னும் 11 மாதங்கள் மீதம் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு PayPal நிறுவனத்தில் 2,500 பணியாளர்களும், Spotify நிறுவனத்தில் 1,500

# நிதி சேர்ப்பு

## கிறிஸ்டினா ஜெ.ஆர்காஸ்

பணியாளர்களும், eBay நிறுவனத்தில் 1,000 பணியாளர்களும், Snapchat நிறுவனத்தில் 500 பணியாளர்களும் நீக்கப்படவுள்ளனர். தொழில்நுட்பத் துறையில் நன்கு அறியப்பட்ட நிறுவனங்களின் நிலை இதுவே. 2000—ம் ஆண்டு மற்றும் அதற்கு அடுத்த ஓரிரு ஆண்டுகளில், இணையத்தின் எழுச்சி டாட்—காம் பபிளுக்கு வழிவகுத்தது. (இணையவழி நிறுவனங்களில் செய்யப்பட்ட அதிக முதலீடுகள் காரணமாக, பங்குச்சந்தை மதிப்புகள் அபரிமிதமாக உயர்ந்தன. இதுவே டாட்—காம் பபிள் (dotcom bubble) என்றழைக்கப்படுகிறது. )தற்போது நடைபெறும் ஆட்குறைப்பை டாட்காம் பபிளுடன் பலர் ஒப்பிட்டு வருகின்றனர்.

பிரபல நிதி நிறுவனமான ஜூலியஸ் பேயரின் தலைமை ஆய்வாளரான மாத்தியூ ராச்சேட்டரைப் பொறுத்தவரை, இந்த ஒப்பீடு சரியல்ல. ஏனெனில், ‘மெகா கேப்’ எனப்படும் நிறுவனங்களின் (200 பில்லியன் டாலருக்கும் அதிகமான சந்தை மதிப்பை கொண்ட நிறுவனங்கள்) பங்குகளின் மதிப்பு இன்னும் 2000 களின் நிலையை அடையவில்லை என்கிறார். “மேக்னிஃபிசென்ட் 7” நிறுவனங்கள் அதிக வருவாய் ஈட்டக்கூடியவை என்றும், இது




சிக்கல்கள் ஏற்பட்டால் உதவும் என்று பேயர் கூறுகிறார். எனவே இந்த இரண்டாவது அலை ஆட்குறைப்பின் பின்னணி என்ன? முக்கியமான 3 காரணங்கள் பார்க்கலாம்.

1. செயற்கை நுண்ணறிவு மற்றும் மூலோபாய மாற்றங்கள்—“தொழில்நுட்பத் துறையின் வரலாற்றில் பெரிய நிறுவனங்களின் எழுச்சி மற்றும் வீழ்ச்சி, அந்த துறையில் ஏற்படும் மாற்றங்கள், மற்றும் அடுத்த தலைமுறை நிறுவனங்களின் புதுமையான முயற்சிகள் காரணமாக ஏற்படும்”என்று முதலீட்டு ஆலோசனைகள் வழங்கும், ளிஞிஞிளி ஙிபிதி கிவி நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவு மேலாளர் பிரைஸ் ப்ருனாஸ் கூறுகிறார்.

டாட்காம் பபிளின் போது இதுதான் நடைபெற்றது. இந்த தசாப்தத்தில், செயற்கை நுண்ணறிவு (AI) மாதிரிகளின் வளர்ச்சி ஒரு புரட்சியாகும்.“உதாரணத்திற்கு மொழி சார்ந்த நிறுவனமான டியோலிங்கோவை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களில் சிலர் எழுத்தாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்கள். அவர்களுக்கு பதிலாக செயற்கை நுண்ணறிவு செயல்முறைகள் பயன்படுத்தப்படும்“ என்று குவார்க் வலைத்தளம் விளக்குகிறது.

செயற்கை நுண்ணறிவு வேகமாக செயல்படக் கூடியது. ஒருவர் 60 முதல் 90 நிமிடங்களில் எழுதுவதை, செயற்கை நுண்ணறிவு 10 நிமிடங்கள் அல்லது அதற்கும் குறைவான நேரத்தில் எழுதி முடிக்கும். இந்த ஆண்டின் தொடக்கத்தில், கோல்ட்மேன் சாக்ஸ் அறிக்கை ஒன்று, செயற்கை நுண்ணறிவு 30 கோடி முழுநேர வேலைகளுக்கு




சமமான வேலைகளை செய்யக்கூடும் என்று கூறியது ."நாங்கள் அதை 2000 களின் டாட்காம் பபிளின் போது பார்த்தோம். இடையூறுகள் எப்போதும் நிறுவனங்கள் தங்களை மறுகட்டமைக்க வழிவகுக்கின்றன" என்று eToro —ன் மூத்த சந்தை ஆய்வாளர் ஜேவியர் மோலினா கூறுகிறார்.

"ஒருபுறம், நிறுவனத்தின் உத்தியில் சில மாற்றங்கள் ஏற்படுவதையும், சில துறைகள் மூடப்படுவதையும் காண முடியும். மறுபுறம், செயற்கை நுண்ணறிவை நோக்கிய ஒரு நகர்வையும் காண்கிறோம். இது பல பணியிடங்கள் காணாமல் போவதற்கு காரணமாகிறது"என்கிறார் மோலினா.

2. 2022—ன் நினைவும் பாடங்களும்— 2023 ஆம் ஆண்டில் தொழில்நுட்பத் துறை 1,68,032 பேரை பணிநீக்கம் செய்தது. பிற துறைகளை ஒப்பிடும் போது, அதிக எண்ணிக்கையிலான ஆட்குறைப்பு தொழில்நுட்பத் துறையிலேயே நடைபெற்றது என்று சேலஞ்சர், கிரே & கிறிஸ்துமஸ் என்ற நிறுவனம் கூறுகிறது. கொரோனா பெருந்தொதொற்று காலத்தில், பல சிலிகான் பள்ளத்தாக்கு நிறுவனங்கள் ஆள் சேர்ப்பை அதிகரித்து, காற்று தொடர்ந்து தங்களுக்கு சாதகமாக வீசும் என்ற எண்ணத்துடன் தங்கள் வளர்ச்சித் திட்டங்களை விரிவுபடுத்தின. ஆனால் நிலைமைகள் மாறிய போது, 2022—ம் மற்றும் 2023—ம் ஆண்டில் ஆள் குறைப்பு தொடங்கின.



புதிய திட்டங்கள் தொடங்கப்படாமல் போனதற்கு மற்றொரு காரணம், பணவீக்கத்திற்கு பதிலளிக்கும் விதமாக அமெரிக்க பெடரல் ரிசர்வ் வட்டி விகிதத்தை உயர்த்தியதே. பல தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஆரம்ப நிலையில், நிறைய மூலதனம் தேவைப்படும். ஆனால், கடன் வாங்குவது இப்போது அதீத செலவினமாக மாறிவிட்டது. "சமீபத்திய வட்டி விகித உயர்வுகள் பல திட்டங்களை பாதித்துள்ளன. கடந்த காலங்களில் இந்த திட்டங்களில் முதலீடு செய்து, பின்னர் வளரவும் லாபத்தை அடையவும் முடியும்" என்று ஏ & ஜி நிதிகளில் டிஜிபி மதிப்பு நிதியின் மேலாளர் ஆண்ட்ரேஸ் அலெண்டே கூறுகிறார்."கடன் பெறுவது சிரமமானதால், முதலீடுகள் மிகவும் குறைந்துவிட்டன. இதனால் தொழில்நுட்ப திட்டங்கள் மேலும் முடங்கியுள்ளன "என்று அவர் மேலும் கூறுகிறார்.

3. தொழில்நுட்பத் துறையின் வளார்ச்சி பாதை — 200 பில்லியன் டாலருக்கும் அதிகமான சந்தை மதிப்பை கொண்ட 'மெகா கேப்' எனப்படும் நிறுவனங்கள் கூட, அதிக லாபம் என்ற முதலீட்டாளர்களின் கோரிக்கையை பூர்த்தி செய்ய செலவுகளை குறைத்துக் கொள்கின்றன. ஆனால் உண்மை என்னவென்றால், "தொழில்நுட்பத் துறையின் சுழற்சி பொதுவாக அப்படி தான் இருக்கும். திடீரென, ஆனால் வேகமாகவும், இருக்கும். விரைவில், இந்த நிறுவனங்கள் மற்றும் அதன் திட்டங்கள் மாற்றியமைத்து மீண்டும் புதுப்பிக்கப்படும். இதில் தப்பிப் பிழைப்பவை மீண்டும் மிகப்பெரிய வாய்ப்புகளை பெறலாம்." என்று அலண்டே விளக்குகிறார். புதிய சுழற்சிக்கான அறிகுறிகள் ஏற்கெனவே காண தொடங்கி விட்டன. இந்த சுழற்சி ஏற்படும் வரை தொழில்நுட்பத் துறையில் உள்ள சிரமங்கள் பிற துறைகளின் நுகர்வு மற்றும் முதலீட்டில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

சிறிய நிறுவனங்களில் உள்ள நிலைமகளையும் பெரிய நிறுவனங்களின் நிலைமைகலையும் ஒரே தட்டில் வைத்து பார்க்கக் கூடாது என்று நிபுணர்கள் ஒப்புக் கொள்கின்றனர். சிறிய நிறுவனங்களில் தங்கள் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காக சில முடிவுகள் எடுக்கப்படும். பெரிய அளவிலான மூலதனத்தைக் கொண்டு சிரமங்களை சமாளிக்கக் கூடிய பெரிய நிறுவனங்களின் முடிவுகளை சிறிய நிறுவனங்களுடன் ஒப்பிட முடியாது என்று கூறுகின்றனர்


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
15 Years
ANNIVERSARY
Thank You!

கட்டுரை

# தஞ்சை

## தமிழ்நாட்டில் காதலிக்காக ராஜேந்திர சோழன் கட்டிய 'காதல் சின்னம்'

இறந்த தனது காதல் மனைவிக்காக ஷாஜகான் கட்டிய தாஜ்மஹால் உலகின் காதல் சின்னமாக பார்க்கப்படுகிறது. காதல் என்றாலே தாஜ்மஹாலை பற்றி தான் எல்லோரும் பேசுகின்றோம்.ஆனால் தமிழ்நாட்டில் தாஜ்மஹாலுக்கு முன்பாகவே கட்டப்பட்ட ஒரு காதல் சின்னம் இருக்கிறது. சோழ வரலாற்றின் புகழை உச்சிக்கு கொண்டு சென்ற ராஜேந்திர சோழனின் வீரம் பற்றி தெரியும். ஆனால் அவன் தனது காதலிக்காக கட்டிய காதல் சின்னம் பற்றி தெரியுமா? அவர் தனது அனுக்கி(காதலி) பரவை நங்கையின் வேண்டுகோளை ஏற்று திருவாரூரில் கட்டிய கோவில் தான் அது.

ராஜேந்திர சோழன்— பரவை நங்கையார் காதல்

ராஜராஜ சோழனின் மகனான ராஜேந்திர சோழன், கி.பி. 1012—ஆம் ஆண்டு முதல் 1044—ஆம் ஆண்டு வரை மன்னராக இருந்தவர். கடாரத்தை வென்றவர் என்ற பெயர் இவருக்கு உண்டு. அவருக்கும் திருவாரூரைச் சேர்ந்த ஆடல் அழகிக்கும் இடையே இருந்த காதல் அதிகம் அறியப்படாதது.பேரறிஞர் அண்ணா கலைக்கல்லூரி வரலாற்றுத் துறை பேராசிரியர் ரமேஷ் பிபிசி தமிழிடம் இது குறித்து விவரிக்கத் தொடங்கினார்.

"அக்காலத்தில் சோழ நாட்டில் புகழ்மிக்க வணிகன் கோவலனும், நாட்டிய பெண்மணி, ஆடல் அழகியான மாதவிக்கும் இடையே உள்ளே காதல் பற்றி விவரிக்கின்றது சிலப்பதிகாரம். இந்தக் காதலைப்பற்றி இலக்கிய பேச்சாளர்களால் மேற்கோளிட்டு பேசாமல் இருக்க முடியாது, என்ற போதிலும் இலக்கியத்தில் கூறப்படும் இந்த காதலர்கள் உண்மையில் வாழ்ந்தார்களா? என்பது யாருக்கும் தெரியாது."

"ஆனால் கி.பி 11—ஆம் நூற்றாண்டில் சோழர் வரலாற்றில் ஒரு மன்னனும் ஆடல் பணி புரியும் பெண்ணொருத்தியும் காதல் கொண்டு காதலுக்கு ஒரு இலக்கணம் வகுத்திருக்கின்றார்கள். சோழ சாம்ராஜ்யத்தை கடல் கடந்து பரவிடச் செய்த மிகப்பெரிய மாவீரன் ராஜேந்திர சோழனின் காதலி தான் பரவை நங்கையார்." என்கிறார் பேராசிரியர் ரமேஷ்.

தொடர்ந்து பேசிய அவர், "முதலாம் ராஜேந்திரன் கங்கையையும் கடாரத்தையும் வென்று உலகளாவிய பல வெற்றிகளை ருசித்த மாமன்னன் ஆவான். ஆனால் உலகத்தை வென்ற இவனது உள்ளத்தை வெற்றி கொண்ட அனுக்கியாகத் (காதலி) திகழ்ந்தவர் தான் திருவாரூரை சேர்ந்த ஆடல் அழகி பரவை நங்கை. இவர் ஆடல் பாடல் மட்டுமல்லாது இறை பணியிலும் தன்னை ஈடுபடுத்தி கொண்டவர். இவருக்கு கிடைத்த சிறப்பு ராஜேந்திர சோழனின் பட்டத்தரசிக்கு கூட கிடைக்கவில்லை என்று கூறலாம்""சோழ வரலாற்றில் ராஜேந்திரன் எவ்வாறு சிறப்பிடம் பெற்றானோ அதை போல் அவரது இதயத்தில் பரவை நங்கை சிறப்பான இடத்தை பெற்றாள், இதனை ராஜேந்திர சோழனின் மகன்கள் பரவை நங்கைக்கு திருமேனி எடுத்து வழிபாடு செய்தனர்



# தமிழே

என்பதிலிருந்து நாம் அறிந்து கொள்ள முடியும்" என்றார்.

செங்கல் கோவிலை கற்கோயிலாக மாற்றிய காதல்

தொடர்ந்து பேசிய பேராசிரியர் ரமேஷ், "ராஜேந்திர சோழன் காலத்தில் அனுக்கியர் (அனுக்கியர் என்றால் பிரியமானவள், காதலி என்று பொருள்) பரவைநங்கை ராஜேந்திர சோழனிடம் வைத்த கோரிக்கைக்காக ஒரு செங்கல் கோவில் கற்கோயிலாக மாற்றப்பட்டது. அந்த கோவில் திருவாரூர் தியாகேசர் கோவிலாகும்." "பரவை நங்கையாரின் விருப்பப்படி ராஜேந்திரன் தனது பதினாறாம் ஆட்சி ஆண்டான கி.பி. 1028—இல் தொடங்கி பதினெட்டாம் ஆட்சியாண்டான கி.பி. 1130இல் கற்கோயிலாக கட்டி முடித்தார். இரண்டு ஆண்டுகள் கற்கோவிலாக சிறப்பாக வடிவமைத்தார். இதனை அவனது கல்வெட்டு குறிப்பிடுகின்றது." "கற்கோயிலாக அமைத்ததுடன் மட்டுமல்லாது அந்த கோவிலின் வெளிப்புறம் தொடங்கி கலச பகுதி வரையில் வாயில் உட்புறம் முழுவதும் பொன் வேய்ந்தான். கருவறை கதவுகளுக்கும், முன்புற தூண்களுக்கும் செம்பினால் தகடு சாத்தினான். இதற்காக 20.643 கழஞ்சு (1 கழஞ்சு = 5.4 கிராம்) பொன்னும், 42.000 பலம் செம்பொன்னும் செலவிடப்பட்டதாக கல்வெட்டு தெரிவிக்கின்றது"

"மேலும் வழிபாட்டிற்காக 28 குத்துவிளக்குகள், மேலும் ஆயிரக்கணக்கான கழஞ்சு எடை கொண்ட பொன் ஆபரணங்கள் 428 முத்துக்கள், 7 மாணிக்க கற்கள், 36 வைரக்கற்கள், எண்ணற்ற மரகத கற்கள், வெள்ளி பாத்திரங்கள் ஆகியவற்றை நன்கொடையாக அளித்தான்." "பரவை நங்கை விடுத்த கட்டளைப்படி கட்டி முடிக்கப்பட்ட கோவிலுக்கு குடமுழுக்கு விழா நடந்தது.

## மாயகிருஷ்ணன். க

அப்போது சோழ மன்னன் ராஜேந்திரன் தன் அருகில் அவளை வீற்றிருக்கச் செய்து தேரில் பவனி வந்தான். இவர்கள் இருவரும் இறைவனை தரிசித்த இடத்தில் ஒரு குத்துவிளக்கு ஒன்றை நினைவாக ஏற்றினாள். இதனை இவனது கல்வெட்டு 'உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவரும் அனுக்கியர் பரவை நங்கையாரும் நிற்குமிடத் தெரியும் குத்து விளக்கொன்றும்' என்று குறிப்பிடுகிறது" என்றார் பேராசிரியர் ரமேஷ்.

மேலும் அவர் கூறுகையில், "திருவாரூர்



கோவிலில் ராஜேந்திர சோழனுடன் பரவை நங்கைக்கு கல்சிற்பம் எடுக்கப்பட்டு தினசரி பூஜை செய்வதற்கு ராஜாதிராஜன் நிலங்களை அளித்தான் என்பதை திருவாரூர் கல்வெட்டு தெரிவிக்கின்றது. இன்றும் அங்கு சிற்பம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது."

"தலையில் கிரீட மகுடமும், இடையில் ஆடையும், கழுத்தில் பல அணிகலன்களும் பெற்று ராஜேந்திரன் நின்ற நிலையில் வாணங்கியவாறு

உள்ளான். அவர் அருகில் பரவை அழகிய கொண்டையுடனும், பல மடிப்புகளுடன் கூடிய ஆடை அணிய பெற்று வணங்கியவாறு உள்ளாள்."

"இவையெல்லாம் ராஜேந்திர சோழன் தனது அனுக்கி (காதலி) பரவை நங்கை மீது கொண்ட அளவு கடந்த காதலை உறுதிப்படுத்துகின்றது. இவன் மட்டுமல்லாது இவனுக்கு பின் வந்த அவனது புதல்வர்களும் இவர்களது காதலைப் போற்றியிருக்கிறார்கள்." என்றார் பேராசிரியர் ரமேஷ். தேவரடியார் பெண் ஒருத்தியிடம் சோழ பேரரசன் கொண்ட காதலால் திருவாரூர் கோவில் கற்கோயிலாக மாறியது என்பதை தெளிவாக கூறினார் அவர்.



மயிலாடுதுறை, மணல்மேடு, அரசு கலை அறிவியல் கல்லூரி வரலாற்று துறைத்தலைவர் கலைச்செல்வன் பிபிசி தமிழுடன் பேசுகையில், கோவிலை மட்டுமல்ல ஊர் பெயரையும் காதலிக்காக ராஜேந்திரன் வைத்தார் என்ற கூடுதல் தகவலுடன் விவரிக்க தொடங்கினார்."ராஜேந்திர சோழனுக்கு பரவை நங்கையர் மீது இருந்த அதீத காதலை வெளிப்படுத்தும் விதமாக விழுப்புரத்திற்கு அருகில் உள்ள கிராமம் ஒன்றிற்கு பரவைபுரம் என்று பெயரிட்டுள்ளார். தற்பொழுது அது பனையபுரம் என்று அழைக்கப்படுகிறது."

"இந்த ஊர் இராஜ ராஜ வள நாட்டில் பனையூர் நாட்டு பொறையூர் நாட்டு தனியூர் பரவைபுரம் என்றும் கங்கைகொண்ட சோழ வளநாட்டு பரவைபுரம் என்றும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இக்கோவில் இறைவன் பரவை ஈஸ்வரன் உடையார் என்று குறிக்கப்படுகின்றார்."

உறவை மதித்த தலைமுறையினர்

தொடர்ந்து பேசிய கலைச்செல்வன், "ராஜேந்திரனின் மகனான ராஜாதிராஜன், பரவை நங்கைக்கும் தன் தந்தைக்கும் தகுந்த மரியாதைகளை அவர்கள் இறந்த பின்பும் செய்தான். அவர்களின் சிலைகளைத் திருவாரூர் ஆலயத்தில் செய்வித்தான்." என்று கூறினார். மேலும், "ராஜாதிராஜனுக்கு அடுத்து அரியணை ஏறிய இரண்டாம் ராஜேந்திரனும் தன் தந்தையான ராஜேந்திரன்,தாயைப்போன்ற பரவை ஆகிய இருவருக்கும் திருமேனிகள் செய்து பரவை ஈஸ்வரமுடையார் கோவிலில் பிரதிஷ்டை செய்தான்." "அவர்கள் பிறந்த நாள்களில் விழாக்கள் எடுக்கப்பட்டன. அதற்கான நிவந்தங்களையும் அவன் அளித்தான். அதன்பின் வந்த வீர ராஜேந்திர சோழனும் இதே போன்று பரவையின் பெயரில் பல நிவந்தங்களை செய்தான். மகன்களை விடுங்கள், பின்னாளில் வந்த அதிராஜேந்திரனும் முதல் குலோத்துங்க சோழனும்கூட பரவைபுரம் ஈசன் ஆலயத்திற்குப் பல நிவந்தங்கள் அளித்துப் பரவைக்குப் பெருமை சேர்த்தனர்."

"உண்மையான உறவினை வெளிப்படுத்தும் காதல் அந்த காலத்திலும் மதித்து போற்றப்பட்டுள்ளதற்கு இது மிகச்சிறந்த உதாரணமாகும்" என்று வரலாற்றுத் துறை தலைவர் கலைச்செல்வன் கூறினார்.அதேபோல் மதுரை—திண்டுக்கல் செல்லும் சாலையில் பரவை நங்கைநல்லூர் என்ற ஊரும் இருந்தது. இவர் பெயரால் அழைக்கப்பட்டது. இன்று அது பரவை என்று அழைக்கப்படுகிறது. அதனை உறுதிப்படுத்தும் வகையில் பரவை பாசன ஏரியில் பரவை நங்கைநல்லூர் என்ற பெயரை தெரிவிக்கும் பழமையான கல்வெட்டுகளும் உள்ளன.

முதலாம் ராஜேந்திரனின் அனுக்கியான பரவை நங்கையினை பற்றி சிதம்பரம், திருவாரூர், பனையபுரம் போன்ற இடங்களில் கல்வெட்டுக்கள் உள்ளன. ராஜேந்திரன் பரவைநங்கை உறவினை அவரது புதல்வர்களும் மதித்தார்கள்.

தந்தையின் காதலை மதித்த புதல்வர்

முதலாம் ராஜேந்திர சோழன் பரவைநங்கையின் இறப்புக்கு பின்னர் இருவருக்கும் படிமம் எடுக்கப்பட்டு வழிபாட்டிற்கும் நிலம் கொடையாக வழங்கப்பட்ட செய்தியினை திருவாரூரில் உள்ள முதலாம் ராஜாதி ராஜனின் 24—ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு (அதாவது கி.பி 1042) விவரிக்கின்றது.

இக்கல்வெட்டில், இந்த கோவில் அரநெறியப்பரை வழிபாடு செய்யும் ஒருவருக்கு 50 கலம் நெல்லும் புடவைக்கு 15 கலம் நெல்லும் கொடை வழங்க மன்னர் உத்தரவிட்டுள்ளார் .இந்த கல்வெட்டின் வாயிலாக இவர்கள் இறப்பிற்கு பின்னரும் சோழ அரசியலில் நிலை பெற்றிருந்த நன்மதிப்பினை நாம் அறிய முடிகிறது.



# ஆயிரத்தில் ஒருவன்(ர்)!!

# வில்லாதி

## மாஞ்சேரி நாராயணன் நம்பியார்

தமிழ்நாட்டில் — தமிழ்த் திரையுலகில் எம்.ஜி.ஆர். என்ற பெயரைத் தெரிந்த ஒவ்வொருவருக்கும் தெரிந்த பெயர் நம்பியார்.

அந்தக் காலத்தில் பெரும்பாலான திரைப்படங்களில் கட்டாயம் கத்திச் சண்டை இருக்கும். கத்திச் சண்டை என்றால் பி.எஸ்.வீரப்பா, நம்பியார். குடும்பப் படங்கள் வரத் தொடங்கியதும் வேறுவகை சண்டைக் காட்சிகளும் இடம் பெறத் தொடங்கிவிட்டன. ஆனால் எம்.ஜி.ஆர். — நம்பியார் சண்டை, அது என்ன சண்டையாக இருந்தாலும் சரி, மிகவும் பிரசித்தம்.

நம்பியார் என்று சுருக்கமாக அழைக்கப்படும் எம்.என். நம்பியாரின் முழுப் பெயர் மாஞ்சேரி நாராயணன் நம்பியார் என்பதாகும். கேரளத்தில் பிறந்தாலும் தமிழகத்தில் வளர்ந்தவர்.

கேரளத்தின் பெருவமூர் என்ற ஊரில் கடந்த 1919ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் தேதி கெளு நம்பியார் —லட்சுமி அம்மாளுக்கு மகனாக பிறந்தவர் எம்.என்.நம்பியார். இவரது இயற்பெயர், மாஞ்சேரி நாராயணன் நம்பியார் ஆகும்.

நம்பியாரின் 8ஆவது வயதில், தந்தை கெளு நம்பியார் உயிரிழந்த நிலையில் கேரளாவில் வசித்து வந்த நம்பியார், ஊட்டிக்கு குடி பெயர்ந்தார். அங்குள்ள நகராட்சி பள்ளியில் 3ஆம் வகுப்பு வரை படித்துள்ளார்.

பின்னர் நாடகக் குழுவில் சேர்ந்து சமையல் உதவியாளராக பணியாற்றினார். பின்னர் நாடகக் கலை கற்றுக்கொண்டு அதோடு பாட்டும், ஆர்மோனியமும் கற்றுக் கொண்டார். தனது 15ஆவது வயதில், நச்சுப் பொய்கை என்ற நாடகத்தில் பெண் நீதிபதி வேடத்தில் நடித்தார். இதுதான் இவரின் முதல் மேடையாக அமைந்தது. அப்போது அவருக்கு மாதம் மூன்று ரூபாய் தான் சம்பளம்.

தமிழ்த் திரைப்படங்களில் வில்லன் என்றால் ஒரே வில்லன்தான், நம்பியார். இப்போது கதை நாயகர்கள் எல்லாம் வில்லன்களாக நடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இருந்தாலும், கதை நாயகர்களுக்கு மட்டுமல்ல, வில்லன்களுக்கெல்லாம்கூட வில்லன் ஒரே ஒருவர்தான், நம்பியார்.

எட்டு சகாப்தங்கள் கடந்தும் ரசிகர்களை தன்வசம் ஈர்த்து வைத்திருந்த வில்லன் தான் நம்பியார். இவர் எம்ஜிஆர் உடன் நடித்த எங்கள் வீட்டுப்பிள்ளை, ஆயிரத்தில் ஒருவன், நாடோடி மன்னன், படகோட்டி, திருடாதே, காவல்காரன், குடியிருந்த கோவில் என அனைத்து படங்களும்



# வில்லன் !

## சாமி !

வெற்றி படங்களாகவே இருந்தன. நாயகன் மட்டுமல்லாமல் வில்லனாக நம்பியாரும் அனைவரின் மனதிலும் பதிந்துவிட்டார்.

இவரது பாவனையும் ரசிகர்களை வெகுவாகவே கவர்ந்தது. முதன் முதலாக பக்த ராமதாஸ் என்னும் படத்தில் நாயகனாக தோன்றினார். ஆனாலும் இவருக்கு நாயகன் வேடத்தை விட வில்லனுக்கான ரோலே அதிகமாக ஒத்துபோனதால் தொடர்ந்து வில்லன் கதாபாத்திரங்களிலேயே நடிக்க ஆரம்பித்தார். வெறும் மூன்று ரூபாய்களை சம்பளமாக பெற்று தனது வாழ்க்கை துவங்கிய நம்பியார் வரலாறு கூறும் வில்லனாக தன திறமையால் உயர்ந்தார்.

50 களின் முற்பகுதியில் சூப்பர் ஹிட் படங்களில் ஒன்றான திகம்பர சாமியார் என்னும் படத்தில் 11 வேடங்களில் நடித்து அப்போதே அசத்தியிருந்தார்.



வேலைக்காரி, ஆயிரத்தில் ஒருவன், தில்லானா மோகனாம்பாள் என வில்லத்தனத்தின் மொத்த உருவத்தையும் கொட்டி தீர்த்து இருந்தார். வில்லன் கதாபாத்திரம் என்பதால் வருடத்திற்கு நான்கு ஐந்து படங்களில் ஆவது புக்கிங் செய்துவிடுவார்கள்.

திரைப்படங்களில் கதாநாயகனாக நடிப்பவர்கள் எல்லாரும் அவர்களுடைய நிஜ வாழ்க்கையிலும் நல்லவர்களாகவே இருப்பார்கள் என்றும் வில்லனாக நடிப்பவர்கள் எல்லாரும் கெட்டவர்களாகவே இருப்பார்கள் என்றும் நினைப்பது குறித்து இவ்வாறு கூறுகிறார்:

“என்னுடைய பிஸினஸ் நடிப்பு. இதில் எனக்குக் கிடைத்து வரும் பாத்திரம் வில்லன். கொடுக்கிற ஊதியத்துக்கு எனது வேலையைச் செய்கின்றேன். வில்லனாக நடிப்பவர்கள் எல்லாரும் கெட்டவர்களாகவும் ஹீரோவாக நடிப்பவர்கள் எல்லாரும் நல்லவர்களாகவும் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஓரிருவர் வேண்டுமானால் சிலர் கூறுவதைப் போல இருக்கலாம். வீரபாண்டிய கட்டபொம்மனை



வரலாற்றில் வெள்ளையர்களிடம் காட்டிக் கொடுத்தவர் எட்டப்பன். இதனால் எட்டயபுரத்தில் பிறந்தவர்கள் எல்லாரும் காட்டிக் கொடுப்பவர்கள் என்று நாம் நினைத்தால் அது எவ்வளவு பெரிய தப்போ, அதைப் போலத்தான் வில்லனாக நடிப்பவர்கள் எல்லாரும் கெட்டவர்களாக இருப்பார்கள் என்று கருதுவதும். என்னைப் பொருத்தவரை நான் இதுவரை திரையில் போட்டுவந்த வில்லன் வேஷத்தைப் பார்த்துவிட்டுச் சிலர், 'பாவி, இப்படிச் செய்கிறானே' என்று சொல்வதைப் பார்த்திருக்கிறேன். அந்த அளவுக்கு என்னுடைய கேரக்டர் அவர்கள் மனதில் பதிந்திருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது. அவர்கள் ஆழ்ந்து சிந்தித்தால் இவையெல்லாம் ஒரு கனவு, மாயத் தோற்றம் என்பதைப் புரிந்துகொள்வார்கள். என்னைப் பற்றித் தமிழக மக்களுக்கு நன்கு தெரியும். அதனால் நான் அந்த இமேஜைப் பற்றி வருத்தப்பட்டதில்லை".

நம்பியாரின் தாய்மொழி மலையாளம் என்றாலும் மலையாளத்தில் அவர் நடித்த படங்களிலெல்லாம்கூட டப்பிங் குரல்தான். படித்தது, வளர்ந்தது எல்லாமே தமிழ்நாட்டில்தான் என்பதால் தொடக்கத்தில் நடித்த சில மலையாளப் படங்களில் குரல் கொடுக்கப் போக, நல்ல தமிழ் கலந்த மலையாளம் என்பதால் வேண்டாமே என்று கூறிவிட்டனர். நம்பியாரின் மருமகன் தயாரித்த சந்திர பிம்பம் என்ற மலையாளப் படத்தில்கூட இவருக்கு டப்பிங் குரல்தான். தமிழ், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி, ஜங்கிள் என்றோர் ஆங்கிலப் படம் பல நூறு படங்களில் நடித்திருக்கிறார் நம்பியார்.

நம்பியாருக்குப் பிடித்தது — உடற்பயிற்சி. பிடிக்காதது — பொது விழாக்களில் பங்கேற்பது, தன்னைப் பற்றித் தனக்கு முன்பாகவே புகழ்வது, பிறரைப் பற்றித் தன்னிடம் குறை கூறுவது, தொழிலில் அக்கறை செலுத்தாத நடிகர்கள்.

எத்தனையோ படங்களில் வில்லனாக நடித்து எவ்வளவோ உயரங்களைத் தொட்டிருந்தாலும், 1982—ல் பாக்கியராஜ் இயக்கத்தில் முற்றிலும் மாறுபட்ட முகமாக தூறல் நின்னு போச்சு படத்தில் நடித்தார் நம்பியார். இதன் பிறகு நிறைய படங்களில் வில்லன் கெட் அப்பிலிருந்து விடுபட்டு வெவ்வேறு பாத்திரங்களில் நடித்துச் சிறப்பித்தார்



அவர். மாற்றத்துக்குக் காரணமான தூறல் நின்னு போச்சு பற்றி இவ்வாறு கூறுகிறார்.

“அந்தப் படத்தில் என்னை நடிக்க ஒப்பந்தம் செய்வதற்காக எனது வீட்டிற்கு ஒரு நாள் மாலை வருவதாக பாக்கியராஜ் சொன்னார். அவர் குறிப்பிட்ட நேரம் சரியான ராகு காலம். அந்த நேரத்தில் வர வேண்டாம். ராகு காலம் முடிந்தவுடன் வாருங்கள் என்று கூறினேன். ஆனால், அவர் தனது உதவி இயக்குநருடன் ராகு காலத்திலேயே எனது வீட்டிற்கு வந்தார். கதையைச் சொன்னார். அவர் முதலில் கதை சொல்லும்போது படத்தில் என்னுடைய கேரக்டர் குறைவாகத்தான் இருந்தது. படப்பிடிப்பு தொடங்கியவுடன் எனது கேரக்டர் விரிவாகப் போய்விட்டது. இந்தப் படத்தில் தனக்கு (பாக்கியராஜுக்கு) பெயர் வாங்கிக் கொடுக்கின்ற அளவுக்குப் பல காட்சிகள் இருந்தாலும் பாக்கியராஜ், தான் ஓர் இயக்குநர் என்ற முறையில் அவருக்கு உள்ள முக்கியத்துவத்தைக் குறைத்துக்கொண்டு எனக்குப் பல காட்சிகளில் அதிக ஸ்கோப்பைக் கொடுத்தார். நான் அந்த இடத்தில் நடிகர் பாக்கியராஜைப் பார்க்கவில்லை. டைரக்டர் பாக்யராஜைத்தான் பார்த்தேன். அவரும் படத்தின் மொத்த வெற்றியைத்தான் பார்த்தாரே தவிர, தன்னுடைய தனிப்பட்ட வெற்றியைப் பார்க்கவில்லை. என்னுடைய உழைப்பைவிட 10 மடங்கு உழைப்பு அவருடையது. அந்த உழைப்புக்குப் பலன் கிடைத்து படம் அமோக வெற்றி அடைந்துள்ளது.”

நிறைய படங்களில் நடித்தவர்களிடம் எப்போதும் ஒரு கேள்வி கேட்கப்படும். பல நம்பியார் படங்களின் ஹீரோவான எம்.ஜி.ஆரும் சில திரைப்படங்களை இயக்கியுள்ளார். நம்பியாரிடமும் அதே கேள்வி, நூற்றுக்கணக்கான படங்களில் நடித்துப் பழுத்த அனுபவம் பெற்ற நீங்கள் ஏன் ஒரு படத்தை இயக்கக் கூடாது? நெற்றியடியாக அவர் தெரிவித்த பதில்:

“எனக்கு டைரக்ட் செய்யும் அளவுக்குத் திறமை இல்லை. அதேசமயம் திறமையில்லாதவர்களும் டைரக்ட் செய்கிறார்கள். அதற்காக நான் யாரையும் குறை சொல்வதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. எனக்குத் தெரிந்த ஒரே தொழில் நடிப்பு. எனது தகுதிக்கு மேல் உள்ள ஒரு வாழ்க்கையை நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். இந்த நிமிஷம் வரை நானும் என் குடும்பத்தினரும் மகிழ்ச்சியுடன்தான் இருக்கிறோம். நானாக ஒரு கனவு



இல்லை. முன்போல், இந்த வேடத்திற்கு 'இந்த நடிகர்' தான் என்ற நியதியும் மாறி விட்டது. மேலும், இன்றைய நடிகனுக்கு உரிய 'தகுதிகள்' எனக்கில்லை! நான் புலால் உண்ணுவதில்லை! மது அருந்துவதில்லை! வெளியில் 'சாப்பிடும்' பழக்கமும் எனக்கில்லை. அதனால், எனக்கு நண்பர்களும் குறைவு! சிறு வயதிலிருந்தே நான் என்னை இப்படி வளர்த்துக் கொண்டு விட்டேன். இப்படி இருப்பவனைப் படவுலகத்தினால் எத்துணை நாள்தான் தாக்குப் பிடிக்க முடியும்?

உலகை சிருஷ்டித்துக் கொண்டு சொப்பன வாழ்வு வாழாமல் நிஜமான உலகில் ஓர் அலுவலகப் பணியைப் போல இந்தத் தொழிலைச் செய்துகொண்டிருக்கிறேன்". அவர்தான் நம்பியார் — எளிய தோற்றம், தெய்வ பக்தி, திறமை, உயர்ந்த பண்புகள்!

"நல்ல நடிகராக இருந்தும் ஏன் இப்போது எல்லாம் உங்களுக்குப் படங்கள் இல்லை?" — என திரு.நம்பியாரிடம் கேள்வி எழுப்பியதும், அவர் தனக்கே உரிய பாணியில் தனது பதிலைப் பதிவு செய்கிறார்.



"ஒருவேளை நான் இன்னும் பரதநாட்டிய முத்திரைகளைக் கற்றுக் கொள்ள வில்லையோ, என்னவோ? அதோடு இப்போது சிறந்த தயாரிப்பாளர்களும் இல்லை. ஆமாம்! முன்பு போல் சிறந்த படங்களை எடுக்க சிறந்த தயாரிப்பாளர்கள் இப்போது இல்லை.

ஆகையால், சிறந்த நடிகர்களை வைத்து அவர்களால் படம் எடுக்க முடிவதில்லை. அதற்கு வேண்டிய வசதிகளும் அவர்களிடம்

ஒரு முறை, வெளியூர் படப்பிடிப்பிற்கு திரு.எம்.ஜி.ஆருடன் சென்றிருந்தேன். ‘மேக்அப்’ முடிந்த பிறபாடு, இருவருக்கும் காலை உணவு வந்தது. எனக்கு இட்டிலிகளும், சாம்பாரும்; எம்.ஜி.ஆருக்கு இட்டிலிகளும், மீன் சாம்பாரும் வந்திருந்தன.ஒரே டிபன் காரியரில் அடுத்தடுத்து ‘சாம்பார்’ டப்பாக்கள் வைக்கப்பட்டிருந்தன. அதைக் கண்ட நான், எனக்கு ‘டிபன்’ வேண்டாம் என்று கூறிவிட்டேன். நான் மிகவும் சுத்த சைவம். எம்.ஜி.ஆர். சாப்பிடுமாறு என்னை வற்புறுத்தினார்.

ஆனால், நான் மறுத்துவிட்டேன். அவரும் காலை உணவைச் சாப்பிடாமல் எழுந்துவிட்டார். மற்றவர்களின் துன்பத்தைப் பொறுக்காதவர் அவர். நான் பிற்பகலில் சாப்பிட்டேன். ஆனால் அவரோ, பிற்பகலிலும் ஒன்றும் சாப்பிடவில்லை. இத்தகைய என் கொள்கைகள் பல சமயங்களில் மற்றவர்களுக்கு வேதனைனையும், கஷ்டத்தையும் கொடுக்கின்றன. என்ன செய்வது? எனக்குள்ளேயே ஒரு வட்டத்தைப் போட்டுக் கொண்டு அதனுள்ளேயே நான் சுற்றிச் சுற்றி வருகிறேன். இப்படியெல்லாம் கடினமாக வாழ்வதற்கு ஒரே ஒரு காரணம், அதுதான்....மனது!

நாம் செய்யும் எந்தக் காரியத்திற்கும் ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து யாரிடமும் எதை வேண்டுமானாலும் கூறிக் கொள்ளலாம். ஆனால், நம் மனத்தினிடம் ஒரு காரணத்தைக் கற்பனை செய்து கூற முடியாதே! நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் நம் மனத்தினிடம் நாம் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். கடைசி வரையில் நம்முடன் இருக்கப்போவது நம் மனதுதான் — மற்றவர்கள் அல்ல!

சமீபத்தில் எனக்கு ஒரு படக் கம்பெனியார் ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தத் தொகையைவிட அதிகமாகக் கொடுத்தார்கள். நான், அதிகமாகக் கொடுத்த தொகையைத் திரும்ப அவர்களிடம் கொடுக்க முயன்றபோது வாங்க மறுத்தார்கள்.

‘உங்களுக்கு இன்னமும் நிறையக் கொடுக்க வேண்டும் என்று நினைத்திருந்தோம். ஆனால் முடியவில்லை... இத்தொகையை நீங்கள் வாங்கித்தான் ஆகவேண்டும்‘ என்று அவர்கள் மிகவும் வற்புறுத்தியதால் வாங்கிக் கொண்டேன். தர்மத்திற்கும், நியாயத்திற்கும் கட்டுப்பட்டு, மனச்சாட்சியின்படி வாழ விரும்புகிறேன் நான்!”

நீங்கள் ஏன் இப்போதெல்லாம் சிவாஜி கணேசனின் படங்களில் அதிகமாக நடிப்பதில்லை?”

“எனக்கு அவருடன்கூட நடிக்கத் தகுதி இல்லாமல் இருக்கலாம் என்று நினைக்கிறேன். அதனால்தான் அவருடைய படங்களில் நான் நடிக்கவில்லையோ, என்னவோ?”

“இன்றையத் தமிழ்ப்பட உலகின் நிலை என்ன?”

“தரம் தாழ்ந்து போயிருக்கிறது. காரணம், ‘தொழில்’ பரவலாக்கப்பட்டு விட்டதுதான். பணமில்லாமல் யார் வேண்டுமானாலும் படம் தயாரிக்கலாம் என்று ஆகிவிட்டதால், இன்றைய



படங்களின் தரம் தாழ்ந்து போயிருக்கிறது. மேலும், நடிகர்கள் தயாரிப்பாளர்களுடன் ஒத்துழைப்பதில்லை. பணம் கொடுக்க முடியாத தயாரிப்பாளர்கள், நடிகர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி ‘கால்ஷீட்’ பெற வேண்டி இருக்கிறது! இதனால் நேரம் வீணாக்கப்பட்டு, பணமும் செலவழிகிறது.



படத்தொழிலைப் பற்றி அறியாதவர்கள் பலர், இதில் புகுந்து இதைச் சீர்குலைத்திருக்கிறார்கள்.

இன்றையத் தமிழ்த் தயாரிப்பாளர்கள் ‘செட்’ போட்டு படமெடுப்பதற்கு வசதி இல்லாதவர்களாக இருக்கிறார்கள். தெலுங்கு, கன்னடப் படங்களுக்குப் போட்ட ‘செட்’டை உபயோகித்துப் படமெடுக்கிறார்கள். அந்த அளவிற்குத் தமிழ்ப்பட உலகம் தரம் தாழ்ந்து போய் இருக்கிறது! மேலும், நாம் மற்ற மொழி தயாரிப்பாளர்களைக் குறை சொல்லிக் குறை சொல்லி நாட்களை வீணாகக் கழித்துக் கொண்டிருக்கிறோம். மற்றவர்களின் நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கும் நாம், நம் நிலையைச் சீர்ப்படுத்திக் கொள்ள ஆவண செய்ய வேண்டும்.”

“இன்ஸ்டிடியூட் நடிகர்கள் பிரபல நடிகர்களின் நடிப்பைக் குறை கூறுகிறார்கள். இதைப் பற்றித் தங்களின் கருத்து என்ன?”

“கிணற்றுத் தவளைகள்’ போல இவர்களுக்கு ஏதாவது சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். குறிப்பிட்டுச் சொல்லப்போனால் இதற்கெல்லாம் காரணம், ‘தலைமுறையில் இடைவெளி’. பழைய தலைமுறையினர் செய்தது தவறு என்று இன்றைய தலைமுறையினர் கூற, நாளைய தலைமுறையினர் இன்றைய தலைமுறையினர் செய்வதைப் பற்றிக் குறை கூற — இதற்கு ஏது முடிவு? இன்றைய பிரபல நடிகர்கள் எல்லோரும் அன்று நாடகங்களில் நடித்தவர்கள். நாடகங்களில் நடிக்கும்போது, கடைசி வரிசையில் உட்கார்ந்திருப்பவனுக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகச் சற்று மிகைப்படுத்தி நடிக்க வேண்டி வந்திருக்கிறது. அந்தப் பழக்கம் இன்னும் மாறவில்லை. ஆனால், அதற்காகப் பரத நாட்டிய முத்திரைகளைத் தெரிந்து கொண்டுதான் ஆகவேண்டும் என்பதும் இல்லை.

‘கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு’ என்பது பழமொழி. நடிப்பில் யாரும் சூரப்புலிகளாகவும், நடிப்பில் தேர்ந்து விட்டேன் என்றும் கூற முடியாது. காரணம், எதிலுமே கல்லாதது நிறைய இருக்கிறது!” என்றார்.இன்று வரை இவரை அடித்துக்கொள்ள ஆளே இல்லை என்பது தான் நிதர்சனமான உண்மையாகவே இருந்து வருகிறது. 90களில் தனது வில்லன் கதாபாத்திரத்தில் இருந்து மாறி குணச்சித்திர வேடங்களில் நடிக்க ஆரம்பித்தார் நம்பியார். அதன்படி மூவேந்தர், ரோஜாவனம், விண்ணுக்கும் மண்ணுக்கும், வெற்றி, சுதேசி, அன்பே ஆருயிரே உள்ளிட்ட பல படங்களில் தோன்றியிருந்தார். இவர் இறுதியாக 2006 ஆம் ஆண்டு சுதேசி என்னும் படத்தில் நடித்திருந்தார். இந்த படத்தில் விஜயகாந்த் நாயகனாக தோன்றியிருந்தார்.

இறுதிக்காலத்தை ஆன்மீகத்தோடு கழித்த நம்பியார் பாக்டீரியா தொற்றுநோய் காரணமாக 2008 ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் தேதி உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் நம்பியார் காலமானார்.

இவருக்கு ருக்மணி அம்மா என்கிற மனைவியும் இரண்டு மகன்கள் ஒரு மகளும் இருந்தனர். இவரின் மூத்த மகன் சுகுமார் நம்பியார் பாஜகவின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்தவர். இரண்டாவது மகன் மோகன் நம்பியார் பிரபல தொழிலதிபர். மேலும் சினேகா நம்பியார் என்கிற மகளும் உள்ளார்.

காலங்கடந்து எத்தனையோ வில்லன்கள் வந்தாலும், எம்.என்.நம்பியாரின் வில்லத் தனத்தை மட்டும் யாராலும் கொடுக்கமுடியவில்லை.


APN





















சரித்திரத் தொடர்



# சேரமான் கனவு

44

## 44. வாக்குறுதி தந்த மனவுறுதி!

கொற்றவன்

விடிவதற்கு இன்னமும் சில நாழிகைகளே இருந்தன.

வான் பரப்பில் விடிவெள்ளி மின்னிக் கொண்டிருந்தது.

அந்த விடிவெள்ளியைப் போலவே கடலரசியும் ஆழியின்மேல் தனது இருப்பைப் பறைசாற்றும்படி நின்றிருந்தது.

கருங்கூந்தலழகியெனப் பாய்மரங்கள் காற்றில் அசைந்தபடி நங்கூரமிட்டிருந்த கடலரசியின் மேற்தளத்தின் கண்காணிப்பு அறையின் வாயிலில், பாய்மரத்தின் கனமான கயிறு ஒன்றைப் பற்றியபடி நின்ற வில்லவனின் பார்வை, அந்த விடிவெள்ளியின் மீதே இருந்தது.

எங்கோ தனக்கான ஒரு சிறு வெளிச்சப் பொறியைத் தனதாக்கிக் கொண்டு அதைப் பன்மடங்கு பெருக்கி, அடர் இருட்டிலும் பார்ப்பவர் கண்ணைப் பறிக்கும் பல வண்ணக் கற்றைகளைப் பாய்ச்சி, மின்னும் வைரமென காரிருளைக் கிழித்தபடி பளிச்சிடும் அந்த விடிவெள்ளியை வெறித்தபடியே இருந்தாலும், வில்லவனின் மனது ஆழ்தவத்தில் இருப்பதைப் போல ஒரே சிந்தனையில் இருந்தது.

தியோதாரா...

வில்லவனின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்தப் பெயரையே அவனது மனம் ஓயாமல் மந்திரமாய் உச்சரித்தது.

தியோதாராவை முதன்முதலாகக் கனவிலும், பின் நேரிலும் கண்ட முதல் நாள் தொடங்கி அவனது நினைவலைகள் சுழலத் தொடங்கின.

தங்கத்தைத் தோற்கடிக்கும் அங்கத்துடன் வில்லவனின் உள்ளத்தைக் கொள்ளைக் கொண்ட தங்கச் சிலை!

கிரேக்கம் தந்த பூம்பாவை!...

கிறக்கம் தரும் பொற்பாவை...

ஒருநாள் நள்ளிரவில்...

சேரநாட்டு முசிறிபட்டினக் கடற்கரையில் கரையொதுங்கிக் கிடந்தவளைக் கண்ட அக்கணத்தில்... அவள் கடல் தேவதையோ அல்லது கடற்கன்னியோ என வியப்பிலாழ்ந்தான் வில்லவன்.

ஆனால் அதேமுகம்தான் சற்று முன்னர் தன் கனவில் வந்த யவன தேவதையின் முகம் என்பதை அறிந்ததும் மலைப்பின் உச்சத்துக்கே சென்றுவிட்டான்!

இதென்ன மாயம்!...

இதுவரை தான் நேரில் ஒருமுறையேனும் கண்டிராத பெண்...

கனவில் தோன்றி தன்னை ஆட்கொண்டுவிட்ட ஒரு பெண்...

தன் உயிரை அவன் உயிராய் நினைக்கச் செய்துவிட்ட பெண்...

இருள் விலகாத கருக்கலில், கடற்கரை மணல் வெளியில், மயங்கிய நிலையில் கிடக்கிறாள் என்றால்... தனக்கு வந்த கனவு, உறக்கத்தில் மட்டும் வந்த கனவல்ல! இது இறை செயலின் விளைவல்லவா!

உள்ளத்தில் வைத்து உருகி வழிபடும் கொற்றவைதான் அவளை அடையாளப்படுத்தி இருக்கவேண்டும் என்ற நம்பிக்கை வில்லவனுக்குள் அழுத்தமாகப் பதிந்தது.



அந்த நம்பிக்கையின் அடிப்படையில், தியோதாராவுக்கு ஏற்படவிருந்த பேராபத்தைத் தடுத்து, அவளைக் கடத்திச் செல்லவிருந்தவர்களை அழித்து, அவளைப் பத்திரமாக கிரேக்கத்துக்குக் கொண்டு செல்வதாக வாக்குறுதியும் அளித்தான்.

ஆனால்... தான் அளித்த வாக்குறுதியின் மீது அவ்வப்போது வில்லவனுக்குள் கேள்வி எழும்பிக் கொண்டே இருந்தன.

இறைவன் உனக்கென அனுப்பியதை நீ எப்படித் திருப்பி அனுப்பலாம்?

அவளது முகத்தை நேரில் காண்பதற்கு முன்பே அவள் எப்படி உன் கனவில் வந்தாள்?

காளி கோயிலில் உறங்கிக் கிடந்த உனக்குள் ஒரு கனவை வரவழைத்து, கனவில் வந்தவளை நேரிலும் நிறுத்தி, அவள் உனக்கானவள் என அடையாளப்படுத்தியது அந்தக் கொற்றவைதான் என்பதை நீ நம்ப மறுக்கிறாயா?

உன் வாசல் தேடி வந்தவளை அவள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பும் உத்தரவாதத்தை நீ எப்படி முந்திக் கொண்டு தந்தாய்?

இப்படியாக இன்னும் பல கேள்விகளால் அவனை வெளிமனம் துளைத்தெடுத்தாலும், அவற்றுக்கெல்லாம் அவனது உள்மனம் ஒரேயொரு தெளிவான பதிலை மட்டுமே கூறி அடக்கி வைத்தது.

நமது முன்னோர்கள் வழிவழியாகக் காண்பித்த உயர்நெறி...

வாக்கு தவறாமை!

ஒரு மனிதன் நாக்கு தவறலாம். அவன் தந்த வாக்கு தவறக் கூடாது!

மனிதன் என்றால் வாக்கு தவறாமை வேண்டும்! கொடுத்த வாக்கினை மீறுபவர்கள் விலங்குக்கு ஒப்பாவார்!

நீ மனிதனா இல்லை மிருகமா என்பதை முடிவு செய்து கொள்!'

தனக்குள் தீர்ப்பாக வந்து விழும் ஆழ்மனத்தின் அந்த வரிகளுக்குக் கட்டுப்பாட்டு அமைதியாகி விடுவான் வில்லவன்.

ஆனால் இப்போதோ?...

கொடுத்த வாக்கை நிறைவேற்ற, கடலரசியை சேரமான் செங்குட்டுவரிடமிருந்து கேட்டுப் பெற்று கிரேக்கம் நோக்கிக் கடற்பயணம் மேற்கொண்ட வில்லவன், கடற்பரப்பில் தொல்லைக் கொடுத்து வந்த கடற்கொள்ளையர்களுடன் சேர்த்து, தியோதாராவைக் கடத்திச் செல்ல வந்தவர்களையும் நடுக்கடலில் ஒழித்துக் கட்டியதோடு... சேரமண்டலத்தின் கடலோடிகளுக்கு கொள்ளையர்களால் தொல்லை இல்லாத அமைதியை நிலைநாட்டி இருக்கிறான்.



இதோ...

தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றும் தருணத்தில் வந்து நிற்கிறான்!

விடிந்தால் கிரேக்கப் பேரரசின் ஆளுகைக்குட்பட்ட தெலோஸ் தீவினை அடைந்து விடும் கப்பல்!

அதோ...

தொலைதூரத்தில் அத்தீவின் கலங்கரை விளக்கத்தின் ஒளி, காற்றில் ஆடும் அகல்விளக்கின் தீபமென சிறுபொறியாகத் தெரிகிறது.

வில்லவனின் மனமும் காற்றில் ஆடும் சுடராகவே அலைபாய்ந்தது.

நல்முத்தைப் பொத்தி வைத்துக் கொண்டு ஆழ்கடல் அடியில் உலாவரும் சிப்பியென தன் உள்ளத்தில் தியோதாராவை பொத்தி வைத்துக் கொண்டு கடற்பரப்பின் மீது இரவு பகல் என ஆறு திங்கள்களாக பயணித்து தீவை வந்தடைந்துவிட்டான்.

அவனது இந்தக் கடற்பயணத்தின் காரணம் தியோதாரவை அவள் நாட்டுக்குக் கொண்டு சேர்ப்பதாகக் கொடுத்த அந்த வாக்குறுதிதான் என்றாலும், அதன் பின்னணியில் வில்லவனுக்குள் இரண்டு தனிக் காரணங்கள் இருந்தன.

முதலாவதாக, தியோதாரா தன் கனவில் தோன்றி தன்னை ஆட்கொண்டவள் என்பதை அவளிடம் தெரிவித்து விட வேண்டும்!

இரண்டாவதாக, தன் உள்ளத்தில் குடிகொண்டுவிட்ட அந்த கிரேக்கத் தாரகை பிறந்த தாயகத்தை கண்டுவர வேண்டும்! அதன் வழித்தடங்கள் தனக்கு அத்துப்படியாக வேண்டும்! இத்தீவோடு நட்பும் வணிகமும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

அந்த இரண்டு காரணங்களைத் தன்னகத்தே சுமந்துதான் வில்லவன் இந்தக் கடற்பயணத்தைத்



தொடங்கியிருந்தான்.

முதற்காரணமான அவனது கனவை ஏனோ வெளிப்படுத்தஇயலாமலேயே நாட்கள் ஓடிவிட்டன. தன் காதலை அவன் மறுத்துவிடுவளோ என்ற பெரும் தயக்கம் அவனைப் பாடாய்ப்படுத்திய வண்ணமே இருந்தது.

வான்வெளியில் தோன்றி மின்னும் இந்த விடிவெள்ளியைப் போல், மனவானில் தோன்றிச் சிரிக்கும் தியோதாரா தன் வாழ்வின் விடிவெள்ளியாகும் நாள் என்று வரும்? என்ற எண்ணம் மேலோங்கியதில், அவனது முகத்தில் இளநகை அரும்பியது.

சிலையென வான்பரப்பை நோக்கிக் கொண்டிருந்த வில்லவன், தன்னை நெருங்கி வந்து நிற்கும் வளவத்திரையனை உணராதிருந்தான்.

ஓசையின்றி வந்து நின்ற வளவத்திரையன் சில நொடிகள் வில்லவனையும், வான்பரப்பையும் கூடவே கடற்பரப்பையும் பார்வையால் அளந்தவன் மெலிதாய் வினவினான்.

“விடிவெள்ளியில் அப்படியென்ன அதிசயம் தெரிகிறது இளவரசே?”

அந்தக் குரல் கேட்டுத் திரும்பிய வில்லவன் சற்றே வியப்புற்றான்.

“வா திரையா! எனக்குத்தான் உறக்கம் பிடிக்காமல் நிற்கிறேன் என்றால், நீயும் உறக்கம் வராமல்தான் உலவிக் கொண்டிருக்கிறாயா?”

“கண்ணயரலாம் என்றுதான் இருந்தேன். திடீரென ஏதோ ஓசை கேட்கவே, வந்த தூக்கம் கலைந்து விட்டது. பிறகு ஓசை வந்த காரணம் தேடினேன். தானாகக் கால்கள் என்னை இங்கே கொண்டு வந்து நிறுத்திவிட்டன!” அவன் சொன்னதைக் கேட்டு, வில்லவன் மௌனப் புன்னகைப் பூத்தான்.

பதிலேதும் தராமல் மலர்முகமாய் மீண்டும் விடிவெள்ளியை நோக்கத் தொடங்கியவனை ஆராய்ந்தான் வளவத்திரையன்.

“உறக்கமில்லாமல் தவிப்பவனையும்




நித்திரா தேவி தழுவிக் கொள்ளும் இந்த இரண்டாம் சாமத்திலும் உங்களுக்கு உறக்கம் வரவில்லையா?" ஒரு பக்கமாகத் தலைசாய்த்து வில்லவனைக் கூர்ந்தபடி கேட்டான்.

"இல்லை!" முறுவலுடன் கூறினான் வில்லவன்.

"ஆளைச் சாய்க்கும் கடுங்கோடையில் பகற்பொழுதைக் கழித்த பின்னுமா உடல் களைக்கவில்லை?"

"இல்லை!"

"எடுத்த காரியத்தில் கண்ணாய் இருந்து, எதிர்ப்பட்ட இன்னல்களை எல்லாம் கடந்து, இத்தனை நாட்களையும் கடந்து எல்லையைத் தொட்டுவிட்டீர்களே! அப்படியிருந்துமா உறக்கம் வரவில்லை?"

"இல்லை!"

"கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டோம் என்ற மகிழ்விழியே தனைகளுக்கு இந்நேரம் உறக்கம் வந்திருக்க வேண்டுமே! அதுவும் இல்லையா?"

"இல்லை!"

"அப்படியானால் உங்கள் உடல் நிலையையை மட்டுமல்ல, மனநிலையையும் சேர்த்தே ஆராய வேண்டும்!"

"அதைத்தான் ஆராய்ந்து கொண்டு இருக்கிறாயே!.. சரி, நீ ஏன் இந்த நேரத்தில் அலைந்து கொண்டிருக்கிறாய்? அதைச் சொல் முதலில்!"

"கடலரசியில் உள்ள அனைவரின் இன்ப துன்பங்களும் உன்னைச் சார்ந்தது என்று அடிக்கடி என்னிடத்தில் முதுகண்ணனார் நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறாரே! அந்த வார்த்தைதான் என்னை இப்போது உறக்கமில்லாமல் அலைகழித்துக் கொண்டிருக்கிறது."

"அந்தக் கடமையில் உன்னை யாரும் குறை சொல்லவே முடியாது வளவா! எனவே அந்தக் கவலை உனக்கு வேண்டாம்! சரி, விடிவதற்கு இன்னமும் நிறைய நேரம் இருக்கிறது! வேண்டுமானால் இந்த விதானத்து அறையிலேயே சற்றுப் படுத்து உறங்கு! கடலரசியை நான் பார்த்துக் கொள்கிறேன்!" என வளவின் தோளைப் பற்றிக் கொண்டு கூறினான் வில்லவன்.

"நன்றாய் இருக்கிறது உங்கள் பேச்சு! உங்களைக் காவலுக்கு நிறுத்திவிட்டு நான் உறங்கினேன் என்று தெரிந்தால் பேரரசர் என் தலையைக் கொய்துவிட மாட்டாரா?" எனப் பொய்யாக ஒரு நடுக்கத்துடன் கூறினான் வளவத் திரையன்.

"தெரிந்தால்தானே?"

"இந்தக் கப்பலில் எது நடந்தாலும் அது பேரரசருக்கு தெரியாமல் இருக்காது!"

"தகவல் கொடுப்பவனே நீதானே!"

"என்னையும் தாண்டி இங்கிருந்து பல தகவல்கள் பல வடிவில் சேரநாட்டுக்குச் சென்றிருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்!"

"இங்கிருந்து அங்கு சென்ற தகவல்கள் கிடக்கட்டும். அங்கிருந்து இங்கு உனக்கு வந்த தகவல்கள் இருந்தால் சற்றுக் கூறேன்! எனக்கோ உறக்கம் பிடிக்கவில்லை! உனக்கும் அந்த நிலைதான்! எனவே தாயகத்து நிலவரங்களைப் பகிர்ந்து கொள்ள இது சரியான நேரம்தான் நமக்கு!"


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

“அங்குள்ள நிலை அறிந்துக்கொள்ளும் ஆர்வம் சரிதான்! ஆனால் இங்குள்ள நிலையை ஆராய்ந்தீர்களா?”

வளவத்திரையன் வழக்கமாகவே பொடிவைத்துப் பேசுவதில் வல்லவன்! ஆனால் வந்ததில் இருந்து தன்னைக் கேள்விகளாலேயே துளைக்கின்றானே!.. என்ன காரணமாக இருக்கும்? என்ற எண்ணம் வில்லவனுக்குள் ஓடிக் கொண்டிருக்கும் போதே அவனது மனவோட்டத்தை கண்டறிந்தவன் போல வளவத்திரையன் கூறினான்.

“சரி, அதிகமாக யோசிக்காதீர்கள்! நான் இங்கு வந்தது, நான் கவனித்ததை நீங்களும் கவனித்திருக்கிறீர்களா என்பதை அறிந்து கொள்ளத்தான்!”

“நன்றாகப் பாருங்கள்!” எனத் தன் சுட்டுவிரலை தென்மேற்கு திசைநோக்கி நீட்டியபடியே கூறினான் வளவத்திரையன்.

அவன் காட்டிய பக்கம் கண்களைக் கூர்மையாக்கினான் வில்லவன்.

கடற்பரப்பில் கவிழ்ந்திருந்த இருளில் கண்களுக்குச் சட்டென எதுவும் புலப்படவில்லை ஆனால், சற்றைக்கெல்லாம் தொலைதூரத்தில் மின்மினிப் பூச்சிகளின் மினுக்கலென மங்கலாக சில வெளிச்சப் புள்ளிகள் தோன்றி மறைவதைக் கண்டான் வில்லவன்.

“பார்வைக்குச் சரியாய் தெரியவில்லை வளவத்திரையா!”



“வளவா! நீ எதைக் கவனித்தாய் என்று நான் என்ன கண்டேன்?”

“நான் கண்டதை இப்போது நீங்களும் காணலாம்!” என்றவனின் சுட்டுவிரல் கடற்பரப்பில் ஒரு திசையைச் சுட்டியது.

வளவத்திரையன் கட்டிய திசையில் விரிந்த கடலைத் தாண்டி பெரிதாய் ஒன்று தெரியவில்லை என்பதால், கண்களைக் கூர்ந்த வில்லவன் “என்ன அது?” என வினவினான்.

“என் மனதுக்கும் அது சரியெனப் படவில்லை இளவரசே!”

வளவத்திரையன் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியுடன் அவன் பக்கம் திரும்பினான் வில்லவன்.

வளவத்திரையனின் பார்வை தொலைதூரத்து வெளிச்சப்புள்ளிகளின் மீதே நிலைகுத்தி நின்றது.

(கனவு தொடரும்...)


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
15th
ANNIVERSARY


Thank You

# இரகசியம்

கூட்டம் கூட்டமாகப் பறவைகள்
படபடத்துப் பறக்க
நின்று கொண்டிருக்கும்
மரம் போல
வார்த்தைகள் எல்லாம்
வடிந்த இருப்பு.
அமைதியின் நிழலில்
எஞ்சியவை
ரகசியம் ஆகின்றன.
மரமும் பறப்பது போல்
படபடக்கிறது.

காற்றுக் கடலில்
தன்னை பிணைத்துக்
கொண்டு நிற்கிறது
நீர், துளியாக.
மற்றொரு துளியின்
அருகில் பிடிப்புடைந்து
புதியதொரு பிணைப்புடன்
உருள்கிறது
இன்னுமொரு
துளியை நோக்கி.

**அனுக்ரகா**

# மன்றத்தில் ஒரு கால்

மன்றத்தில்தான் வருவேன் என்று
நீ சொன்ன வாக்கை மறந்து
குவலயம் எங்கும் தேடியலைந்து
நீர் குடிக்கப் பொய்கை அடைந்து
குகை தேடும் படலத்தின் முடிவில்
கிடைத்தது
பசும்பொன் கடந்த கானம்

எஞ்சிய சொற்களை
ஒன்று திரட்டி
ஒற்றைக் கூந்தலில்
மாலை தொடுத்து
நடன மங்கைக்கு அணிவித்து
பதிலாகக் கால் சலங்கையின்
நாதத்தை மட்டும்
கேட்டுப் பெறும் வைபவம்
நிறைவேறும் தருணத்தில்
மன்றம் நிறைத்துப் பொழிந்த
மழையின் அருளால்
குளிர்ந்தது மேனி

தவத்திற்கு
ஒற்றைக் கால் போதுமெனில்
இன்னொரு காலை என்ன செய்ய?

**ஆனந்த்**

# மனதின் நிர்வாணங்கள்

அந்த இரவோடு
மறந்திடப் போகும்
முகங்களைச் சந்திப்பதுபோல்
அவ்வளவு எளிதாக இருப்பதில்லை
நம்முன் நிர்வாணமான
மனது கொண்டவர்களைச் சந்திப்பது.

அவர்களைச் சுற்றியிருந்த
பொய்களைக் கலைத்து எறிந்துவிட்டுப்
பார்க்கையில்
அவர்களின் எடை கூடிச் செல்கிறது.
மனதின் நிர்வாணங்களைச்
சந்திக்கையில்

அவர்கள் நம்மையும்
உண்மையாக இருக்கச்
சொல்லாமல் சொல்கிறார்கள்.
அவர்களின் இரகசியம் கொண்டு
நம்மனதின் இரகசியங்களை
உடைக்கிறார்கள்.

சந்திப்பின் இறுதியில்
இவர்கள் நம்மை மயிலிறகைப் போல
மென்மையாக்கிச் செல்கிறார்கள்

**முகரியன்**

காதல் கவிதை எழுதுபவனாக
இருப்பதன் நன்மைகளை
கவிதையாக்குகிறேன்.
இல்லாத காதலிகள்தான்
இன்னும் இன்னும்
காதலிக்கச் சொல்கிறாள்கள்.
பேப்பரோ, பேனாவோ
அதீதகாதலைச் சலிப்பதில்லை.

இவன் காதல் காகிதங்களை மட்டும்
காயப்படுத்துகின்றன.
எல்லோருக்கும் சேர்த்து
இவன் காதலித்துக் கொண்டிருப்பான்.
முன்னனுபவம் இல்லாத
இவன் காதல் கவிதைகள்
அன்பில் தொடங்கி
அன்பிலேயே முடிகின்றன.

கவிஞனின் காதல் தவறுகள்
கவிதைகளிலேயே கண்டுபிடித்து
திருத்தப்படுகின்றன.
ஆனால் என்ன
அவன் மீண்டும் மீண்டும்
ஏதாவது ஒரு தவறைச்
செய்துகொண்டே தான்
இருக்கப்போகிறான்.

# காதல் கவிஞன்

**ஆதவன்**

## ஓடிடியில் வரும் அருண் விஜய்!



இங்கேயும் மிஷன் சக்சஸ் ஆகட்டும்!

அருண் விஜயின் மிஷன் சாப்டர் 1 படத்தின் ஓடிடி ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொங்கலுக்கு நிறைய படங்கள் வெளியானதால், தொடக்கத்தில் அயலான், கேப்டன் மில்லர் படங்கள் நல்ல வரவேற்பைப் பெற்ற சில நாட்களுக்கு பின், மிஷன் சாப்டர் 1 படத்தை வெளியிட்ட திரையரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்தன. ஏ.எல். விஜய் இயக்கியிருந்த இப்படத்தில் அருண் விஜய்யுடன் எமி ஜாக்சன், நிமிஷா சஜயன் உள்ளிட்டோர் நடித்திருந்தனர். இப்படம் பிப்ரவரி 16 ஆம் தேதியன்று நெட்ஃப்ளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## லவ்வர் படத்தில் நடிப்புப் புலி!



வசூலும் புலிப்பாய்ச்சலாக இருக்கட்டும்!

‘குட்நைட்’ படத்தில் தனது நடிப்பால் அனைவரையும் திரும்பி பார்க்க வைத்தவர் மணிகண்டன். இவர் தற்போது புதுமுக இயக்குனர் பிரபு ராம் இயக்கத்தில் லவ்வர் என்ற திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்துள்ளார். இதில் கவுரி பிரியா ரெட்டி நாயகியாக நடித்திருக்கிறார். இவர் ஏற்கெனவே நடிப்பில் புலியென அண்டை மாநிலங்களில் பெயரெடுத்தவர். மில்லியன் டாலர் நிறுவனம் தயாரித்துள்ள லவ்வர் திரைப்படம் ரூ. 6 கோடிக்கும் மேல் உலகளவில் வசூல் செய்துள்ள நிலையில் ஓடிடி தளத்தில் வெளியாகவிருக்கிறது.

## ‘சோல்ஜரில்’ சாய் பல்லவி!

சிவகார்த்திகேயன் தன் 21வது படமாக கமல்ஹாசன் தயாரிப்பில் ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் நடித்து வருகிறார். சாய் பல்லவி நாயகியாக நடிக்கும் இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்கிறார். படப்பிடிப்பு காஷ்மீர் மற்றும் சென்னையில் நடைபெற்று வருகிறது. மேலும், இப்படத்தின் பெயர் டீசர் வருகிற பிப்.16 ஆம் தேதி வெளியிடப்படும் என தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ள நிலையில், இப்படத்திற்கு ‘சோல்ஜர்’ என பெயரிட்டுள்ளதாகப் புதிய தகவல் வெளியாகியுள்ளது.





## இருமொழிகளில் நாயகனாகும் நவீன் சந்திரா!

## வசூல் ராணியின் வருகை?!

## இட– வல வலம் வரும் சந்திரன்!?

லோகேஷ் அஜில்ஸ் இயக்கத்தில் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் ஒரே நேரத்தில் உருவாகியுள்ள ‘லெவன்’ படத்தில் பிரபல தெலுங்கு நடிகர் நவீன் சந்திரா நாயகனாக நடித்திருக்கிறார். சரபம், சிவப்பு, பிரம்மன் ‘ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்’ உள்ளிட்ட தமிழ் படங்களிலும் இவர் நடித்துள்ளார். ரியா ஹரி நாயகியாக நடித்திருக்கிறார். அபிராமி, ரித்விகா உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். இசை டி. இமான். “ஆரம்பம் முதல் இறுதி வரை பார்வையாளர்களை இருக்கையின் நுனிக்கே கொண்டு வரும் விறுவிறுப்பான புலனாய்வு திரில்லராக ‘லெவன்’ அமையும்.” என்கிறார் இயக்குனர் லோகேஷ் அஜில்ஸ்.



# தல வலம்

## பாசுபதேஸ்வரர்

### திருவேட்களம் பாசுபதேசுவரர் கோயில்

**புவனகிரி செயபாலன்**



‘அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணல்
ஆரழல் அங்கை அமர்ந்திலங்க
மந்த முழவம் இயம்ப
மலைமகள் காண நின்றாடிச்
சந்தமிலங்கி நருதலை கங்கை
தன்மதியம் மயலே ததும்ப
வெந்த வெண்ணீறு மெய்பூசும்
வேட்கள நன்னகாரரே!’
—திருஞானசம்பந்தர் பதிகம்.

தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்களில் முதன்மையானது சிதம்பரம். அடுத்து காவிரி வடகரையில் உள்ள இரண்டாவது தலம்.

மூலவர் —பாசுபதேஸ்வரர்

அம்பாள் —சற்குணாம்பாள், நல்ல நாயகி

தீர்த்தம் —நள தீர்த்தம், கிருபா தீர்த்தம்

தலவிருட்சம் —மூங்கில்

பூஜை —காமியாகமம்

பெயர்

திருமகள் விரும்பி உறையும் இடமாதலால் திருவேட்களம் என்றும், மேன்மையான வேள்வி நிகழ்ந்ததால் திருவேள்விக் களம் என்றும்,

வீரம் பொருந்திய வேடர்கள் இங்கு கூடி வாழ்ந்ததால் திருவேடர்கள் களம் என்றும், அர்ஜுனனுக்கும் சிவபெருமானுக்கும் போர் நிகழ்ந்த இடமாதலால் திருப்போர்க்களம் என்றும், பழங்காலத்தில் மூங்கில் மரங்கள் நிறைந்த காடாக விளங்கியதால் திருவேழம் களம் என்றும் பல காரணப் பெயர்கள் இருந்ததாகவும் சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் உள்ள கல்வெட்டில் இத்தலத்தை ஜனநாத நல்லூர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழர்கள் கால ஆட்சியில் இத்தலத்தை கீழ்த்தில்லைவனம், மூங்கில் வனம், நாரதர் தலம், வேள்விக்களம், வேட்களம், விசயனன் போர்க்களம், சிங்கவர்மேச்சுரம் எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்டு வந்ததாக கல்வெட்டுகளும் பழங்கால பாடல்களும் சான்றளிக்கின்றன.

தல வரலாறு

பாண்டவர்கள் காமிய வனத்தில் வனவாசம் இருந்தபோது துரியோதனன் அங்கும் அவர்களுக்கு தீங்கிழைத்தான். வியாச முனிவர் தர்மரிடம் சென்று “துரியோதனனை வெல்ல சிவனிடத்தில்



பாசுபதாஸ்திரம் உள்ளது. அதுதான் கௌரவர்களை வெல்லக்கூடியது. அதை அர்ஜுனன் மட்டும்தான் பெற முடியும் என்று கூறி கூறினார்.

கண்ணன் அர்ஜுனனிடம், “நீ அனைத்து அஸ்திரங்களையும் உன் மானசீக தந்தையான இந்திரனிடமிருந்து பெற்றாய். ஆனால் பாசுபதாஸ்திரத்தை சிவனிடமிருந்துதான் பெற வேண்டும். அதற்கு இந்திரனின் அனுமதி பெற வேண்டும்!” என்றார்.

அர்ஜுனன், மூங்கில் காடாக இருந்த இத்தலத்தில் தவம் செய்ய ஆரம்பித்தான். இதை அறிந்த துரியோதனன், மூகாசுரன் என்ற அசுரனை அழைத்து ‘அர்ஜுனனை கொன்றுவா!’ என்று ஆணையிட்டான். அதன்படி முகாசுரன் பன்றி உருவம் எடுத்து, அர்ஜுனனைக் கொல்ல வந்தான்.

இந்த பன்றியின் மேனி பல நிறம் கலந்த ஒளி உருவம் உடையது. பற்கள் வச்சிராயுதம் போன்றன. அதன் உருவம் மலைக்கு ஒப்பானது அது நடக்கும் போது எட்டு வகை குன்றுகளும், எட்டு வகை யானைகளும் நடுங்கிவிடும் என பாரதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூகாசுரன் கொல்லப்போவதை அறிந்த சிவனும் பார்வதியும், வேடனும் வேட்டுவச்சியாகவும் உரு எடுத்து வலை, கயிறுகளை எடுத்துக்கொண்டு வேடர்களுடன் புறப்பட்டனர்.

நான்கு வேதங்களும் நாய்களாக உருமாறி உடன் சென்றன. சிவன், வேடன் உருவில் வந்து, பன்றி உருவத்தில் இருந்த மூகாசுரனைக் கொன்றார். இந்த சமயத்தில்



பன்றியின் மீது அர்ஜுனனும் அம்பு விட்டான். பன்றியை யார் கொன்றது என சிவனுக்கும் அர்ஜுனனுக்கும் சொற்போரும் மற்போரும் நடந்தது.

போரில் அர்ஜுனன் வேல் முறிந்தது. கோபமடைந்த அர்ஜுனன் முறிந்த வில்லால் வேடனை அடித்தான். அந்த அடி மூவுலகில் உள்ள அனைத்து உயிர்களின் மீதும் விழுந்தது. வேடுவப் பெண்ணான பார்வதி கோபமடைந்தாள். உடனே சிவன் பார்வதியிடம் "நீ லோகமாதா! நீ கோபப்பட்டால், இவ்வுலகம் தாங்காது!" எனச் சமாதானப்படுத்தினார்.

"சற்குணா! (நல்ல நாயகி) தள்ளி நில்!" என்றார். சிவன் தன் கால் பெருவலால் அர்ஜுனனைத் தூக்கி எறிந்தார். மேலே சென்று வந்த அர்ஜுனன், சிவ மந்திரத்தை ஜெபித்தபடி இத்தலக் கிருபா கடாட்ச தீர்த்தத்தில் விழுந்தான்.

சிவன் பார்வதி தேவியுடன் அவனுக்குக் காட்சி கொடுத்து, பாசுபதாஸ்திரத்தை தந்தருளினார். அர்ச்சுனன் வில்லால் அடித்த தடத்தை இன்னும் மூலவர் திருமேனியில் காணலாம்.

உசுப்பூர்

சிவன் மூகாசுரன் என்னும் பன்றியைத் தன் வாயினால் உசுப்பி எழுந்து ஓடிய போது, வில்லால் அடித்த இடம் உசுப்பூர் என்றானது. இந்த ஊர் இத்தலத்திற்கு தெற்கே 3 கி.மீ. தூரத்தில் உள்ளது.

வில்லிறுத்தான் குட்டை

இத்தலத்திற்கு தென்மேற்கில் முக்கால் கி.மீ. தூரத்தில், சிவன் அர்ஜுனனின் வில்லை முறித்த இடம். இந்த இடத்தை வில்லிறுத்தான் குட்டை என்று குறிப்பிட்டனர். காலப்போக்கில் மருவி வில்லுத்திரன் குட்டை என்று வழங்கப்பட்டது. தற்போது அந்த இடம் தெற்கிருப்பு அருகில் வயல் வழியாக உள்ளது.

இந்த ஊர்ப் பெயர்களைப் பார்க்கும்போது சிவனுக்கும் அர்ஜுனனுக்கும் இத்தலத்தில் சண்டை நடந்தது என நம்பத் தோன்றுகிறது.

கோயில்

ஆயிரம் வருடங்களுக்கு மேல் உள்ள பழமை வாய்ந்த கோயில். அமைத்தவர்கள் சோழர்கள். தற்போது உள்ளது 18 ஆம் நூற்றாண்டை சார்ந்தது. சாஸ்திரப்படி கோயில் எப்படி அமைக்க வேண்டும் என்று உள்ளதோ அதன்படி கட்டப்பட்டது. பல்லவ அரசர்களால் செங்கற்களால் கட்டப்பட்ட இக்கோயிலை 1914 இல் கானாடு காத்தான் பெற்ற பெருமாள் செட்டியார் பெருமுயற்சியால் கருங்கற்களால் செப்பனிடப்பட்டது. மூன்று நிலையுடன் கூடிய ராஜகோபுரம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. எதிரே நாகலிங்க மரமும் குளமும் உள்ளன.

இக்கோயில் கோபுரத்தின் வழியே சென்றால் பிரகாரத்தில் சித்தி விநாயகர், சோமாஸ்கந்தர்




சன்னதிகள் உள்ளன. கோஷ்ட மூர்த்திகளாக உச்சி விநாயகர். நர்த்தன கணபதி. தட்சிணாமூர்த்தி. லிங்கோத்பவர். பிரம்மா. உள்ளனர். சண்டிகேஸ்வரர் சன்னதி உள்ளது. நால்வர்களை அடுத்து சொக்கநாதரும் மீனாட்சியும் காட்சி தர, அடுத்து சுப்பிரமணியர், மகாலட்சுமி சன்னதிகள்.

தலவிருட்சம் —மூங்கில். பைரவர், நவகிரகங்கள், சந்திரன், சூரியன், தட்சிணாமூர்த்தியின் காலடியில் உள்ள முயலகன் இடப்பக்கம் தலை வைத்துள்ளார். தீர்த்தம் —கிருபா தீர்த்தம். கோவிலுக்கு எதிரில் உள்ளது. இந்த இடத்தில் ஈசன் அர்ஜுனனுக்கு கிருபை செய்ததால் தீர்த்தத்திற்கு கிருபா தீர்த்தம் என்று பெயர். நாரதர் இவ்விடத்தில் சிவனைக் கண்டதால் நாரத தீர்த்தம் என்றும், பார்வதி தேவி இங்கு கங்கையை உண்டாக்கியதால் கங்கை தீர்த்தம் என்றும் குறிப்பிடப்படுகிறது.

அம்மன்

முன் மண்டபத்தின் வலப்புறம் அம்பாள் சன்னதி. நின்ற கோலம். நேரே ஈசனின் சிவலிங்கத் திருமேனி. அர்ஜுனனுக்கு அருளிய பாசுபதேஸ்வரர் சன்னதி வாயிலில் முன் இருபுறமும் தலத்தைப் பற்றிய பதிகக் கல்வெட்டுகள். தெற்கு நோக்கி அம்பிகையின் சன்னதியின் நான்கு தூண்களிலும் முறையே அர்ஜுனன் தன் ஆயுதங்களை வைத்தல், ஒரு காலில் நின்று தவம் புரிதல், ஈசன் வேடன் வடிவம் எடுத்தல், சிவனும் அர்ஜுனனும் சண்டையிடுதல் போன்ற காட்சிகள் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன.

நல்ல நாயகி

சுற்றிலும் மதில் சூழ்ந்து தெற்கு நோக்கி கட்டப்பட்டிருக்கும் சன்னதியில் தாமரை ஆசனத்தில் நான்கு கரங்களுடன் காட்சியளிக்கிறார். முன் இரண்டு கைகளில் முறையே தாமரையும் லிங்கோத்பவ மலரையும் ஏந்தி உள்ளார். அடுத்த இரு கைகளில் அபய வரத ஹஸ்தத்துடன் அருள் பாலிக்கின்றாள்.

சிவனும் பார்வதி தேவியும் வேடன் வேடச்சி உருவங்களில் உற்சவ திருமேனி. வேடுவ வடிவத்தில் இடது கையில் வேலும், வலது கையில் பாசுபதாஸ்திரம் பிடித்த நிலை. அர்ஜுனன் தவக்கோலத்தில் தோளில் வேலும் அம்புக் கூடையுடன் இரு கைகளைக் குவித்த வண்ணம் உள்ளார்.

அரசர் என்பதால் தலையில் மகுடத்துடன் கூடிய சுமார் ஒன்றரை அடி உயரத்தில் உள்ளார். பாசுபதம் ஏந்திய மூர்த்தியும் அர்ஜுனன் திருமேனியும் இக்குளத்தில் இருந்து கிடைத்ததாக சொல்லப்படுகிறது.

பதிகம்

திருநாவுக்கரசர்,

திருஞானசம்பந்தரால் பதிகங்கள் பாடிய தலம். இங்குள்ள முருகனை அருணகிரிநாதர் போற்றிப் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர் இத்தலத்தில்




சில நாள் தங்கி இருந்து நாள்தோறும் தில்லை நடராஜரை சென்று தரிசித்து பதிகம் பாடி வழிபட்டார். திருநாவுக்கரசர் நடராஜரை வழிபட்ட பின் இத்தலத்திற்கு வந்து வழிபட்டவுடன் திருக்கழிப்பாலை சென்று வழிபட்டு சென்றுள்ளார். நாரதர் வழிபட்ட தலம்.

முருகன்

இத்தலத்தில் முருகப்பெருமான் பன்னிரு திருகரங்களுடன், தனது தேவியர் இருவருடன் மயில் மீது கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். திருவாசியுடன் ஒரே கல்லில் அமைந்த திருவுருவம். இந்த முருகனை அருணகிரிநாதர் திருப்புகழில் போற்றிப் பாடியுள்ளார். திருவிழாக்கள் ஆண்டுதோறும் சித்திரை முதல்நாள் வைகாசி விசாகம் ஆனி திருமஞ்சனம்

ஆடி —வெள்ளிக்கிழமைகள், ஆவணி —விநாயகர் சதுர்த்தி, புரட்டாசி —நவராத்திரி, ஐப்பசி —தீபாவளி, கார்த்திகை —தீபம், மார்கழி —ஆருத்ரா, தை —வெள்ளிக்கிழமைகள், மாசி —சிவராத்திரி, பங்குனி —உத்திரம் போன்ற நாட்களிலும் சைவ சமயக் குறவர் நால்வர் பிறந்த நட்சத்திர நாட்களிலும் சிறப்பான பூஜைகளும் வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

வைகாசிமாதவிசாகநட்சத்திரத்தில் ஈசன் அர்ஜுனனுக்கு பாசுபதம் வழங்கும் நிகழ்ச்சி வெகுசிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

பிரார்த்தனை

பேச்சில் குறைபாடு உள்ளவர்கள் இங்கு உள்ள ஈசனை வழிபாடு செய்து இங்கு பிரசாதமாக தரப்படும் மண் உருண்டையைச் சாப்பிட்டால் விரைவில் பேச்சு வரும் என்பது நம்பிக்கை!

திருமணத் தடை உள்ளவர்கள் வழிபாடு செய்து பலன் அடைகிறார்கள் என்பது ஐதீகம். சூரியனும் சந்திரனும் அருகருகே இருப்பதால் சூரிய சந்திர கிரகணங்களின் போது வழிபாடு செய்வது சிறப்பு!

நேர்த்திக்கடனாக சிவனுக்கும் அம்பாளுக்கும் அபிஷேகம் செய்து புது வஸ்திரம் சாற்றுகின்றனர்.

தினமும் காமிய ஆகம விதிகளின்படி ஐந்து கால பூஜை நடைபெறுகிறது. கும்பாபிஷேகம் 02. 07.2006—ல் நடைபெற்றது.

கோயில் திறக்கும் நேரம்

தினமும் காலை 6:30 மணி முதல் 12 மணி வரையிலும். மாலை 4:30 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இருப்பிடம்

சிதம்பரத்திலிருந்து மூன்று கி.மீ. தூரத்தில் அண்ணாமலை பல்கலைக்கழக வளாகத்துக்குள் உள்ளே, கிழக்கில் அமைந்துள்ளது. சிதம்பரம் பேருந்து நிலையத்திலிருந்து ஆட்டோ வசதி உள்ளது.

(தொடரும் வலம்.....)

# புத்தக விமர்சனம்

## திருக்குறளில் இன்றைய மேலாண்மை

**ஆசிரியர்:** இரா.மனநாதன்

**விலை :** ரூ. 250




**வெளியீடு:**

**நோஷன் பிரஸ்.காம்**
**Notion Press, Inc.**
**800, West EI Camino Real #180,**
**California USA 94040**
**Notion Press Media Pvt Ltd,**
**#7, Red Cross Road,**
**Egmore, Chennai, Tamil Nadu 600008**
**Email ID: publish@notionpress.com**
**Phone Number: +91 44 46315631**

திருக்குறள் எழுதப்பட்ட காலம் தொடங்கி இனிவரும் காலம் வரை அனைவராலும் எடுத்தாளப்படும் பல கருத்துகளை கொண்டுள்ளது. இன்றைய காலத்தில் ஒரு நிறுவனத்தை மேலாண்மை செய்யும் வகையில் திட்டமிடல், ஆராய்ச்சிப் பயன்முறை, வணிகமுறை, சொல்வன்மை உள்ளிட்ட கருத்துகளை ஆசிரியர் குறள்கள் வழியே விளக்கியுள்ளார். வள்ளுவர் ஒரு அரசனுக்குக் கூறிய அறிவுரைகளைக் கூர்ந்து நோக்கினால் அவை அனைத்தும் இன்றைய மேலாண்மைக்கு வெகுவாகப் பொருந்தி வருகிறது என்பது ஒரு வியத்தகு உண்மை.

குறிப்பாக அமைச்சு, ஒற்றாடல், தூது போன்ற குறள்கள் இன்றைய மேலாண்மைக்கு மிகவும் பொருத்தமாக உள்ளன. தற்போதைய தொழில் வளர்ச்சியில் இன்றைய இளைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் திருக்குறளின் வழியே புத்தாக்கத்தை தருகிறார் நூலாசிரியர். ஒவ்வொரு குறளுக்கும் அதற்கு ஏற்ற நிகழ்கால எடுத்துக்காட்டுகளை ஆசிரியர் முன்வைப்பது வாசகருக்கு கூடுதல் ஆர்வத்தை தூண்டுகிறது. தொழில், வணிகத் தலைவர்கள், உரிமையாளர்கள், வணிகத் துறை மாணவர்கள் என அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

# செயல்

புவனகிரி கல்யாண்

உழைப்பாளர் மக்கள் கட்சியின் மாநில மாநாடு வழக்கமாய் சென்னை, வேளாங்கண்ணி, நாகப்பட்டினம் என்று கடற்கரை நகரங்களில் நடக்கக்கூடிய இந்த கட்சியின் மாநாடு, இந்த ஆண்டு ஏனோ வீரநாராயணன் ஏரியில் நடக்கிறது.

ஏரியில் மாநாடு நடத்துவது என்பது நிச்சயம் கின்னஸ் சாதனைக்கு உரியது.

மாநாடு நடைபெறும் நாளை சிறு ஈரப்பதம்கூட இல்லாத சித்திரை பௌர்ணமி நாளாக தேர்ந்தெடுத்திருப்பது வடிகட்டிய புத்திசாலித்தனம்!

கட்சித் தலைவர் காத்தவராயன் 80—களில் துவங்கி இந்த 40 ஆண்டுகளில் நிறைய ஏற்ற இறக்கங்களைப் பார்த்து விட்டார்.

இதுநாள் வரை இவர் கூட்டணி வைக்காத கட்சிகளே இந்தியாவில் இல்லை என்று கண்ணை மூடிக்கொண்டு பந்தயம் கட்டலாம்.

சில வருடங்களுக்கு முன்பு வரை இவருடைய கட்சியின் போராட்டங்களால் தமிழகமே ஸ்தம்பித்து போய் முடங்கி கிடந்திருக்கிறது என்பது வரலாற்று உண்மை!

இவர் இரண்டு மாதங்களுக்கு முன்னதாக வீரநாராயணன் ஏரியில் மாநில மாநாடு என்றதும், நிறைய பொதுநல வழக்குகள் தொடரப்பட்டன.

"உழைப்பாளர் மக்கள் கட்சியின் தலைவர் மாநில மாநாடு நடத்துவதற்காக தேர்வு செய்திருக்கும் இடம், தற்போது சென்னைக்கு குடிநீர் வழங்கி வரும் முக்கியமான நீர் ஆதாரமாகும். இது தவிர பல்லாயிரக்கணக்கான ஹெக்டேர் விவசாய சாகுபடிக்கான நீர் தேவையை வழங்கி வரும் முக்கியமான ஏரியாகும்.

இவர்கள் மாநாடு நடத்தினால், மதுபான பாட்டில்களும், பாலிதீன் கழிவுகளும் ஏரியின் ஆயுளை வெகுவாக பாதிக்கும் என அஞ்சுகிறோம்."

பொதுநல வழக்கை விசாரித்த நீதிபதி, கட்சித் தலைவர் காத்தவராயனை நேரில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

"எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டுமல்லாது, தமிழகத்தையே குடிகார சமுதாயமாக மாற்றிவிட்ட சூழ்நிலையில் மதுபான பாட்டில்கள் பற்றியும், பாலிதீன் பொருட்களின் கழிவுகளைப் பற்றியும் கருத்து தெரிவிப்பது ஏற்புடையது அல்ல!

மதுபான பாட்டில்களோ, பாலித்தீன் பொருட்களோ தமிழகத்தில்... ஏன் இந்தியாவெங்கும் வீசப்படுவதில் எனக்கு உடன்பாடு இல்லைதான்!

ஆனால் ஒரே ஒரு அரசாணையின் மூலம்



இதையெல்லாம் தடுத்து நிறுத்தி விடக்கூடிய வல்லமையைப் பெற்றிருக்கும் அரசுகள், இன்னும் இதை ஏன் செய்யவில்லை அல்லது செய்ய மறுக்கின்றன என்பதுதான் என்னுடைய கேள்வி!

பூரண மதுவிலக்கை அமல்படுத்தி இருக்கக்கூடிய குஜராத்தும், மலைப்பகுதிகளில் பாலித்தீன் பயன்பாட்டை கட்டுப்படுத்தி இருக்கும் கேரளாவும், நம்முடைய இந்தியாவில்தானே இருக்கின்றன."

"பிரச்சினையை திசை திருப்பி நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கிறீர்கள். ஏரியில் போடப்படும் குப்பைகளுக்கும், மைதானத்தில் போடப்படும் குப்பைகளுக்கும் வித்தியாசம் உண்டு என்பது கூடவா உங்களுக்கு தெரியாது?"

"மாட்சிமை பொருந்திய நீதிபதி ஐயா அவர்களே! பொதுநல வழக்கு தொடர்ந்துள்ள அன்பர், இப்போதுள்ள சூழ்நிலையையும், எங்கள் கட்சி மாநாடு முடிந்ததும் உள்ள சூழ்நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்து என் மேல் வழக்கு தொடுக்க வேண்டுகிறேன்."

"முடிவாய் என்னதான் சொல்ல வருகிறீர்கள்?"

"எங்கள் கட்சி மாநாட்டின் நோக்கமே வீரநாராயணன் ஏரியைத் தூர்வாருவதுதான்! இதுதவிர மாநாட்டின்போது பயன்படுத்தப்படும் பொருட்களின் கழிவுகளை அகற்றி விடுகிறோம் அல்லது அவைகளை அகற்ற எவ்வளவு செலவு பிடிக்கும் என்பதை நீதிமன்றம் சொன்னால், அந்த தொகையை இப்போதே செலுத்தி விடுகிறோம்!"

வழக்கு தொடுத்தவரிடம் கருத்து கேட்கப்பட்டது.

வீரநாராயணன் ஏரியில் உழைப்பாளர் மக்கள் கட்சி மாநில மாநாடு நடத்துவது பற்றி நீதிமன்றத்திற்கு ஆட்சேபனை ஏதுமில்லை! ஏரியைத் தூர் வாருவது பற்றி சம்பந்தப்பட்ட பொதுப்பணித்துறையிடம் முறைப்படி அனுமதி வாங்கிக் கொள்ள வேண்டும் என்றும், மாநாடு முடிந்ததும் தங்களின் சொந்த செலவில் குப்பைகளை அகற்றி சுத்தம் செய்து தர வேண்டும் என்றும், ஒருவேளை அப்படி செய்யத் தவறினால் நீதிமன்றம் சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் என்றும் எச்சரிக்கிறது.

தூர் வாருவதற்கான அனுமதி கிடைத்தவுடன் தலைவர் காத்தவராயன் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

"என் உயிரினும் மேலான உழைப்பாளர் சொந்தங்களே வணக்கம்!

இதுநாள் வரையில் நாம் எத்தனையோ மாநாடுகளையும், போராட்டங்களையும், பேரணிகளையும் நடத்தி வந்திருக்கிறோம். சில கோரிக்கைகளை முன்வைத்து போராடி அதில் குறிப்பிடத்தக்க வகையில் வெற்றியும்

தமிழ் 15th ANNIVERSARY

பெற்றிருக்கிறோம்.

இப்போது நாம் நடத்த நினைக்கும் மாநாடு நிச்சயம் மாறுதலானது. மாற்றத்திற்கு இதுவே நேரம் என்பதை நாம் அனைவரும் உணரத்தான் வேண்டும்! இந்த மாற்றத்தை நாம் முன்னெடுத்து செல்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைவோம்!

'செயல்! அது ஒன்றே சிறந்த சொல்!' என்பதை நாம் இதுவரை பெற்ற அனுபவங்கள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு மாநில மாநாடு நடத்துவதற்கு வீரநாராயணன் ஏரியை நாம் தேர்ந்தெடுத்து இருக்கிறோம். இந்த சமயத்தில் சம்பந்தப்பட்ட ஏரியைப் பற்றி சில வரலாறுகளை நினைவுபடுத்திக் கொள்வது நல்லது.



கி.பி பத்தாம் நூற்றாண்டில் சோழ மன்னரின் மகன் ராசாதித்தன் என்ற பெருவீரனால் அவனது வீரர்களால் வெட்டப்பட்டது இந்த ஏரி. ஏறத்தாழ ஏரியின் நீளம் 10 கி.மீ., அகலம் 4 கி.மீ., ஆழம் 47 அடியாகவும் உள்ளது. ஏரியின் மொத்த கொள்ளளவு சுமார் 1465 மில்லியன் கன அடி ஆகும்.

1967 — ல் திரு.சி.என்.அண்ணாதுரை அவர்கள் முதல்வராக இருந்தபோது, வீரநாராயணன் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டது.

தற்போது நாள் ஒன்றுக்கு சென்னையின் குடிநீர் வினியோகத்திற்காக வினாடிக்கு 38 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 40 அடிக்கும் கீழ் குறைந்தால் நீரேற்றி அனுப்பப்படுவது நிறுத்தப்படுகிறது.

இப்போதுள்ள ஏரியின் ஆழத்தை 47 அடியில் இருந்து 50 அடியாக உயர்த்தி விட்டால் இன்னும் 20 ஆண்டுகளுக்கு வீரநாராயணன் ஏரியிலிருந்து சென்னைக்கு தட்டுப்பாடு இல்லாத குடிநீரை வழங்கிட முடியும்.

இதுவரை தமிழகத்தை ஆண்டவர்கள் இதுபற்றி யோசித்து இருக்கிறார்களா எனத் தெரியவில்லை. ஏனெனில் இன்றைய அரசியல்வாதிகளில் கற்பனைவாதிகளும், இலக்கியவாதிகளும் நிறைய இருக்கிறார்கள். ஆனால் இலட்சியவாதிகளும் தீர்க்கதரிசிகளும் குதிரை கொம்பே!

காமராஜருக்கு பிறகு நாம் அணைக்கட்டுகள் எதையும் கட்டிடவில்லை! ஆனால் நமக்கு நீர் தரவேண்டிய கடமைப்பட்ட கர்நாடகாவும், கேரளாவும் குறுக்கு அணை கட்டுவதில் தீவிரமாக இருக்கின்றன.

உச்ச நீதிமன்ற உத்தரவின்படி அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் 17 ஆண்டுகளுக்குப் பிறகு வழங்கிய இறுதி தீர்ப்பின்படி நமக்குத் தர வேண்டிய நீரை வழங்க கர்நாடகம் தயாராகவில்லை. பெற்றுத் தர வேண்டிய மத்திய அரசும் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை.

கிருஷ்ணராஜ சாகர் அணை நீங்கலாக கர்நாடகம் காவிரியில் கட்டிய அனைத்து அணைகளும் சட்டத்துக்கு புறம்பானவை. அதாவது மத்திய அரசின் அனுமதி பெறாதவை. ஒரு மாநில அரசு முறைகேடாக நடந்து கொண்டால், அந்த அரசைக் கலைக்க மத்திய அரசுக்கு உரிமை உண்டு.

காரணமே இல்லாமல் எத்தனையோ முறை 356— ஐ பயன்படுத்தி மத்திய அரசு மாநில அரசுகளை கலைத்து இருக்கிறது. உச்ச நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்தாத கர்நாடக மாநில அரசை ஒருமுறை கலைத்தால்தான் என்ன? அல்லது நீரை விடுவிக்க ராணுவத்தின் துணைகொண்டு செயல்படுத்தினால்தான் என்ன?

தண்ணீருக்காக அலையும் சூழலில் உள்ள பரம எதிரிகளான இஸ்ரேலும் பாலஸ்தீனமும் கூட நியாயமான முறையில் தண்ணீரைப் பகிர்ந்து கொள்கின்றன. அவ்வளவு ஏன்? இந்திய அரசால் பாகிஸ்தானுடன் சுமூகமான முறையில் தண்ணீரைப் பகிர்ந்து கொள்ள முடிகிறது. ஆனால் உள்நாட்டில் இது ஏன் முடியவில்லை?

இந்தியாவில் சர்வ வல்லமை பொருந்தியது எது? உச்சநீதிமன்றமா? மத்திய அரசா அல்லது கர்நாடகா அரசா? இந்த வினாவை பொதுநல ஆர்வலர்களிடம் விட்டுவிட்டு நாம் விஷயத்திற்கு வருவோம்.

நாம் லட்சியவாதிகள் என்பது உண்மையானால்

வீரநாராயணன் ஏரியின் ஆழத்தை 47 அடியில் இருந்து 50 அடியாக மாற்றுவதற்கு எத்தனிப்போம். இதை மட்டும் நாம் செய்துவிட்டால் தமிழக தலைநகரமே நம்மை எப்போதும் நினைவில் வைத்திருக்கும்.

இதற்காக செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்! மாநில மாநாட்டிற்காக விளம்பரம் எதுவும் செய்யாமல், அதற்கான தொகையை மண்வெட்டி, கடப்பாரை, தட்டுக்கூடை என வாங்கி சேகரியுங்கள்.

சித்திரை முழு நிலவு நாளில் நிலாச் சோறு உண்போம்!



அதற்கான உணவை அவரவர்களே எடுத்து வந்து விடுங்கள். 'நூறு பேர் பல் குச்சி! ஒருவர் தலைச் சுமை!' என்பதை உணர்ந்து சொல்கிறேன். அவசியம் அவரவர்களுக்கான தளவாடச் சாமான்களோடும், சமைத்த உணவோடும் வந்து விடுங்கள்!

மாவட்ட வாரியாக பிரிக்கப்பட்டு, பின்பு உட்பிரிவுகளாக சட்டமன்ற தொகுதி வாரியாகவும், ஊர் வாரியாகவும் இடங்கள் ஒதுக்கப்படும். கரையை பலப்படுத்தும் வகையில் கரையிலிருந்து 5 மீட்டர் தள்ளி 3 அடி ஆழத்திற்கும் 100 அடி அகலத்திற்குமான மண்ணை வெட்டி ஓரம் அணைக்க வேண்டும்.

முக்கியமாக இன்னொன்று, அன்றைய தினம் நானோ, மாவட்டச் செயலாளர்களோ அல்லது கட்சியின் முக்கிய பொறுப்பாளர்களோ யாரும் எதுவும் பேசப்போவதில்லை!

மாறாக நம்மைப் பற்றியும் நமது செயல்பாடுகள் பற்றியும் இனி நாடே பேச வேண்டும் என்பதுதான் எனது ஆசை! இந்த ஆண்டு மட்டுமல்ல, இனி வரும் மாநில மாநாடுகளும் இதே ஏரியில் நடத்தப்பட்டு ஏரி முழுவதும் மூன்றடி ஆழத்தை மேம்படுத்துவதை நமது லட்சியமாக கொள்வோம்.

உங்களைப் போலவே நானும் ஏரியின் ஒரு பகுதியில் எனக்காக ஒதுக்கப்பட்ட மண்ணை சுமந்து கொட்டிவிட்டு, தூர் வாரிக் கொண்டிருக்கும் உங்களைச் சந்திக்க உங்களிடத்துக்கே வந்து எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே என்னைச் சந்திக்க யாரும் உண்டு முண்டியடிக்கத் தேவையில்லை! அவர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் அவ்வேலையைச் செவ்வனே செய்யுங்கள்.

நான் அறிய உலகளவில் எந்தவிதமான உழைப்பும் வீண் போனதாக சரித்திரம் இல்லை! கடமையைச் செய்வோம்! பலன் நிச்சயம் ஒருநாள் கிடைத்தே தீரும்! கடமையாற்ற நீங்கள் வரும் வழியில் என்னுடைய கண்கள் காத்துக் கிடக்கும்!'

காத்தவராயனின் அறிக்கை வெளியான நாளிலிருந்து பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும், பொதுநல ஆர்வலர்களும் பல்வேறு கருத்துக்களை தெரிவித்தவாறு இருந்தனர்.

குறிப்பிட்ட நாளும் வந்தது.

ஏராளமான தொலைக்காட்சி நிறுவனங்களும், பத்திரிகை நிருபர்களும் குவிந்தனர்.

தலைவர் காத்தவராயன் பேட்டி என்பதை அறவே மறுத்து விட்டார்.

"இங்கு நடப்பதை அப்படியே பதிவு செய்யுங்கள். நிறை குறைகளை வரும் காலங்களில் சரி செய்து கொள்கிறோம். நல்லதே நினைப்போம்! நல்லதே நடக்கும்! இந்த நல்ல எண்ணம் ஈடேற எல்லோரும் பிரார்த்தனை செய்யுங்கள்!" என இருகரம் குவித்து வேண்டுகோள் விடுத்தார்.

காலம் எல்லாவற்றையும் படம் பிடிக்க... மெல்ல மெல்ல இருள் விலக... புதிய விடியலின் தரிசனத்திற்காக கிழக்கு சிவந்து கொண்டிருக்கிறது.

# அறிவோம் தமிழர்

## இரசிகமணி டி. கே. சி. (1882 — 1954)

“தமிழருக்குத் தமிழே துணை” என்னும் மந்திரத்தை தமிழர்களிடம் சொன்னவர் டி.கே.சி. டி. கே. சிதம்பரநாத முதலியார் செப்டம்பர் 11, 1882 — பெப்ரவரி 16, 1954) ரசிகமணி டி.கே.சி. என அறியப்படும் இவர் ஒரு வழக்கறிஞர், எழுத்தாளர் மற்றும் தமிழ் இலக்கிய திறனாய்வு முன்னோடி ஆவார்.

வாழ்க்கை

திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை தீத்தாரப்ப முதலியார் — மீனாம்பாள் தம்பதியினருக்கு மகனாக 1881 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் தேதி (18—8—1881) ஆவணி மாதம் கிருஷ்ண

ஜெயந்தி அன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்த இவர், தென்காசியில் ஆரம்ப கல்வியும் திருச்சிராப்பள்ளி உயர்நிலைப் பள்ளியில் உயர் கல்வியும் பயின்றார். சென்னை கிறித்துவக் கல்லூரியில் படித்து பட்டம் பெற்றார். இவரது தாய் மற்றும் இவரது மனைவி பிச்சம்மாளின் பிறந்த ஊரான திருவில்லிபுத்தூர் வடக்கு ரத வீதியில் உள்ள இல்லத்தில் சிறிது காலமும், குற்றாலத்திலும் வாழ்ந்து இருந்தார். 1930 முதல் 1935 வரை சென்னை மாகாண இந்து அறநிலையத்துறை பாதுகாப்பு ஆணையராக பணியாற்றினார்.

இலக்கியப் பணி

திருநெல்வேலியில் வண்ணார்பேட்டை சாலைத்தெருவில் உள்ள இவரது வீட்டின் நடு முற்றமாக இருந்த (தொட்டிக்கட்டு) வட்ட வடிவமான அமைப்பில் இவரது நண்பர்கள் மாலை வேளையிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் கூடுவார்கள். இந்தக் கூட்டத்திற்குத் தான் வட்டத்தொட்டி என்ற பெயர் ஏற்பட்டது. இவரின் வட்டத்தொட்டி இலக்கிய அமைப்பில் மீ. ப. சோமு, பி. ஸ்ரீநிவாச்சாரி, கல்கி, ரா. பி. சேதுப்பிள்ளை, இராசகோபாலாச்சாரி, அ. சீனிவாச ராகவன், தொ. மு. பாஸ்கர தொண்டைமான், ச. வையாபுரிப்பிள்ளை, வெ. ப. சுப்பிரமணிய முதலியார் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்.

அரசியல்

1927 ல் சென்னை மாகாணத்தின் சட்டமன்ற மேலவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சென்னை மாநில முதல்வராக இருந்தபோது தமிழக அரசுக்கு ஏற்ற முத்திரைச் சின்னமாக திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் கோபுரம் பரிந்துரை செய்தார்.

தமிழ் ஆர்வலர்களால் ‘டி.கே.சி.’ என்று சுருக்கமாக அழைக்கப் பெறும் ஆளுமையாளர் டி.கே.சிதம்பரநாத முதலியார் ‘வட்டத்தொட்டி’ என்னும் இலக்கிய அமைப்பின் நிறுவனர் ‘இதய ஒலி’, ‘கம்பர் யார்?’ முதலான நு□ல்களின் ஆசிரியர் ‘கம்பர் தரும் ராமாயணம்‘, ‘முத்தொள்ளாயிரம்‘ ஆகிய நு□ல்களின் பதிப்பாசிரியர் என பல்வேறு



# பெருமை

## ராஜலட்சுமி சிவலிங்கம்

சிறப்புகள்— டி.கே.சி.க்கு உண்டு. எனினும் டி.கே.சி. என்றதுமே நம் நினைவுக்கு முதலில் வந்து நிற்பது அவரது ரசனை உள்ளமும் இயல்பான நகைச்சுவை உணர்வும் தான்! ஒரு முறை டில்லிக்கு டி.கே.சி. சென்றிருந்த போது, பிரதமர் நேரு வீட்டிற்கு விருந்தினராக வரும்படி அழைத்தார். நேருவின் வீட்டிற்கு ஓட்ஸ் சாதம் பொங்கிக் கொண்டு போனார் டி.கே.சி. அதைப் பார்த்த நேரு, "ஓ! நீங்கள் மிகவும் ஆசாரம் போலிருக்கிறதே?" என்று கேட்டார். "இல்லை, நான் ஆசாரமே இல்லை. எனக்கு எல்லா வகையான ஆகாரங்களும் சாப்பிட வேண்டும் என்றுதான் ஆசை, ஆனால் என் வயிறு இருக்கிறதே, அதுதான் ஆசாரம்!" என்றாராம். தம்முடைய சக்கரை நோயைப் பற்றி டி.கே.சி. இங்ஙனம் நகைச்சுவையுடன் வெளியிட்ட பாங்கினை நேருவும் மற்ற விருந்தினர்களும் ரசித்து அனுபவித்துச் சிரித்தார்களாம்.

ஊற்றித் தரும் படி கேட்டார். உடனே, ரசிகமணி, "நீங்கள் டம்ளரில் விட்டுச் சிரமப்பட வேண்டாம். புனல் இருக்கிறது. கொண்டு வரச் சொல்லுகிறேன். அதை வாயில் வைத்துக் கொண்டு பாயசத்தை ஊற்றினால் சொட்டுக் கூட நாக்கில் விழாமல் நேரே உள்ளே போய் விடும்" என்று கூறினார்.

பாயசம் என்பது கையில் எடுத்துச் சுவைத்துச் சாப்பிட வேண்டிய ஒன்று. டி.கே.சி.யின் பார்வையில் பாயசத்தை எப்படி ரசித்துச் சாப்பிட வேண்டுமோ — அனுபவித்துச் சாப்பிட வேண்டுமோ — அது போலத் தான் கவிதையையும் ரசித்து, அனுபவித்து, பாடி இன்புற வேண்டும்.



டி.கே.சி. மேற்கொண்ட திறனாய்வு முறைக்குப் பெயரே, 'ரசனை முறைத் திறனாய்வு' என்பது தான்! இத்தகைய ரசனை முறை உரையாடல்களை டி.கே.சி. தம் நண்பர்கள் குழாத்தோடு நிகழ்த்திய இடத்திற்கு 'வட்டத்தொட்டி' என்று பெயர். பதிலளிக்கும் திறமை எதிர்த்துச் சுடச்சுடப் பதிலளிக்கும் கலையிலும் வல்லமை படைத்தவராக விளங்கினார் ரசிகமணி. இதனை மெய்ப்பிக்கும் உண்மை நிகழ்ச்சி: கல்லூரிவிழா ஒன்றிற்கு டி.கே.சி.யை அழைத்திருந்தார்கள். கூட்டத்தில் பக்கத்தில் ஒரு ஸ்காட்லாண்ட்

வட்டத்தொட்டி ரசிகமணியின் ரசிக உள்ளத்திற்குக் கட்டியம் கூறும் சுவையான நிகழ்ச்சி: ரசிகமணியின் வீட்டில் விருந்தில் பாயசம் பரிமாறப்பட்டது. ரசிகமணியின் அருகில் அமர்ந்து உணவருந்திய நண்பர் ஒருவர் பாயசத்தை இலையில் விடாமல் ஒரு டம்ளரில்



பாதிரியார் உட்கார்ந்திருந்தார். அவரிடம் டி.கே.சி.யை அறிமுகப்படுத்தி வைத்தார்கள். பாதிரியாரோ இந்தியர்களைப் பற்றி அவ்வளவு நல்ல எண்ணம் கொண்டவர் அல்லர். அவரிடம் பல பொருள்களைப் பற்றி டி.கே.சி. பேசிக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில், "ஸ்காட்லாண்ட் தேசத்தவர்களாகிய எங்களுக்கு மரங்கள் என்றால் நிரம்பப் பிரியம். இந்தியர்களாகிய உங்களுக்கு எப்படியோ?" என்று கேட்டார் பாதிரியார்.

டி.கே.சி. உடனடியாகப் பாதிரியாரிடம் சொன்ன பதில் இதுதான்:"மரங்களிடத்தில் எங்களுக்குப் பிரியம் கிடையாது, பக்தியே செலுத்துகிறோம்" இதற்கு மேலும் ஒரு படி சென்று, "எங்கள் தமிழ்நாட்டிலே ஒவ்வொரு கோயிலும் ஒரு மரத்தைச் சுற்றியே எழுந்திருக்கிறது. அதனையே நாங்கள் தல விருட்சம் என்கிறோம்" என்று விளக்கம் கூறியதைக் கேட்ட ஸ்காட்லாண்ட் பாதிரியார் அரண்டே போனார்.

நகைச்சுவை உணர்வு டி.கே.சி. தம் கண்டனத்தைக் கூட நகைச்சுவையோடு தான் வெளிப்படுத்துவார். அதை எல்லோராலும் எளிதில் புரிந்து கொள்ள முடியாது. ஒருமுறை டி.கே.சி. திடீரென்று அருகில் இருந்தவரைப் பார்த்து, "மதுரை எங்கிருக்கிறது தெரியுமா?" என்று கேட்டார். நண்பர் புரியாமல் விழித்தார் அப்பொழுது டி.கே.சி.யே கேள்விக்கான பதிலைச் சொன்னார் "மதுரை லண்டனில் இருக்கிறது!" என்று ஓங்கிய குரலில் சொன்னார். சூழ்ந்திருந்த அனைவரும் எதுவும் புரியாமல் தவித்துக் கொண்டிருந்த போது, டி.கே.சி.யே அந்த நகைச்சுவைப் புதிரைத் தமக்கே உரிய பாணியில் அவிழ்த்தார்."

கொஞ்ச நாளைக்கு முன்பாக, மதுரையில் நம்முடைய தமிழ்ப் பெரும் புலவர்கள் ஒன்று கூடினார்கள். கம்பரைப் பற்றியும், கம்ப ராமாயணக் கவிதைகளைப் பற்றியும் பேசினார்கள்..." இப்படிச் சொல்லிச் சிறிது இடைவெளி விட்டு, "அங்குப் பேசியவர்கள் அனைவரும் இங்கிலீஷில் பேசினார்கள்" என்று முடித்தார்.டி.கே.சி.யின் நண்பர் ஒருவரின் மகள், மேற்படிப்புக்கு அமெரிக்கா புறப்படுவதற்கு முன்னால், டி.கே.சி.,யிடம் ஆசி பெற வந்தாள். டி.கே.சி. அவளை இப்படிச் சொல்லி வாழ்த்தினார் "அமெரிக்கா போவது பற்றி ரொம்ப சந்தோஷம். அங்கே உள்ளவற்றை எல்லாம் 'பார்த்து' விட்டு வா; 'படித்து'க் கொண்டு வந்து விடாதே!"

கடித இலக்கியம் தமிழ் உலகத்தில் கடித இலக்கியத்தை வளர்த்த பெருமக்களின் வரிசையில் டி.கே.சி.க்கும் ஓர் இன்றியமையாத இடம் உண்டு. தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், 'ரஸிகமணி டி.கே.சி.யின் கடிதங்கள்' என்னும் தலைப்பில் 1961—ல் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளார். டி.கே.சி.யின் கடிதங்களில் ஆங்காங்கே மெல்லிய நகைச்சுவை உணர்வு களிநடம் புரிந்து நிற்கும் இடங்கள் உண்டு. அருமை நண்பர் ஏ.கே.கோபால பிள்ளைக்கு டி.கே.சி. 01.11.46—ல் எழுதிய கடிதத்தில் ஒரு பகுதி:

"பம்பாயில் நான் இருப்பது அதிசயமாய் இருக்கலாம் தங்களுக்கு. உண்மையில் அதிசயந்தான். நானாக இங்கு வரவில்லை. ஸ்ரீமதி எம்.எஸ்.சுப்புலட்சுமியின் கச்சேரி திருச்சியில் 20.10.46 அன்று நடந்தது. அதற்காக என்னை அழைத்தார்கள். நானும் போனேன். கச்சேரி முடிந்ததும் ரயிலில் தூக்கிப் போட்டார்கள் எம்.எஸ்.ஸூம் சதா சிவமும். மறுநாள் காலை 7 மணிக்கு சென்னை சென்றோம். அப்படியே 10 மணிக்கு ஆகாய விமானத்தில் தூக்கிப் போட்டார்கள். சாயங்காலம் 4 மணிக்கு பம்பாயில் இறக்கினார்கள். இதுதான் பம்பாய்க்கு வந்த கதை..."மூத்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன்

'மாந்தருள் ஒரு அன்னப் பறவை' என்னும் நு□லில் டி.கே.சி.யைக் குறித்து எழுதி இருக்கும் வைர வரிகள் இவை:

"கவிதைகளை மட்டுமல்ல, வாழ்க்கையை எப்படிப் பார்க்கிறது, அனுபவிக்கிறது என்று கற்றுத் தந்தார். அதுதான் ரொம்ப விசேஷமாகப் படுகிறது எனக்கு... என்னுடைய சின்ன வயசில் அன்னப் பறவையைப் பற்றிச் சொல்லக் கேட்டிருக்கிறேன். தண்ணீர் கலந்த பாலில் பாலை மட்டும் உறிஞ்சி உண்டுவிட்டு தண்ணீரை அப்படியே விட்டுவிடுமாம். டி.கே.சி.யும் ஒரு அன்னப் பறவையே. நல்லதுகளையும் சிறந்ததுகளையும் எடுத்துக்கொண்டார். அதைப் பற்றியே பேசினார் பாராட்டினார். தமிழகத்துக்கு இப்படி இன்னொரு அன்னப் பறவை கிடைக்குமா?"ஒன்று மட்டும் உண்மை. உலகில் ரசனையும் நகைச்சுவையும் இருக்கும் வரை 'மாந்தருள் ஒரு அன்னப் பறவை'யாம் டி.கே.சி.யும் நிலைத்து இருப்பார்.



"ரசிகர் என்றால் தேன்வண்டைப்போல் அனுபவிப்பதுதான். மறுபடியும் மறுபடியும் புஷ்பத்தில் வந்து விழவேணும். கவியை விட்டு நம்மால்ப் போக முடிகிறதா. இல்லை"

மேலேகண்ட டி.கே.சி.யின் வாக்கு அவரையே நமக்கு இனம் காட்டுகிறது. கவிதையை அனுபவிக்க வேண்டும். கவிதையிலேயே மூழ்க வேண்டும். இதுதான் டி.கே.சி.க்கும் பிற தமிழறிஞர்களுக்கும் இடையில் இருந்த பெரிய வித்தியாசம். எந்தவொரு கலைஞனுக்கும் தான் வெளிப்படுத்தும் கலை ஒரு ரசிகனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுபவிக்கத் தக்கதாய் அமையவேண்டும் என்பதுவே குறிக்கோளாக இருக்கும்.

ரசிகனால் ரசிக்கப் படுவதற்காகவே தனது கவிதை இருத்தல் வேண்டும் என்ற எண்ணத்துடனேயே கவிஞன் கவிதையைப் படைத்து அளிக்கிறான். கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு 1000 ஆண்டுகள் கழிந்த பிறகு தோன்றிய ரசிகர்தான் ரசிகமணி டி.கே.சி. டி.கே.சி. வாழ்வு முழுமையும் கம்பர், கம்பர் என்றே கூறி வந்தவர். கம்பரை அனைவருக்கும் அறிமுகப் படுத்துவதும், கம்பர் கவியை அனுபவிக்கச் செய்வதுமே டி.கே.சி. அவர்களின் மூச்சுக் காற்றாக இருந்துள்ளது.

கம்பருக்காகவும் தமிழுக்காகவும் தமிழ் நாட்டில் பிறப்பெடுத்து வந்தவர் ரசிகமணி டி.கே.சி. அவருக்கு குருவும் கம்பர் தான். கடவுளும் கம்பர் தான். ரசிகமணி டி.கே.சி.யின் பெருமையை மூதறிஞர் ராஜாஜி அவர்கள் எவ்வாறு கணித்தறிகின்றார் என்பதை இப்போது பார்க்கலாம்:

"ராமாயண கதை நம்முடைய நாட்டின் தங்கச் சுரங்கம். அதிலும் கம்பன் பாடிய ராம கதை இருபத்தி நான்கு மாற்று அபரஞ்சி. இந்தத் தங்கத்தை எடுத்துக் காட்டிய தங்க நிபுணர்களுக்குள் நம்முடைய டி.கே.சி. அவர்கள் முதல் இடம் பெற்று விட்டார், இதை யாரும் எந்தப் புலவரும் மறுக்க முடியாது. ஸ்ரீராமபிரான் எப்படிக் கம்பன் உள்ளத்தில் மற்றும் ஒரு முறை அவதரித்தானோ, அவ்வாறே கம்பனும் டி.கே.சி.யின் உள்ளத்தில் மறுபடியும் அவதரித்தான், தற்காலத் தமிழருக்காக என்று நான் சொல்லுவேன்"

கம்பர் கவிதைகளை தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்வித்ததைப் போல, மேலும் பல நூலாசிரியர்களையும், தனிப் பாடல்களையும் எடுத்துச் சொல்லி கற்றோரும் மற்றோரும் உணர்ந்து கொள்ளச் செய்தார் ரசிகமணி டி.கே.சி. என்பதையும் எண்ணிப்பார்த்திட வேண்டும். டி.கே.சி.அவர்கள் தமிழர்களுக்கு தமிழ் உணர்வு ஊட்டிய மகான். ஆங்கில மோகத்தில் மூழ்கிக் கிடந்த பற்பல அறிஞர்களையும் தமிழிலே பேசவும் எழுதவும், தமிழ் மேல் ஆசை கொள்ளவும், தமிழார்வம் மிக்கவர்களாக உருமாற்றம் பெற வைத்த அரும்பணியைச் செய்தவரும் டி.கே.சி.தான் என்பதை எண்ணி ஒவ்வொரு தமிழனும் பெருமை அடையலாம்.

கம்பரை எவ்வாறு தமிழ் மக்கள் இனம் கண்டு கொள்ள வைத்தாரோ



அதேபோன்று தம் சமகால கவிஞர் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களையும் தமிழ் மக்களிடையே எடுத்துச் சொல்லி கவிமணியின் பெருமையை உணர்ந்து கொள்ளச் செய்தவரும் டி.கே.சி.தான். கவிமணி அவர்கள் ரசிகமணி குறித்து எழுதிய சில வரிகள் கீழே தரப்படுகின்றன:

"கம்பராமாயணத்தை இன்று தமிழுலகம் அறிவதற்கும் மதிப்பதற்கும் படிப்பதற்கும் காரணமாயிருந்தவர் நம் ரசிகமணி அவர்களே. ஷேக்ஸ்பியர் கவிதைத் தரத்தைவிடக் கம்பன் கவிதை ஒரு சிறிதும் தாழ்வில்லாதது என்று சொன்னாற்போதாது. அதனினும் மேம்பட்டதாகும் என்று ஆங்கிலம் கற்ற புலவர்களிடையே அஞ்சாமல் எடுத்துக் கூறின ஆண்மையாளர் அவர்.

அந்தக் கருத்தை எழுத்துக்களின் மூலமும் சொற்பொழிவுகளின் மூலமும் ஓயாமல் எடுத்து விளக்கி நிலைநாட்டிக் கம்பர் கவிதைக்கு ஏற்றம் தந்த பெருமை நம் ரசிகமணி அவர்களையே சாரும் ஆங்கிலம் கற்றவரே கற்றவரென்றும், தமிழ்க் கல்வி இழிவானது என்றும், தமிழில் பேசுவதும் எழுதுவதும் அநாகரிகமென்றும் எண்ணி வந்த காலமொன்றிருந்தது. பட்டதாரிகள் பலர் மேடை மீதேறி நின்று எனக்குத் தமிழில் பேச வராது; ஆங்கிலத்திலேதான் பேச முடியும் என்று பெருமையோடு சொல்லி வந்தார்கள். அந்தக் காலத்தில் நமது ரசிகமணி 'தமிழில் சொல்ல முடியாதது என்ன உண்டு?' என்று ஆர்வத்தோடு கூறி, அவர்களைத் தமிழாசையும் கவிதை வெறியும் கொள்ளச் செய்தார்கள்.

அவர், யாவருக்கும் உத்தம நண்பர், எனக்கு உயிர் நண்பர். என்னைத் தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று உபசரித்ததை நான் என்றும் மறக்க முடியாது. அன்னை போலிருந்து என்பால் அன்பு சொரிந்தார். அருவியில் நீராட்டினார். அருகிலிருந்து உணவூட்டி உபசரித்தார். என்னைப் பாராட்டினார். என் கவிதைகளைப் பாராட்டினார்."

இசைக்கச்சேரிகளில் தமிழ்ப்பாடல்கள் இசைக்கப்பட வேண்டியது குறித்து இவர் எழுதிய கட்டுரைகளைப் படித்த செட்டிநாட்டரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார், 1941—ல் தேவகோட்டையில் நடைபெற்ற இசை மாநாட்டில் இவரது சிறப்புரையை கேட்டு, தமிழ் இசையை பரப்பும் பணியைத் தொடர ரூ.30,000 நிதி கொடுப்பதாகவும் அறிவித்தார்.

இதையடுத்து சென்னையில் தமிழிசை மன்றம் தொடங்கப்பட்டது. எம்.எஸ்.சுப்புலட்சுமி, தண்டபாணி தேசிகர் உள்ளிட்டோர் டி.கே.சி. தலைமையில் தமிழிசை மன்றம் நடத்திய இசை மாநாட்டில் தமிழ்ப் பாடல்களைப் பாடினார்கள். 'வட்டத்தொட்டி நாயகர்', 'வளர்தமிழ் ஆர்வலர்', 'ரசிகமணி', 'குற்றால முனிவர்' என்றெல்லாம் போற்றப்படும் டி.கே.சிதம்பரநாத முதலியார் 1954—ம் ஆண்டு 73—ம் வயதில் மறைந்தார்.

டி.கே.சி.அவர்கள் மரணம் நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் தமிழ் மக்களுக்கு விடுத்த செய்தி இது:

"டி.கே.சி. என்று ஒருவன் இருந்தான். அவன் 'தமிழைப் போன்ற உயர்ந்த மொழி உலகத்திலேயே கிடையாது. கம்பரைப் போன்ற உயர்ந்த கவிஞன் உலக இலக்கியத்தில் கிடையாது' என்று சொல்லுவான் என்பதை நீங்கள் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். மற்றவர்களையும் சொல்லச் செய்ய வேண்டும். 500 ஆண்டுகள் அல்லது, 1000 ஆண்டுகள் கழிந்த பின்னாவது நான் சொன்னதை உண்மை என்று உலகமே ஒப்புக்கொள்ளும்!"



தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
ANNIVERSARY
15 YEARS
ANNIVERSARY
THANK YOU



# சிவகாமியின்

## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## இந்தப் பெண் யார்? 34

காஞ்சிமா நகரம் இதற்கு முன் எந்த நாளிலும் கண்டிராத அமைதியுடன் விளங்கிற்று. பெரிய பயங்கரமான புயல் அடித்து ஓய்ந்த பிறகு ஏற்படும் அமைதியை அது ஒத்திருந்தது. நகர வாசிகளின் மன நிலைமையும் அதற்கேற்றபடிதான் இருந்தது.

வாதாபிப் படைகள் தொண்டை நாட்டில் சொல்லொணாத அட்டூழியங்களைச் செய்துவிட்டுப் பின்வாங்கிச் சென்றது பற்றியும், மணிமங்கலத்திலும் சூரமாரத்திலும் நடந்த போர்களைப் பற்றியும், காஞ்சி நகர் வாசிகளுக்கு அரைகுறையான விவரங்கள் கிடைத்திருந்தன. மகேந்திர பல்லவச் சக்கரவர்த்தி மணிமங்கலம் போர்க்களத்தில் அடைந்த காயங்களினால் யமன் உலகை எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பதும், அவரைப் பிழைப்பிக்க அரண்மனை வைத்தியர்கள் பிரம்மப் பிரயத்தனம் செய்து கொண்டிருப்பதும் காஞ்சி மக்களுக்குத் தெரிந்திருந்தபடியால், எந்த நிமிஷத்திலும் அவர்கள் “சக்கரவர்த்தி காலமானார்” என்ற துக்கச் செய்தியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மணிமங்கலம் போர்க்களத்திலிருந்து திரும்பி வந்த வீரர் சிலரின் மூலம் ஆயனருடைய கால் முறிந்த செய்தியையும், சிவகாமி, சளுக்கர்களால் சிறைப் பிடித்துக் கொண்டு போகப்பட்ட விவரத்தையும் காஞ்சி மக்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். இந்தச் சம்பவம் அவர்களுக்கு எல்லாவற்றிலும் அதிக வேதனையை அளித்திருந்ததுடன் மகேந்திர பல்லவரிடம் அவர்களுக்கிருந்த மரியாதையைப் பெரிதும் குறைத்திருந்தது. இத்தகைய காரணங்களினால் காஞ்சி மாநகரம் களையற்றுக் கலகலப்பற்று, சோபிதமில்லாமல் அசாதாரணமான அமைதி குடிகொண்ட நகரமாய் விளங்கிற்று. நகரத்திலேயே இப்படி இருந்தது என்றால் அரண்மனைக்குள்ளே கேட்க வேண்டியதில்லை. புவனமகாதேவி மகேந்திர பல்லவரை மணந்து காஞ்சி அரண்மனைக்குள்ளே கால் வைத்த நாளிலிருந்து, அந்த அரண்மனை ஒரு காலத்திலும் இம்மாதிரி கலகலப்பற்றும் பிரகாசமில்லாமலும் பேய் குடிகொண்ட பழைய மாளிகையைப் போலத் தோற்றமளித்தது கிடையாது.




காஞ்சி நகரம் முற்றுகையிடப்பட்டிருந்த காலத்திலே கூட அந்த அரண்மனையில் அந்தந்த நேரத்தில் கீத வாத்தியங்களின் ஒலியும், பேரிகை முரசங்களின் கோஷமும் சங்கங்களின் முழக்கமும் ஆலாசிய மணிகளின் சத்தமும் கேட்டுக் கொண்டுதானிருந்தன.

இவற்றுடன் அரண்மனைத் தாதிப் பெண்கள் கால்களில் அணிந்திருந்த பாதசரங்களின் கிண்கிணி ஓசை இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருக்கும். வேத மந்திரங்களின் கோஷமும், செந்தமிழ்ப் பாடல்களின் கீதநாதமும் சில சமயங்களில் கேட்கும். அரண்மனை முன் வாசல் முற்றத்தில் வந்து போகும் குதிரைகளின் காலடிச் சத்தம் சதா கேட்டுக் கொண்டிருக்கும்.




இப்படியிருந்த அரண்மனையில் இப்போது ஆழ்ந்த மௌனம், பீதியை உண்டாக்கும் பயங்கர மௌனம், குடிகொண்டிருந்தது.

மணிமங்கலம் போர்க்களத்திலிருந்து மகேந்திர பல்லவரை எடுத்து வந்த பிறகு இராஜ வைத்தியர்கள் அல்லும் பகலும் அவர் பக்கத்தில் இருந்து சிகிச்சை செய்து வந்தார்கள். மகேந்திர பல்லவர் பல நாள் நினைவற்ற நிலையிலேயே இருந்தார். சூரமாரம் போர்க்களத்திலிருந்து மாமல்லர் திரும்பி வந்த பிறகு கூடச் சக்கரவர்த்திக்குச் சுய நினைவு இல்லாமலிருந்தது. அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாகக் கண் விழித்துப் பார்க்கவும் தம் எதிரிலுள்ளவர்களைத் தெரிந்து கொள்ளவும் ஆரம்பித்தார். இனிமேல் சக்கரவர்த்தி பிழைத்துக் கொள்வார் என்றும், ஆனால், இன்னும் சில காலம் அவரைக் கவலையுடன் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் வைத்தியர்கள் சொன்னார்கள். மாமல்லரைப் பார்க்கும் போதெல்லாம் மகேந்திரருக்கு உணர்ச்சி அதிகமாகிப் பேசுவதற்கு முயன்றபடியால் மாமல்லர் தந்தையிடம் அதிகமாகப் போகாமலிருப்பதே நல்லதென்று அபிப்பிராயப்பட்டார்கள்.



இதனால் மாமல்லரின் மனவேதனையும் அமைதிக் குலைவும் அதிகமாயின. அவர் மனம் விட்டுப் பேசுவதற்கு அரண்மனையில் யாரும் இல்லை. தளபதி பரஞ்சோதியோ சேனைகளை அழைத்துக் கொண்டு கோட்டைக்கு வெளியே சென்று, வாதாபிப் படையால் ஹிம்சிக்கப்பட்ட கிராம வாசிகளுக்கு உதவி செய்வதில் ஈடுபட்டிருந்தார்.

புவனமகாதேவி எப்போதும் கண்ணீரும் கம்பலையுமாயிருந்தார். புலிகேசியை நகருக்குள் அழைப்பதால் கேடுதான் விளையும் என்று தாம் முன்னாலேயே எச்சரித்ததை இப்போது சொல்லிச் சொல்லி வருந்தினார். அதோடு மாமல்லருக்குப் பாண்டிய ராஜ குமாரியை அப்போதே மணம்



முடிக்காதது எவ்வளவு தவறு என்பதையும் அடிக்கடி குறிப்பிட்டார். இந்த பேச்சு மாமல்லரின் காதில் நாராசமாக விழுந்தது.

நாளாக ஆக, மாமல்லருக்குச் சிவகாமியைப் பற்றி யாருடனாவது மனத்தைத் திறந்து பேசாவிட்டால் இருதயம் வெடித்து விடும் போலிருந்தது. அப்படிப் பேசக் கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்? ஆயனர் ஒருவர்தான். அவர்தான் சிவகாமியைப் பற்றித் தாம் பேசுவதை ஒத்த உள்ளத்துடன் கேட்கக் கூடியவர். மேலும் அவருடைய உடல் நிலையைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா? பார்க்கப் போனால், தமக்கு மகேந்திர பல்லவர் எப்படியோ, அப்படியே ஆயனரும் தந்தை தானே? அவரைக் கவனியாமலிருப்பது எவ்வளவு பிசகு? இவ்விதம் எண்ணி ஒருநாள் மாமல்லர் ஆயனரை அவருடைய அரண்ய வீட்டில் பார்ப்பதற்காகத் தன்னந்தனியே குதிரை மீதேறிப் பிரயாணமானார்.

காட்டு வழியாகப் போய்க் கொண்டிருக்கையில், அவருக்குத் தாமரைக்குளம் ஞாபகம் வந்தது. தானும் சிவகாமியும் எத்தனையோ ஆனந்தமான நாட்களைக் கழித்த இடம், ஒருவர்க்கொருவர் எத்தனையோ அன்பு மொழிகளைக் கூறிப் பரவசமடைந்த இடம் அப்பேர்ப்பட்ட குளக்கரையைப் பார்க்க வேண்டுமென்று ஆசை உண்டாயிற்று.

எனவே, பாதையை விட்டுச் சிறிது விலகித் தாமரைக் குளக்கரையை நோக்கிக் குதிரையை மெதுவாகச் செலுத்தினார்.

சற்றுத் தூரம் போனதும் அந்தக் காட்டு வழியில் எதிரே பெண் ஒருத்தி வருவது தெரிந்தது. மாமல்லர் வருவது கண்டு திடுக்கிட்ட தோற்றத்துடன் அவள் ஒதுங்கி நின்றாள். மாமல்லர் தமது பரம்பரையான குலப் பண்பாட்டுக்கு உகந்தபடி அவளுடைய முகத்தை மறுமுறை ஏறிட்டுப் பாராமல் தம் வழியே சென்றார். ஆனால், சிறிது தூரம் சென்றதும் அந்த ஸ்திரீயின் முகம் ஏற்கெனவே பார்த்த முகம்போல் ஞாபகத்துக்கு வந்தது. “அவள் யார்? அவளை எங்கே பார்த்திருக்கிறோம்?” என்று எண்ணமிட்டுக் கொண்டே மாமல்லர் தாமரைக் குளத்தை அடைந்தார்.

(சபதம் தொடரும்)


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
15 Years
ANNIVERSARY
Thank You!

# யோக

### யோகாசனம் செய்வதால் கிடைக்கும் அற்புத நன்மைகள் !!

தினமும் யோகாசனம் செய்வது உங்களுக்கு சிறந்த ஒரு மூச்சு பயிற்சியாக இருக்கும். இதனால் இதயத்திற்கு தேவையான இரத்த ஓட்டம் சீராக அமையும். மேலும் நமது உடல் சுறுசுறுப்பாக இயங்க உதவும். இதயம் தினமும் யோகாசனம் செய்வதன் மூலம் நமக்கு ஏற்படக்கூடிய இதயம் சம்பந்தமான நோய்களை தடுக்க முடியும். யோகா செய்பவர்களுக்கு இரத்த ஓட்டம் சீராகி, இதயம் பலம் பெறுகிறது.மேலும் நல்ல சீரான சுவாசம் கிடைப்பதோடு இதயம் சரியாக இயங்கி உடல்நலத்தை மேம்படுத்துகிறது.

உடலின் பல பகுதிகளில் இருக்கும் கொழுப்புகள், ஊளை சதை எனப்படும் தேவையற்ற சதைகள் கரைந்து உடல் அழகான வடிவம் பெறுகிறது. மன அமைதி தினமும் காலையில் யோகாசனங்கள் செய்வதால் நம்முடைய சிந்திக்கும் ஆற்றல் மேம்படுகிறது. மேலும் நம்முடைய மனம் பதற்றங்கள் நீங்கி அமைதியடைகிறது.

அதிகப்படியான வேலைபளு மற்றும் இன்ன பிற காரணங்களால் பலரும் மனஅமைதியை, சந்தோஷம் இல்லாமல் இருக்கிறார்கள். எனவே தினமும் யோகா செய்வதால் நம்முடைய மன அழுத்தம் மற்றும் மனம் சம்பந்தமான அத்தனை குறைபாடுகளும் நீங்குகிறது.

இரத்த ஓட்டம் யோகா செய்யும் போது நாம் உடலை வளைத்து, நெளித்து செயல்படுவதால் உடலுக்கு அதிகப்படியான இயக்கம் கொடுகின்றோம். இதனால் நம்முடைய இரத்த ஓட்டம் சீர டைகிறது. நோய் நொடியின்றி வாழ ஆரோக்கியமான உணவு முறைகளை பின்பற்றுவதோடு தினந்தோறும் யோகாசனங்கள் செய்து வருவதால் உடலும் மனதும் நல்ல ஆரோக்கியம் பெறும். தொந்தி குறைப்பு இன்றைய காலகட்டத்தில் கடைகளில் விற்கும் பொருட்களை அதிகமாக சாப்பிடுவதாலும், கொழுப்பு நிறைந்த உணவு பொருட்களை சாப்பிடுவதாலும் பலருக்கும் வயிற்றில் தொந்தி அல்லது தொப்பை ஏற்படுகிறது. யோகானசனங்களில் நவுகாசனா, உஷ்ட்ரசனா, போன்ற யோகாசனங்களை செய்வதன் மூலம் சுலபத்தில் தொந்தியை குறைக்க முடியும்.

உடல் ஆரோக்கியத்திற்கு தினமும் செய்ய வேண்டிய 5 யோகாசனங்கள் அதிக நேரம் செலவிடாமல், உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஆசனங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள். யோகாவை தினமும் பயிற்சி செய்தால் பல ஆரோக்கிய நன்மைகள் கிடைக்கும். இந்த காரணத்திற்காக, இதை



# யோகம்

பேராசிரியர் **இராஜேஸ்வரி**

ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கான வழிகளைத் தேடுகிறார்கள்.நீங்களும் அவர்களில் ஒருவராக இருந்தால், உங்களுக்கான பதிவிது. நீங்கள் தினமும் எளிதாகப் பயிற்சி செய்யக்கூடிய 5 யோகாசனங்களை பற்றி இந்த பதிவில் பார்க்கலாம்.

தினசரி செய்யவேண்டிய யோகாசனங்கள்

கோமுகாசனம்

இந்த ஆசனத்தைப் பயிற்சி செய்வது, உங்களுக்குப் பல நன்மைகளைத் தரும். உங்கள் கணுக்கால், இடுப்பு மற்றும் தொடைகளின் நீட்சிக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மேல் முதுகு, மார்பு மற்றும் தோள்களை நீட்சியடையச்செய்து, அலர்தலுக்கும் உதவுகிறது.

விருக்ஷாசனம்

உடலின் சமநிலையை மேம்படுத்த, இந்த யோகாவை தொடர்ந்து பயிற்சி செய்யலாம்.இடுப்பின் வெளிப்புற பகுதியை வளைக்கும் இந்த யோகா மூலம் உங்கள் முதுகெலும்பை வலுவாக்கலாம். இது பாதங்கள் மற்றும் கணுக்கால்களை வலிமையாக்க உதவுகிறது. மேலும், உங்கள் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தி, மன நிம்மதியும் அளிக்கிறது.கவனச் சிதறல் ஏற்படாமல் மனதை ஒருமுகப்படுத்தும் திறனை வளர்க்க விரும்புபவர்கள் விருக்ஷாசனம் செய்யலாம்.

திரிகோனாசனம்

உச்சந்தலை முதல் பாதம்வரை, உடலை வலுப்படுத்த மிகவும்

வழக்கமாக்கி கொள்ளும்படி பல சுகாதார நிபுணர்களும் பரிந்துரைக்கின்றனர். யோகா செய்வது, உங்கள் உடல் உறுப்புகள் அனைத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது.மேலும் தீவிர நோய்களிலிருந்தும் உங்களைப் பாதுகாக்கிறது.யோகா செய்வது, உங்கள் நுரையீரலை ஆரோக்கியமாக வைத்திருப்பதிலும், இதய நோய் அபாயத்தைக் குறைப்பதிலும், சர்க்கரை நோய், இரத்த கொழுப்பு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற பிரச்சனைகளிலிருந்து பாதுகாப்பதிலும் பெரும் பங்கு வகுக்கிறது.

பெரும்பான்மையவருக்கு தினமும் செய்ய வேண்டிய யோகாசனங்களை பற்றிய குழப்பம் நிலவுகிறது. மேலும் வெளியே சென்று உடற்பயிற்சி செய்ய நேரம் இல்லாதவர்கள், வீட்டிலிருந்தபடியே, அதிக நேரம் செலவிடாமல் தங்கள் உடல்









பயனுள்ளதாகக் கருதப்படுகிறது இந்த யோகாசனம். இது உங்கள் கால்கள், முதுகு மற்றும் மார்பை பலப்படுத்துகிறது. மேலும், தொடைத் தசைநார்கள், கெண்டைக்கால்கள் மற்றும் தோள்களை நீட்சியடையச்செய்யவும் உதவுகிறது.

பஸ்சிமோத்தாசனம்

உங்களுக்குத் தூக்கமின்மை போன்ற தூக்கம் தொடர்பான பிரச்சனைகள் இருந்தால், இந்த யோகாசனம் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இது உடலுக்குச் சுறுசுறுப்பைத் தருவதோடு, கவலை, மன அழுத்தம் போன்றவற்றை நீக்கவும் உதவுகிறது. மூளையை அமைதிப்படுத்தி, விரைவாகத் தூங்க உதவுகிறது.

தண்டாசனம்

ஆஸ்துமா போன்ற சுவாச நோய்களால் அவதிப்படுபவர்கள், இந்த யோகாசனத்தைப் பயிற்சி செய்து நல்ல பலன்களைப் பெறலாம். இது நுரையீரலின் செயல்பாட்டை மேம்படுத்த உதவுகிறது. இதனுடன், தசைகள் மற்றும் நரம்புகளில் ஏற்படும் இறுக்க பிரச்சனையையும் நீக்குகிறது.

யோகா நிபுணரின் அறிவுரைப்படி, பரிந்துரைக்கப்பட்ட நேரத்தில் இந்த யோகாசனங்களை நீங்கள் பயிற்சி செய்யலாம். ஒரு நாளைக்கு 20 நிமிடங்கள் பயிற்சி செய்தால் கூடப் போதுமானது. இதன் மூலம் பல நன்மைகளைப் பெறலாம்.

தினமும் யோகா செய்ய கஷ்டமா இருக்கா? இவற்றை முயற்சி செய்து பாருங்களேன்!

ஒரு பழக்கத்தை உருவாக்குவதற்குத் தேவையானது நிலைத்தன்மையே. எனவே, இரண்டு வாரங்கள் தொடர்ந்து யோகாவிற்கு நேரம் கிடைத்தால், அது நாளடைவில் நமது அன்றாட வழக்கத்தின் ஒரு பகுதியாக மாறும். யோகா என்பது முழு உடல் பயிற்சியாக செயல்படுகிறது. யோகா ஒரு சக்திவாய்ந்த பாரம்பரிய கருவியாகும், இது நெகிழ்ச்சியை உருவாக்கி, மனதை சமநிலை படுத்த உதவுகிறது மேலும் ஒட்டுமொத்த உடலின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

இத்தகைய யோகா கலையை அனைவரும் கடைபிடிக்கிறோமா என்றால் அது இல்லை காரணம், மாறிப்போன நம் அன்றாட வாழ்க்கை முறை. கூடுதல் பணிச்சுமை, இரவுப்பணி,



வேலைக்கு அதிக தூரம் சென்றுவருவது போன்ற காரணங்களால் நம்மில் பலர் யோகா போன்ற உடற்பயிற்சிக்கென்று நேரம் ஒதுக்க மறுத்து, இன்றைய கால சூழலில் வயது வித்தியாசம் இன்றி வரும் பல்வேறு நோய்களுக்கு மருந்து மாத்திரைகளை சாப்பிட்டு வருகிறோம். எனவே உங்கள் தினசரி வழக்கத்தில் யோகாவைச் சேர்ப்பது சில நேரங்களில் கடினமாக இருந்தால், அதை தொடர்ந்து செய்ய உதவும் சில வழிகள் குறித்து இந்த பதிவில் பார்க்கலாம்.




யோகா செய்ய நேரம் ஒதுக்குங்கள் ஒரு பழக்கத்தை உருவாக்குவதற்குத் தேவையானது நிலைத்தன்மையே. எனவே, இரண்டு வாரங்கள் தொடர்ந்து யோகாவிற்கு நேரம் கிடைத்தால், அது நாளடைவில் நமது அன்றாட வழக்கத்தின் ஒரு பகுதியாக மாறும். எனவே யோகாசனங்களைப் பயிற்சி செய்ய ஒவ்வொரு நாளும் 10 முதல் 15 நிமிடங்கள் ஒதுக்குங்கள். காலையிலோ, மதிய உணவு இடைவேளையிலோ அல்லது மாலையிலோ தொடங்கலாம்.

மர்ந்தவாறு வேலை செய்பவர்கள் நீங்கள் நாள் முழுவதும் ஒரு மேசையில் உட்கார்ந்து வேலை பார்ப்பவர்களாக இருந்தாலும் சரி அல்லது நீண்ட நேரம் கணினி முன் அமர்ந்து வேலை செய்பவராக இருந்தாலும் சரி உங்கள் உடல் ஆரோக்கியம் பெரிதும் பாதிக்கப்படலாம். எனவே உங்கள் வேலையை பார்த்துகொண்டே நீங்கள் யோகா செய்ய பல்வேறு போஸ்கள் உள்ளன. யோகாவில், பூனை போல் அமர்ந்து செய்யும் யோகா முதுகெலும்புகளை வலுவாக்கும் மேலும் இது உங்கள் முதுகில் தோன்றும் வலியை கட்டுப்படுத்துகிறது.

நின்று கொண்டு எளிதாக செய்யக்கூடிய யோகா போஸ்களையும் நீங்கள் முயற்சி செய்து, பணியில் இருந்தவாறு கூட யோகா பயிற்சிகளை தொடங்கலாம். சந்தோஷமாகவும் ஈடுபாட்டுடன் செய்வது யோகா செய்வதை சுவாரஸ்யமாக மாற்றுவது சிறந்தது. நீங்கள் யோகாவை மிகவும் வேடிக்கையுடனும் ஈடுபாட்டுடனும் செய்தால், அது உங்களுக்கு ஒரு கட்டாயப்படுத்தும் எண்ணத்தை ஏற்படுத்தாது. யோகா பயிற்சியை அனுபவித்து, உங்கள் உடல் மற்றும் மனநிலையில் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு நாளும் வெவ்வேறு நிலைகளில் யோகாவை செய்வதன் மூலம் சளிப்படையமாட்டீர்கள்.

உடலை ஒரு நிலையில் குறிப்பிட்ட அளவு நேரம் இருக்கச் செய்யும் உடற்பயிற்சியையும் அவை சார்ந்த நிலைகளையும் குறிக்கும் சொல்லே யோகாசனம். தினமும் யோகாசனம் செய்வது உங்களுக்கு சிறந்த ஒரு மூச்சுப்பயிற்சியாக இருக்கும். இதனால் இதயத்திற்கு செல்லும் ரத்த ஓட்டத்தை சீராக்க உதவிசெய்கிறது. மேலும் நமது உடல் சுறுசுறுப்பாக இயங்கவும் யோகாசனம் நமக்கு உதவுகிறது.



# மருத்துவத்

## சித்த மருத்துவம்: பெரிதாக கவனிக்கப்படாதது ஏன்?

தமிழகர்களின் பாரம்பரிய மருத்துவ முறை என கருதப்படும் சித்த மருத்துவ முறை பல பெருந்தொற்று காலங்களை கடந்து இன்று கொரோனா பெருந்தொற்று காலத்திலும் தனது பங்கை ஆற்றி வருகிறது.

சித்தர்களால் பழங்காலத்தில் எழுதி வைக்கப்பட்ட ஓலைச்சுவடிகளில் உள்ள மருத்துவ குறிப்புகளின்படி வைத்தியம் பார்ப்பது அல்லது மூலிகை தயாரிப்பது, சித்த மருத்துவமுறை என கருதப்படுகிறது. இந்த சித்த மருத்துவம் தமிழர்களின் பாரம்பரிய மருத்துவமுறையாக கருதப்பட்டாலும், ஆங்கில மருந்துகளை போன்று மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு நவீன அறிவியல் மொழியில் அதனை இயற்றாமல் போன காரணத்தால் இந்த மருத்துவமுறை தமிழகத்தை தாண்டியும், உலகளவிலும் பரவிச் செல்ல முடியாமல் போனது என்கின்றனர் சித்த மருத்துவம் சார்ந்து பணிபுரியும் நிபுணர்கள்.

மேலும் சித்த மருத்துவ குறிப்புகள் பெரும்பாலும் தமிழ் மொழியில் இருப்பதால், இதற்கான எல்லையும் சிறியதாக இருப்பதாக கருதுகிறார்கள் நிபுணர்கள். ஆனால் தற்போது சித்த மருத்துவம் குறித்த ஆராய்ச்சிகள் ஏராளமாக நடைபெற்று வருகின்றன.



"இந்தியாவில் கொரோனா தொற்று அதிகம் பாதிக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் இருந்து வருகிறது. நாளுக்கு நாள் தமிழகத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த நிலையில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் சிலருக்கு சித்த மருத்துவ முறைப்படி சிகிச்சை அளித்துவருகின்றனர். இதுவரை மூன்றாயிரத்துக்கும் அதிகமானோர் சித்த மருத்துவ முறையால் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்" என்கிறார் சித்த மருத்துவர் வீரபாபு.

இந்த சித்த மருத்துவ முறையில் இதுவரை எந்த உயிரிழப்புகளும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறுகிறார். தமிழகத்தை பொருத்த வரை, சித்த மருத்துவ முறையை பயன்படுத்துவது இது முதல்முறை அல்ல. அதாவது முதன்மை மருத்துவமாக பயன்படுத்தாவிட்டாலும், நிலவேம்பு, கபசர குடிநீர் போன்ற சித்த மருத்துவ மருந்துகள் இதற்கு முன்பே அரசாங்கத்தாலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.




## விஷ்ணுப்ரியா ராஜசேகர்

சித்த மருத்துவ முறை என்பது கொரோனா மட்டுமல்லாமல் பல பெருந்தொற்று காலங்களை கடந்து வந்து கொண்டிருக்கிறது என்கிறார் தேசிய சித்தா இன்ஸ்டியூட்டில் மருத்துவ அதிகாரி மற்றும் இம்காப்ஸின் துணை தலைவராக பணியாற்றிய சித்த மருத்துவர் வேலாயுதம். “பழைய நோய்களில் ஒன்றான அம்மை நோயை பொறுத்தவரை தனிமைப்படுத்துதல் போன்ற முறையை நாம் பாரம்பரியாமாகவே கடைபிடித்து வருகிறோம். மஞ்சள்காமாலை போன்ற தீவிரமான நோயாக இருக்கும்பட்சத்தால்,கீழாநெல்லி,ஆமனக்குஇலைக் கொழுந்து, கரிசாலாங்கண்ணி போன்ற மூலிகைகள் பெரும்பாலும் பரிந்துரைக்கப்படுகின்றன. நிலவேம்பு மற்றும் பப்பாளிச்சாறு டெங்குவிற்கு பயனளிக்கக்கூடியதாக உள்ளது என்பதை அரசாணையாக பிறப்பித்துள்ளனர்.” என்கிறார் சித்த மருத்துவர் வேலாயுதம்.

“டெங்குவிற்கும் முன் 2007ஆம் ஆண்டு சிக்கன் குனியா வந்தபோதே நிலவேம்பு கசாயத்தை கொடுத்து சோதித்து பார்த்தோம் அது நன்றான ஒரு விளைவை ஏற்படுத்தியது. டெங்குவுக்கான சித்த மருத்துவமாக நிலவேம்பு குடிநீரை கொடுத்தபோது அது காய்ச்சலுக்கான அறிகுறியை தவிர்த்ததே தவிர ப்ளேட்லட்சை கூட்டவில்லை எனவே நிலவேம்பு குடிநீருடன் பப்பாளி இலைச் சாறை கொடுத்தோம். ஹெ1 என்1 சமயத்தில் கபசுர குடிநீர் கொடுக்கப்பட்டது,” என்கிறார் வேலாயுதம்.

“தற்போதுள்ள கொரோனா வைரஸும் ஒரு சார்ஸ் வகையை சேர்ந்த வைரஸ் என்பதால் இதற்கும் கபசுர குடிநீர் பருகலாம் என்று பரிந்துரைத்தோம்,” என்கிறார் மருத்துவர் வேலாயுதம்.

“எனவே அம்மை நோயிலிருந்து, மஞ்சள் காமாலை, டெங்கு, சிக்கன் குனியா, ஹெச்1 என்1,



தற்போது கொரோன வரை இந்த அனைத்து வைரஸை எதிர்கொள்வதில் சித்த மருத்துவமுறை மிகவும் பலனளிக்கக்கூடியதாக உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்," என்கிறார் அவர்.

தமிழ் இலக்கியங்களில் சித்த மருத்துவக் குறிப்புகள்

எந்த ஒரு கோட்பாடும் எக்காலத்துக்கும் உரியதாக இருந்தால் அது காலங்களால் கடத்தப்படுவது இயல்பாக நடந்து கொண்டிருக்கும். அந்த வகையில் இன்றளவில் தோன்றிய ஒரு பெருந்தொற்றுக்கான மருத்துவ முறை சித்த மருத்துவ முறையில் இருந்தாலும், சங்க கால இலக்கியங்கள் மற்றும் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் பல மருத்துவக் குறிப்புகள் காணப்பட் கூறுகின்றனர் சித்த மருத்துவம் சார்ந்த நிபுணர்கள்.

"தொல்காப்பியம், சீவகசிந்தாமணியில் பல்வேறு மருத்துவக் குறிப்புகள் காணப்படுகின்றன. அறுவை சிகிச்சை குறிப்புகள், அரண்மனை வைத்தியசாலை, போர் நடக்கும்போது நோய்தொற்று ஏற்படாமல் தடுப்பது போன்ற மருத்துவக்குறிப்புகள் இந்த நூல்களில் காணப்படுகின்றன," என்கிறார் சித்த மருத்துவர் ஜெய வெங்கடேஷ்.

தமிழ் மருத்துவம் என்று கூறப்படும் சித்தமருத்துவம் அகத்தியர்க்கு சிவபெருமானால் அருளப்பட்டது. அதில் குறிப்பிட்டுள்ள மூலிகைகள் பெரும்பாலும் பொதிகை மலை உட்பட்ட மேற்கு தொடர்ச்சி மலைகளில் மட்டும் கிடைக்கும் மூலிகைகளோடு நவ உலோகங்களால் தங்கம்இரும்புவெள்ளி ஆகியவற்றுடன் பாதரசம் பயன்படுத்தி தயாரித்து நாடி பார்த்து தனிப்பட்ட மனிதனின்உடல்வாகிற்கு ஏற்றவாறு வழங்குவார்கள்.

தமிழில் அதிக புலமையும் இந்து மத கலாசாரம் மற்றும் புராண அறிவும் இருந்தால் தான் சித்தர் பாடல் பொருள் புரிந்து மருத்துவம் பார்க இயலும்.மேலும் சிகிச்சை முன் உடலில் உள்ள கழிவுகளை அகற்றி(மலம் சளி) காலை நேரத்தில் நாடி பார்த்து மருத்துவம் செய்தால் அற்புதமாக சீக்கிரம் நலம் பெறலாம்.

தமிழர் களின் பாரம்பரிய மூலிகை மருத்துவம் என்பது சித்த மருத்துவமே.இதில் பெரும் பாலான நோய் களுக்கு மூலிகை மருந்துகள் கூறப் பட்டுள்ளன.பெரும்பாலும் பழம் பெருமை க்குறிய சித்தர்களே இதனை கூறியிருக்கின்றனர்.

'உணவே மருந்து, மருந்தே உணவு' என்பது சித்தர் வாக்கு. பசியாற்றும் உணவே, உயிர்காக்கும் மருந்தாகவும் செயல்படுகிறது. இந்தக் கருத்தாக்கத்தைக் கொண்டு இயங்கிவருவது சித்த மருத்துவம். இயற்கை மருத்துவம் எனச் சொல்லப்படும் சித்த மருத்துவத்தின் மருந்துகளை சித்தர்கள் மூலிகை, தாது மற்றும் சீவப் பொருள்களில் இருந்து தயாரிக்கின்றனர்.

நமது உடல் பஞ்ச பூதக் கலவை என்பது சித்தர்களின் கருத்து. நம் உடலை வாதம் (காற்று), பித்தம் (தீ), கபம் (நீர்) ஆகிய உயிர்த்தாதுக்கள்தான் இயக்குகின்றன என்கின்றனர். இவை அனைத்தும் ஒன்று, அரை, கால் என்கிற மாத்திரை விகிதத்தில் அமைந்திருக்கும். அதன் விகிதம் மாறும்போது நோய் உண்டாகும். நாம் உண்ணும் உணவுகளின் சுவை, அவற்றின் தன்மை, வீரியம் போன்றவற்றைப் பொறுத்தும் நோய் உண்டாகக்கூடும். மேலும், சித்த மருத்துவத்தில் எல்லோருக்கும் ஒரேமாதிரியான மருத்துவமுறை கையாளப்படுவதில்லை. வாத, பித்த, கப உடலமைப்பைப் பொறுத்தே நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கப்டுகிறது.

சித்த மருத்துவத்தின் பயன்கள்

சித்த மருத்துவ முறையில் நாடி மூலமாகவும் நீர்க்குறி, நெய்க்குறி மூலமாகவும் நோயின் தன்மை மற்றும் காரணத்தை அறிந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

சிறு நோய் முதல் பெரு நோய் வரை அனைத்துக்கும் சித்த மருத்துவம் மூலம் தீர்வு உண்டு. நீரிழிவு நோய், ஆஸ்துமா, புற்றுநோய், ஆண்மைக் குறைவு, குழந்தையின்மை, தூக்கமின்மை, மஞ் சள் காமாலை, நாட்பட்ட தோள் நோய்களான சோரியாசிஸ், வெண்படை மற்றும் உடல் பருமன் என எந்தவித நோய்க்கும் சித்த மருத்துவத்தில் மருந்து உண்டு. சித்த மருத்துவத்தின் முக்கிய அம்சம், அதன் மருந்துகளால் எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படாது என்பதுதான்.

சித்தா மருந்துகளை எடுத்துக்கொள்ளும்போது, அவசரத்திற்கு மருத்துவரின் ஆலோசனைப்படி ஆங்கில மருத்துவ மருந்துகளையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

இதனால் பாதிப்பு ஏதும் ஏற்படாது. சித்தா மருந்துகளை எடுத்துக்கொண்டால் பத்தியம் இருக்க வேண்டுமா? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழும். எந்தெந்த நோய்க்கு எந்தெந்த உணவு எடுத்துக்கொள்ள வேண்டுமோ, அதையே சித்த மருத்துவத்தில் பத்தியம் என்கிறார்கள். வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்ப வளர்ச்சியுடனும், பரிசோதனை முறைகளுடனும்தான் இன்றைய சித்த மருத்துவம் இருக்கிறது. மருத்துவமனைகளாக மட்டுமன்று சித்தா ஆராய்ச்சி மையங்களும் செயல்பட்டு வருவதே சித்த மருத்துவத்தின் வளர்ச்சியைக் காட்டுகிறது.


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

# ஏன்

'அந்த நாள் அப்படி, இந்த நாள் இப்படி !

நான் பிறந்த வீட்டில் ஓர் அறை உண்டு. உபயோகத்தில் இல்லாத பல சாமான்களை அங்கே போட்டு வைத்திருப்போம். உள்ளே நான்கைந்து தகரப்பெட்டிகள், பெரிய உலக்கை, கிணற்றில் நீர் இறைக்கப் பயன்படும் இரும்பு ராட்டினம், வள்ளம் (4 படி நெல் அளப்பது), சைக்கிளுக்குக் காற்று அடிக்கும் பம்பு, பெரிய வடக்கயிறு, பாதாளக் கரண்டி (கிணற்றில் வாளி விழுந்து விட்டால் எடுக்கப் பயன்படும் கொக்கிகள் கொண்ட கருவி) இன்ன பிற பொருள்களும் உண்டு. இப்போது அந்தப் பொருள்கள் தேவையில்லாதவை. ஒரு காலத்தில் மிகவும் அவசியமானவையாக இருந்தன.

அந்த காலத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கிடையாது. தனித்தனி வீடுகள் இருக்கும். ஒவ்வொரு வீட்டுக்கும் ஓர் உறை கிணறு இருக்கும். அதில் மர ராட்டினம் அல்லது இரும்பு ராட்டினம் மாட்டி, தாம்புக் கயிற்றில் வாளியைக் கட்டி தண்ணீர் இறைப்பார்கள். புதிய கயிறாக இருந்தால் நான்கு குடம் தண்ணீர் இறைப்பதற்குள் கை சிவந்து விடும். கோடையில் தண்ணீர் ஆழத்திற்குப் போய் விடும். அப்போது வெகு சிரமத்துடன் நீர் இறைக்க வேண்டும்.

அவ்வாறு இறைக்கும் போது, சிலசமயம் வாளி அறுந்து கிணற்றில் விழுந்து விடும். அந்த வாளியை எடுக்கப் பாதாள கரண்டி உதவும். இரும்புக் கொக்கிகளில் அந்த வாளி மாட்டிக் கொள்ளும். அப்போது எளிதாக வெளியே எடுத்துவிடலாம்.

எல்லா வீடுகளிலும் இந்தப் பாதாள கரண்டி இருக்காது. ஒரு சில வீடுகளில் மட்டுமே வைத்திருப்பார்கள். சும்மா போய்க் கேட்டால் தர மாட்டார்கள். ஒரு பாத்திரத்தை எடுத்துக் கொண்டு போய் கொடுத்து விட்டு, அதை வாங்கி வர வேண்டும். தேவை முடிந்தவுடன் திருப்பிக் கொடுத்து விட்டு, செம்பை எடுத்துக் கொள்வார்கள். எவ்வளவு நெருங்கிய உறவினராக இருந்தாலும் கூட, இதில் மாற்றம் இருக்காது.இதில் ஒரு பெரிய சூட்சுமம் உள்ளது. வாங்கிப் போனவர் உடனே திருப்பிக் கொடுக்காவிட்டால், நமக்கு மறந்துவிடும். நமக்குத் தேவைப்படும் போது தேடுவோம். எப்போதாவதுதானே இதற்குத் தேவை வருகிறது? யார் இரவல் வாங்கிப் போனார்கள் என்று குழம்பிப் போவோம். அதைத் தடுக்க இந்த முன்யோசனை.

முன்பு ஒரு சிலர் சைக்கிளில் காற்று அடிக்க வீடுகளில் 'பம்ப்' வைத்திருப்பார்கள். கடைக்குப் போய் காற்று பிடித்தால் காசு கொடுக்க வேண்டும் என்பதால், தெரிந்தவர்களிடம் வாங்கி பயன்படுத்திக் கொள்வது வழக்கம். ஒரு வீட்டில் ஏணி இருந்தால், ஊரில் எல்லா வீடுகளுக்கும் அது பொதுவானது. மின்சார விளக்கு இல்லாத காலத்தில் பெட்ரமாக்ஸ் விளக்குகள் தேவைப்படும். அதையும் கேட்டு வாங்கிப் போவார்கள்.

தற்போது பலர் தமது இல்லத்தில் சிறிய விசேஷங்களுக்குக் கூட உணவை வெளியில் இருந்து தருவித்துக் கொள்கிறார்கள்; சமையல்



# மறந்தோம்?

கலைஞர்களே தங்கள் பாத்திரங்களைக் கொண்டுவந்து சமைத்துப் பரிமாறி விடுகிறார்கள். அதனால் பெரிய பெரிய அண்டாக்கள், தூக்குகள், வாயகன்ற பாத்திரங்கள், கரண்டிகள் என எவையும் தேவை இல்லை. ஆனால் முன்பெல்லாம் எல்லா வீடுகளிலும் பெரிய அளவில் சமைக்கப் பாத்திரங்கள் வைத்திருந்தார்கள். அப்படி இல்லாதவர்கள் அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் வாங்கி உபயோகித்துக் கொள்வார்கள்.

சில சமயம் சம்பந்தி வீட்டார் வருகிறார்கள் என்றால் நாற்காலி, ஜமக்காளம் போன்றவற்றையும் வாங்கிப் போவார்கள். அவ்வளவு ஏன்? ஒரு சில வீடுகளில் மட்டும் கை வைத்த மர நாற்காலி இருக்கும். யாராவது காலமாகி விட்டால் அவரை அந்த நாற்காலியில்தான் அமர வைப்பார்கள். அதற்காக அந்த நாற்காலி ஓய்வு இல்லாமல் சுற்றிக் கொண்டிருக்கும். காரியம் முடிந்ததும், கழுவிக் கொடுத்து விடுவார்கள்.




## வெ. இன்சுவை

அவசரத்துக்கு சைக்கிளை இரவல் வாங்கி செல்வார்கள். இரு சக்கிர வாகனத்தை வாங்கி செல்வார்கள். ஒரு வீட்டில் உள்ள பொருள் பலருக்கும் பயன்பட்டது. எவரும் தர மறுத்தது இல்லை. கேட்டுப் பெறுவதில் தவறு இல்லை என்ற எண்ணம் இருந்தது. திடீரென்று விருந்தினர் வந்துவிட்டால் பக்கத்து வீடுகளில் பால் கேட்டு வாங்கிக் கொள்வார்கள்; ஒரு தம்ளர் சர்க்கரை, ஒரு கரண்டி காப்பித்தூள் எல்லாமும் அப்படியே.

இப்போது எதையும் எவரிடமும் கேட்கத் தயக்கமாக உள்ளது. ஓர் இணுக்குக் கறிவேப்பிலையைக் கேட்கக்கூட கூச்சம். அது இல்லாமல் சமையல் செய்துவிடுவோம்.

செய்தித்தாள் வாங்காமல் பக்கத்து வீடுகளில் கேட்டு வாங்கி படிப்பார்கள். முன்பு ரயில் பயணங்களில் ஒருவர் பேப்பர் வாங்குவார். அவர் படிப்பதற்குள் அந்த பேப்பரின் ஒவ்வொரு பக்கமும் அடுத்த கம்பார்ட்மென்ட் வரை போய் வரும்.

சில வீடுகளில் வார இதழ், மாத இதழ்களை வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருப்பார்கள். புத்தகம் வந்தவுடன் இரவல் கேட்பவர்களும் உண்டு. வேறு வழி இல்லாமல் கொடுத்து விட்டு, அவர்கள் படித்துவிட்டுத் தரும் வரை காத்திருக்க நேரிடும். அவர்கள் 'குழந்தை அட்டையைக் கிழிந்துவிட்டது, கிறுக்கி வைத்துவிட்டது' என்று கூறி வருத்தமே படாமல் கொடுத்துவிட்டு செல்வார்கள். இரவல் தந்தவர் 'பரவாயில்லை' எனறு கூறிவிடுவார்.

மற்றவர்களிடமிருந்து புத்தங்களை இரவல் வாங்கியே,




தன் வீட்டில் ஒரு நூலகமே வைத்துள்ளவர்களும் இருக்கிறார்கள். நம் வீட்டிற்கு வரும் புத்தக வாசிப்பாளர்கள், நம் புத்தக சேமிப்பைப் பார்த்து, சில புத்தகங்களைப் படித்து விட்டுத் தருவதாகக் கேட்கிறார்கள். மறுக்க முடியாமல், தர வேண்டிய கட்டாயம். வாங்கி செல்பவர்களில் பலர், திருப்பித் தருவதில்லை. நமக்கு குறிப்பிட்ட புத்தகம் தேவைப்படும் போது இருக்காது. யாருக்குக் கொடுத்தோம் என்பதே நமக்கு மறந்து போய் இருக்கும்.




சிலர் கூச்சமே இல்லாமல் இரவல் கேட்கிறார்கள். தேர்வு எழுத வரும் மாணவர்கள் குறைந்தது இரண்டு பேனாக்களைக் கொண்டு வர வேண்டும் என்ற அடிப்படை தெரியாதா? தேர்வு எழுதிக் கொண்டிருக்கும்போது எழுந்து, 'சார், பேனாவில் மை தீர்ந்துவிட்டது' என்று சொல்ல, கண்காணிப்பாளர் வெறொரு மாணவனிடம் இருந்து பேனா வாங்கி தர வேண்டும்.

அதே போல் வங்கிக்கு வரும் போதும், அஞ்சலகத்துக்கு வரும்போதும் பேனா கொண்டு வர வேண்டும் என்பது தெரியாதா? பக்கத்தில் உள்ளவர்களிடம் பேனா இரவல் கேட்பது அசிங்கமாக இல்லையா? இது போன்ற இடங்களில் பேனாவை கட்டி வைத்திருப்பது நம் நேர்மையின்மைக்கு அடையாளம். வெளியே போகும் போது கைப்பேசியை எடுத்துச் செல்ல ஒருவரும் மறப்பதில்லை. ஆனால் பேனாவை மறந்துவிடுவார்களாம்.

அக்காலத்தில் வசதியானவர்களின் வீட்டில் மட்டுமே கேமரா இருக்கும். எங்காவது உல்லாசப் பயணம் கிளம்பும் போது அவர்களிடம் போய் கேமராவை இரவல் கேட்டு வாங்கி செல்வார்கள். ஊருக்குப் போக பெட்டி கூட வாங்கி செல்லும் வழக்கம் இருந்தது.

ஒரு வீட்டில் எந்த விசேஷம் நடந்தாலும், அக்கம் பக்கம் உள்ள வீடுகளில் இருந்து சகல உதவிகளும் கிட்டும். ஒரு நல்லது, கெட்டதுக்கு ஊரே திரண்டு விடும். எதிர்பாராத விருந்து வந்து விட்டால் பக்கத்து வீட்டில் இருந்து கொஞ்சம் சாம்பாரோ மோரோ வாங்கி சமாளித்ததும் உண்டு.

இக்கால இயந்திரத்தனமான வாழ்க்கை முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. அடுக்குமாடிக் குடியிருப்புகளில் இரண்டு வீடுகளில் இடைவெளி சில அடிகள் மட்டுமே. ஆனாலும் அவர்களின் வாயிற்கதவுகள் மூடியே இருக்கின்றன. பெரும்பாலும் அனைவரும் பூட்டிக் கொண்டு இருக்கிறார்கள். வீடுகள் கூடுகளாகி விட்டன.

இரவு முடங்கிக் கொள்ளவே பலரும் வீட்டுக்கு

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




THANK YOU




வருகிறார்கள். வாழ்க்கை மிகவும் சுருங்கிப் போய், அர்த்தமற்றதாகி வருகிறது. எல்லோரும் எதன் பின்னாலாவது ஓடிக் கொண்டே இருக்கிறோம். 'நான்' 'எனது' என்ற குறுகிய வட்டத்துக்குள் நம்மை அடைத்துக் கொள்கிறோம்.




எத்தகைய தேவை என்றாலும் உதவி கேட்கத் தயக்கம். எவர் மீதும் நம்பிக்கை வைக்க முடியவில்லை. அனுமதியோ, முன் அறிவிப்போ இல்லாமல் உறவினர் வீட்டுக்கு கூட செல்வது தவறு என்று ஆகி விட்டது. ஏதாவது முக்கியமான தேவை என்றால் மட்டுமே ஒருவரின் வீட்டுக்குச் செல்கிறோம்.

சாதாரணமாக, நலம் விசாரிப்பதற்காக எவர் வீட்டுக்கும் போகும் பழக்கம் அறவே இல்லாமல் போய்விட்டது. நாம் ஒவ்வொருவரும் தனித்தனி தீவில் வாழ்வதைப் போல் வாழ்கிறோம். எவரிடமும் உரிமை எடுத்துக் கொள்ள முடியவில்லை. எதையும் கேட்டு தர்மசங்கடத்தில் தள்ளுவதை நாம் விரும்புவது இல்லை.

வாழ்க்கை முறை மாறிவிட்டதால் அன்றிருந்த 'ஒட்டுதல்' இன்று இல்லையோ என தோன்றுகிறது. அன்று சின்னச் சின்ன உதவிகளைப் பெற்றும், கொடுத்தும் எளிமையாக வாழ்ந்தார்கள். ஆனால் இன்றோ பக்கத்து வீட்டில் இருந்து எந்த அவசரத் தேவைக்கும் ஒரு சிறு பொருளைக் கூட இரவல் வாங்குவதில்லை.

வெகு அரிதாக சில நட்புகள், அரும்பி, மலர்ந்து மணம் பரப்புகின்றன. நகரத்தில் வசிக்கும் ஒவ்வொருவரும் பிழைப்புக்காக இங்கே வந்து வாழ்பவர்கள். உறவுகள் ஊரில் இருக்க, இங்கே தனிமைத் தவம் இயற்றிக் கொண்டிருப்பவர்கள். அவசரத் தேவைக்கு அக்கம்பக்கத்தினர் மட்டுமே ஓடி வந்து உதவ முடியும். அவர்கள்தான் சுற்றம் எனக் கருதி உள்ளார்ந்த அன்புடன் பழக வேண்டும். அப்போதுதான் அவர்களும் உற்றுழி உதவுவார்கள். முன் கை நீண்டால்தான் முழங்கை நீளும்.

அற்பக் காரணங்களுக்காக எதிர் வீட்டுக்காரர்களுடனும், பக்கத்து வீட்டுக் காரர்களுடனும் பகையை வளர்த்துக் கொள்ளாமல் உறவை வளர்த்துக் கொண்டால் தேவையற்ற மன உளைச்சலும், மன இறுக்கமும் தளர்ந்து போகும். வாழ்க்கை பசுமையைப் பூசிக் கொள்ளும். வாழ்கின்ற நாளெல்லாம் திருநாள் ஆகி விடும்.

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




thank you!

thank you!

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## அடியெடுத்து வைத்த


















# ஒவ்வொரு ஆண்டிலும்...


March 2016
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
7


March 2017
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
8
நூற்றாண்டு
நாயகன்


March 2018
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
9
வித்தக வள்ளல்


March 2019
10
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு


March 2020
11
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு


March 2021
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
12

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## அடியெடுத்து வைத்த






# ஒவ்வொரு ஆண்டிலும்...



# தமிழ் 2024

**நற்றமிழரின் நாடித்துடிப்பு**

## JANUARY




## FEBRUARY




## MARCH




## APRIL

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## MAY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

## JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## AUGUST

| | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email: editor@ithamil.com



தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
15 Years
ANNIVERSARY
Thank You!